
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
166/GU4/73
15 DEC 1973
GAZETTEER UNIT, MADRAS-8
171
Dec '73



தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



சென்னைத் திருமயிலை அருள்திரு. கற்பகாம்பாள் கலியாண மண்டபத்தில் நிகழ்ந்த தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு வருகைதந்த நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர். கலைஞர் அவர்களுக்குச் சங்கத் தலைவர் தம்பி அ. தேவேந்திரன், M.L.A., அவர்கள் மாலைசூட்டி வரவேற்றல்.

## பொருளடக்கம்


1. திருமுருகாற்றுப்படை
2. செய்திச் சுருக்கம்
3. கொழுமம்—நித்தம் நின்ருடுவார்
4. குறியீடு
5. சன்மார்க்கத்துக்கு ஒரு சாரநாத்
6. சேவூர்க் கல்வெட்டு
7. அப்பர் தேவாரத்தில் ஆலயங்கள்
8. உலகியலும், மெய்ந்நெறியும்
9. திவ்வியப் பிரபந்தத் திருப்பாசுரங்கள்
10. கோயில் வழிபாடு
11. தாயுமானவ அடிகள்
12. சம்பந்தர்தமிழில் சாத்திரநோக்கு
13. மதிப்புரை
14. மனித வாழ்வியலின் சொல்லோவியம்


### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவருமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




மாலை 16 | பிரமாதீச —மார்கழி—டிசம்பர், 1973 | மணி 3

# திருமுருகாற்றுப்படை*

(கருத்துத் தொகுப்புச் சுருக்கம்)

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

தமிழிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்பர். அவற்றுள் ஆற்றுப்படை என்பதும் ஒன்று. ஆற்றுப்படை என்னும் சொல், வழிப்படுத்துதல், வழிகூறி அனுப்பி வைத்தல் எனப் பொருள்படும். (ஆறு+படு+ஐ). சிறு பான்மை வருவித்தல் எனவும் அதற்குப் பொருள் உண்டு. "முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியன் நகர்" என்னும் வரி, முருகனை வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்திய அகன்ற நகரம் (கோயில்) எனப் பொருள் படுதல் காணலாம்.

**ஆற்றுப்படை :**

ஆற்றுப்படை என்னும் நூல் வகையானது, புலவர் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, பாணர் ஆற்றுப்படை, விறலி ஆற்றுப்படை எனப்பல வகைப்படும். ஓர் அரசன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசு பெற்றுத் திரும்பி வரும் புலன் ஒருவன், வழியில் தன்னை ஒத்த மற்றொரு புலவனைச் சந்தித்து, "யான் இன்ன வள்ளலிடம் சென்றேன்; இன்ன இடத்தில் அவனைக் கண்டேன்; அவனை இவ்வி்வாறு பாடினேன்; அவனுடைய இயல்புகள் இத்தகையவை; இத்துணைப்பொருள்களை அவன் எனக்குப் பரிசிலாக வழங்கினான்; நீயும் அவனிடத்துச் சென்று பாடினால், பரிசில் வழங்கப் பெறுவாய்" என்று, அவ்வள்ளலைச் சென்று காண்பதற்குரிய வழி முதலிய விவரங்களை யெல்லாம் விளக்கமாகக் கூறி அனுப்புவதாகப் பாடப் பெறுவது, புலவர் ஆற்றுப்படை எனப் படும். இவ்வாறே கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்பவரும், தமக்குள் ஒருவர் மற்றொருவரை ஆற்றுப்படுத்திக் கொள்ளும் முறையில் பாடப்பெறும் நூல்கள், அவரவர்களின் பெயர்களால் வழங்கும்.

---

*சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் நிகழ்ந்த "முருகன் அறுநாட் பெருவிழா"வில், "நக்கீரர் கண்ட நற்காட்சி" என்னும் தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி எழுதிய சுருக்கம் (27-10-73).

—ஆசிரியர்

148716. JL ஜனவரி 24, 1959/TIC

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்னபக்கம்......''

என்பது, ஆற்றுப்படை நூல்களுக்குத் தொல்காப்பியப் புறத்திணை இயல் வகுக்கும் இலக்கணம் ஆகும்.

## திருமுருகாற்றுப்படை :

ஆற்றுப்படை நூல்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்தது திருமுருகாற்றுப்படை எனலாம். ஆதல் பற்றியே. பத்துப்பாட்டு என்னும் சங்கத்தொகை நூலில், பிற எல்லாப் பாடல்களுக்கும் முன்னதாக, முதற்கண் திருமுருகாற்றுப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது புலவர் ஆற்றுப்படை எனப்பெயர் வழங்குதற்குரியதே ஆயினும், பொருளின் முதன்மையும் சிறப்பும் பற்றி முருகாற்றுப்படை யெனவே தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. நம்மை அனைய அரசனோ அல்லது வள்ளலோ ஆகிய மனிதரிடத்து ஆற்றுப்படுத்தும் முறையில் பாடாமல், எல்லாம் வல்ல இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்தும் நிலையில், இதனை முதன் முதலாகப் பாடியருளிய ஆசிரியர் **நக்கீரர்** பெருமானின் கவிதைத் திறம், ஒரு சிறந்த புரட்சிப் புதுமைச் செயல் எனப் போற்றிப் புகழ்தற்குரியதாகும். சங்கத் தமிழ்த் தலைமைப் புலவராகிய நக்கீரரின் தமிழ்ப் புலமைக்கும், தலைசிறந்த சமய உணர்வுக்கும், இந்நூல் ஒப்புயர்வற்ற சான்றாக இலங்குகின்றது. முருகன் அருளைப் பெற்ற அருளாளன் ஒருவன், அதனைப் பெறுதான் ஒருவனுக்குப் பெறும் இயல்பும் முறையும் கூறி, அவனை முருகனிடத்து வழிப்படுத்தும் முறையில், இந்நூல் பாடப்பெற்றுள்ளது.

## கவிஞரும் கவிதையும் :

கவிஞர்கள் கருத்துவளமும் கற்பனையுள்ளமும் மிக்கவர்கள்; சொல்லையும் பொருளையும் திறம்பட ஆராய்ந்து வழங்க வல்லவர்கள்; அவர்கள் அமைக்கும் ஒவ்வொரு சொல்லும் பொருள் நலம் சிறந்து, பல குறிப்புக்களை உடையதாக விளங்கும். நம்மைப்போல அவர்களுக்குச் சொற் பஞ்சமோ, அச்சொற்களைக் கொண்டு உணர்த்தும் கருத்துப் பஞ்சமோ, நேர்வதில்லை. 'எனைவைத்தி எனைவைத்தி' எனச் சொற்கள் இடையிடை நின்று இரந்து' அவர்களை வேண்டிக்கொள்ளும்; கருத்துக்களோ ஒன்றினொன்று முந்திக் கொண்டு அடுக்கு அடுக்காகப் பொங்கியெழுந்து, தங்கு தடையின்றிக் கரை புரண்டு ஓடிவரும்; அவர்கள் ஒரு பொருளைப்பற்றிச் சொல்ல நினைக்கும் போதே, அதன் தொடர்புடைய எத்தனையோ பலவகையான சார்புக்கருத்துக்கள் (Association of Ideas) ஏராளமாக இனிது எளிவந்து முன் நிற்கும். இத்தகைய இயல்புகள் நல்லிசைப் புலவர்கள் அனைவருக்குமே உரிய தனிப்பெரும் சிறப்பியல்பாகும். ஆதலின் அவ்வியல்பை ஆசிரியர் நக்கீரனாரின் திருமுருகாற்றுப்படையில் மிகுதியாகக் காண்கின்றோம்.

## சார்புக் கருத்துக்கள்:

இத்தகைய பகுதிகளைப் பொதுவாகக் கருதுவோர்க்கு, நக்கீரர் தாம் எடுத்துக்கொண்ட முதன்மைப் பொருளை விடுத்து, வேறொரு அயன்மைப் பொருளை வெற்றெனத் தொடுத்திருப்பது போலத் தோன்றக் கூடும். ஆயினும், அவைகள் ஒரு வகையில் நக்கீரரின் கற்பனைக் கருத்து வளனையும், எதனையும் கூர்ந்து நோக்கும் அவர்தம் நுண் அறிவினையும், தாம் கூர்ந்து நோக்கி ஆய்ந்து உணர்ந்ததனை, உள்ளவாறே குறையற நிரல்பட எடுத்துத் தமக்கே யுரிய முறையிற் பாடி விளக்கவல்ல அரும்பெருந் திறனையும், பிறவற்றையும் அறிவிப்பனவாகும் எனலாம். இங்ஙனம் பாடிச் செல்லுதல் ஒரு வகைக் கவிதைக் கலைத்திறனே யாகும்.

அரியணை வீற்றிருக்கும் அரசனைச் சுற்றி, அவன்தன் அமைச்சர் முதலிய பல்வகை அரசியற் சுற்றத்தினர் அமர்ந்திருப்பதுபோல, ஒரு கவிதையின்கண் கருக்கொண்ட முதற் பொருளானது, ஏனைப்பல சார்புப் பொருள்கள் தன்னைச் சூழ்ந்து சிறப்பித்து நிற்கும் வகையில் விளங்கும். வான்மீன்கள் பல சூழ இருந்தால் அல்லாமல், பான்மதி விளக்கம் பெற்றுச் சிறவாமைபோல, சார்புப் பொருள்கள் இன்றி, ஒரு கவிதையின் முதற்பொருள் சிறப்புறுதல் இயலாது. அதனால்தான், ஆசிரியர் நக்கீரர் தாம் கூற முற்படும் ஒரு கருத்தோடு, அதற்குத் தொடர்புடைய வேறு பல கருத்துக்களையும் சேர்த்தியைத்துப் பாடியருள்கின்றார். ஜான் மில்ட்டன் (John Milton) போன்ற மேலைநாட்டுப் பெருங்கவிஞர்களிடத்திலும் இவ்வியல்பைக்

N73 • 16'S



காணலாம் (1). இம்முறையில் திருமுருகாற்றுப் படையில் பற்பல சுவையான பகுதிகள், இணைந்து இயைந்து வருகின்றன. அதன் பொருட்டிறனை இங்கு இயன்றவரை சுருக்கித் தொகுத்துக் காண்போம்.

## (1) திருப்பரங் குன்றம் :

உலகத்திலுள்ள உயிர்த் தொகுதிகள் அனைத்தும்மகிழும்படி எழுந்து, மேருமலையை வலமாகச் சுற்றி வருபவன் சூரியன். அவனைப் பல சமயத்தவர்களும் புகழ்ந்து போற்றுவர். உதய சூரியனின் தோற்றம், எவருளத்தையும் கவர்ந்து தெய்விகவுணர்ச்சியை தோற்றுவிக்கும் (2). அத்தகைய சூரியன், கடலின்கண் உதயம்செய்தாற் போல, விளங்குபவன் முருகன்.

நீல நிறம் வாய்ந்தது கடல்; அதுபோல முருகன் ஏறிவரும் மயில் நீலநிறமுடையதாகத் திகழ்கின்றது. சூரியன் சிவந்த நிறம் உடையவனாக இருக்கின்றான்; அதுபோல முருகனும் செந்நிறம் உடையவனாகத் திக்ழ்கின்றான். சூரியன் உலகின் புற இருளை நீக்குகின்றான்; அதுபோல முருகன் தன்னை வழிபடும் அடியவர் தம் அக இருளைப் போக்கியருள்கின்றான். சூரியனுடைய கதிர்கள் ஒளியைத் தந்து உயிர்களுக்கு நலம் செய்கின்றன. அதுபோல முருகனின் திருவருளும் உயிர்களுக்கு நலம் பல விளைத்துப் பாதுகாத்து அருள்கின்றது. சூரியனைப் பல சமயத்தவர்களும்போற்றுதல் போல, முருகனையும் பல சமயத்தவரும் விரும்பிப் போற்றுவர்.

இவ்வாற்றால், முருகன் உலகுக்கு ஒரு பெரும் ஞான சூரியனாக, எங்கும் என்றும் நீக்கமின்றிப் பரவிச் சுடர்விடும் ஒப்பற்ற ஒளி வடிவமாகத் திகழ்கின்றான்.

அவனுடைய திருவடிகள் அழகும் வலிமையும் உடையவை; தம்மை வந்து புகலடைபவர்களின் தீவினையையும் அறியாமையையும் போக்கிக் காத்தருள்பவை. அவனுடைய திருக்கைகள் இடியைப்போலப் பகைவர்களை அழிக்கவல்லன. அவன் குற்றமற்ற கற்பினையும், ஒளிபொருந்திய நெற்றியினையும் உடைய தெய்வயானையின் கணவன். வெண்கடம்ப மரத்தின் பூவால், தேர்ச்சக்கரம் போலத் தொடுக்கப்பெற்ற குளிர்ந்த உருண்ட மலர் மாலைகள், அவன் மார்பில் அசைந்து கொண்டிருக்கும்.

### சூரர மகளிர் :

பெரிய மூங்கில்கள் ஓங்கி வளரும் வானளாவிய மலையில், ஒரு சோலை உள்ளது. அங்கே தம் தெய்வத்தன்மையால் அச்சத்தை விளைவிக்கின்ற வானுலகப் பெண்கள் பலரும் கூடுவர். அழகு விளங்கும் மலை இடமெல்லாம் எதிரொலி எழும்படியாகப் பாடி ஆடுவர். அவர்கள் கிண்கிணி சூழ்ந்த ஒளி பொருந்திய சிவந்த சிறிய பாதங்களையும், திரண்ட கால்களையும், வளைந்து ஒடுங்கிய இடையையும் உடையவர்கள். அவர்களின் தோள்கள் மூங்கிலைப் போன்றிருக்கும். அவர்களின்மெல்லிய பூந்துகில், இந்திர கோபப் பூச்சியின் நிறத்தைப் போல இயல்பாகவே சிவந்து விளங்கும். அது செயற்கையாகச் சாயம் தோய்க்கப்பெறாமல், இயற்கையாகவே செந்நிறம் வாய்ந்தது. பல மணிகள் கோத்ததும் ஏழு வடங்கள் கொண்டதும் ஆகிய மேகலையை அவர்கள் அரையில் அணிந்திருப்பார்கள். அவர்களின் அழகு இயற்கையாகவே அமைந்ததாகும். எவருடைய கையினாலும் ஒப்பனையினால் செயற்கையாகச் செய்யப்பட்டதன்று அது. அவர்களால் அணியப்பெற்ற ஒளி மிகுந்த அணிகலன்கள் சாம்பூநதம் என்றபொன்னால் இயன்றவை. அவர்களின் மேனி குற்றமற்றது. அதன் மினுமினுப்பும் ஒளியும் நெடுந்தூரத்தைக் கடந்து செல்லும் தன்மை யுடையன.

இச்சூரரமகளிர்க்குத் துணைசெய்யும் தோழிப் பெண்கள் சிலருளர். அவர்கள், கோதி வகிர்ந்து கடைகுழன்று பளபளப்பு மிக்க, சூரர மகளிரின் கூந்தலில், வெட்சிப் பூக்களை விடு பூவாகத் தூவுகின்றனர்; அதற்கு நடுவே

---

(1) "The most striking characteristic of the poetry of Milton is the extreme remoteress of the association by means of which it acts on the reader."

—THOMAS BABINGTON MACAULAY, JOHN MILTON.

(2) "Ah, Mademe!", Rosseau writes to an aristocratic lady, "Sometimes in the privacy of my study, with my hands pressed tight over my eyes or in the darkness of the night, I am of opinion that there is no God. But look younder: the rising of the sun, as it scatters the mists that Cover the earth and lays bare the wondrous glittering scene of nature disperses at the same moment all cloud from my soul. I find my faith again, and my God, and my belief in Him. I admire and adore Him, and I prostrate myself in His Presence."

—Dr. BERTRAND RUSSEL, HISTORY of WESTERN PHILOSOPHY, P.66,

குவளைப்பூவின் இதழ்களைக் கிள்ளி இட்டு முடிக்கின்றனர். சீதேவி என்னும் தெய்வ உத்தியையும், வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்த அணிகலன்களையும், தலையில் வைத்தற்குரிய இடத்தே வைக்கின்றனர்; நெற்றியிலே மணங் கமழும் திலகம் தீட்டுகின்றனர்; அதன்கண் வந்து தங்கும்படி சுறுமீனின் திறந்த வாயைப்போன்ற அணிகலன்களை வைக்கின்றனர்; நன்றாக முடித்த கொண்டையில் செண்பகப் பூவைச் செருகுகின்றனர். அதன் மேலே மருதமலர்க் கொத்துக்களை இடுகின்றனர்; அதற்கும் மேலே செந்நிற அரும்புகளைச் சேர்த்துக் கட்டிய மாலையை வளைவாகச் சூட்டுகின்றனர்; அசோகம் தளிர்களைத் திருத்திக் காதுகளில் தூக்கின்றனர்; அத் தளிர்கள் மார்பிற் படிந்து அழகுற அசைந்து விளங்கும்; அம்மார்பில் சந்தனக் குழம்பை நிறையப் பூசி, அதன் மீது வேங்கை மலரின் மகரந்தத்தை அப்புவர்; விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி ஒருவர் மேல் ஒருவர் தெறித்து அழகுற விளையாடுவர்; முருகனின் கோழிக் கொடி ஓங்கி நிலை பெறுக என்று கூறி வாழ்த்துவர்.

இத்தகைய சூரர மகளிர் விளையாடும் சோலைகளில் உள்ள காந்தட் பூக்களாலான மாலை, முருகனின் திருமுடியில் விளங்கிக் கொண்டிருக்கும். அவன் தன்னுடைய திருமுடியில் காந்தட் பூக்களால் ஆகிய பெரிய குளிர்ந்த மாலைகளை அணிந்து கொண்டிருப்பான். அக் காந்தட் பூக்கள் வண்டுகள் மொய்க்கப் பெறாத சிறப்புடையவை.

### பேய்மகள் :

முருகனின் வேற்படை, கடலின் உள்ளே பாய்ந்து சென்று அங்கே ஒளிந்து நின்ற சூரபதுமனைத் தடிந்தது. மேலும், போரில் முனைந்து சென்று அவனது துணைவர்களாகிய அவுணர்களை யெல்லாம்தோல்வியுறச்செய்து அழித்தது. அங்ஙனம் போர் நிகழ்ந்த களத்தில், பேய்கள் பல கூடிப் பிணங்களைத் தின்று களித்துத் துணங்கைக் கூத்து ஆடுகின்றன; அப் பெண் பேய்கள் காய்ந்த தலைமயிரை உடையன; வரிசையற்றுப் பிறழ்ந்த பற்களை உடையன; அவைகளின் வாய் பெரியதாய்த் திறந்திருக்கும். அவற்றின் விழிகள் சுழன்று கொண்டு ஊன் வடிந்து கொடும் பார்வை வாய்ந்திருக்கும்; அவற்றின் காதுகள் நீண்டு மார்பு வரையில் தொங்கியிருக்கும்; அக்காதுகளில் பிதுங்கிய கண்களை உடைய ஆந்தையும், நச்சுத் தன்மை மிக்க பாம்புகளும் தொங்கிக் கொண்டு கிடக்கும்; இரத்தம் படிந்து, வளைந்து கூர்மையான நகங்களை உடைய விரல்களினால், இறந்துபட்ட அவுணர்களின் பிணத் தலைகளில் உள்ள கண்களைத் தோண்டிப் புசிக்கும்; பின்னர் அத் தலைகளைத் தம் கைகளில் ஏந்தி அவற்றின் நிணத்தைத் தின்னும்; அங்ஙனம் தின்ற மகிழ்வால் அச்சமும் அருவருப்பும் தோன்றும்படி தம்முடைய தோள்களை அசைத்துக் கொண்டு வெறி மிகுத்துத் துணங்கை என்னும் இழிந்த பேய்க் கூத்தை ஆடி அவைகள் இன்புறும்.

இங்ஙனம் பிணம் தின்னும் பேய்கள் மகிழ்ந்து துணங்கைக் கூத்து ஆடும்படி, முருகன் சூரபதுமனைப் போர்க் களத்தில் வென்றான். முருகனுடைய வேல், உலகிற் பழமையாக உள்ள கடலும் நிலைகுலையும்படி அதனுள்ளே புகுந்து, அங்கே ஒளிந்து கொண்டிருந்த சூரபதுமனைப் பிளந்தது. அதனால் குதிரைத் தலையும் மனித வுடலும் ஆகிய இரண்டு பெரிய வடிவங்கள் ஒன்றாக அமைந்த, அச்சூரபதுமனுடைய உடல் அறுபட்டு வேறுவேறு துண்டங்கள் ஆயின. கவிழ்ந்து தொங்கும் பூங்கொத்துக்களையுடைய மாமரமாகச் சூரபதுமன் வடிவெடுத்து வந்தான். அப்போது முருகன் அவுணர்களின் மிக்க வலிமை அழியும்படியும், அவர்களுக்கு அச்சம் தோன்றும்படியும் போரிட்டு, மாமரமாக நின்ற சூரபதுமனைத் தடிந்தான்.

### கூடலும் குன்றமும் :

மதுரைக்குக் கூடல் என்று ஒரு பெயர் உண்டு. அக்கூடல் மாநகரம் மதில் சூழப் பெற்றது. அம்மதில்களைச் சேண் உயர்ந்து ஓங்கும் நெடுங்கொடிகள் அணி செய்கின்றன. அவைகள் போரிற் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவும், போரைப் பெற விரும்புதற்கு அறிகுறியாகவும் எடுக்கப் பெற்றவை. அந்நகரின் மதில் வாயில்களில், போருக்கு வரும் பகைவர்களை ஏளனம் செய்யும் முறையில், அவர்களைப் பெண்கள் போலக் கோலம் கொள்ளச் செய்து, பெண்களின் நிலையில் அவர்கள் விளையாடும்பொருட்டு, நூலால் செய்யப் பெற்ற பந்தும் பொம்மைகளும் தொங்க விட்டு வைக்கப் பெற்றிருக்கும். எதிர்த்துப் போர் செய்வதற்குத் துணிவுடைய பகைவர்கள் எவரும் கிடைக்காமையினால், போரில்லாத மதில் வாயில்களை உடையது அக் கூடல் மாநகர். மேலும், அந்நகரின் கடைத்

தெருக்களில் களவு பொய், ஏமாற்றம் முதலிய குற்றங்கள் நிகழமாட்டா. அங்குச் செல்வப் பெருக்கமும், பணப்புழக்கமும் மிகுதிப் பட்டுச் சிறந்து விளங்குகின்றன. அதனால், திருமகளே அரசு வீற்றிருப்பது போன்ற சிறப்பை உடையன, அக் கடைத் தெருக்கள். பல வளங்கள் கூடியிருத்தலாலும், சங்கப் புலவர்கள் கூடித் தமிழைஆராய்ந்ததனுலும், அந்நகர்க்குக் கூடல் என்று பெயர் அமைந்தது. அந்நகரின் தெருக்கள் மிக நீண்டனவாய் விளங்கும். அவற்றில் பெரிய மாட மாளிகைகள் நிறைந்திருக்கும்.

இத்தகைய கூடல் மாநகரின் மேற்குத் திசையில் திருப்பரங்குன்றம் உள்ளது. அதனைச் சுற்றிச் சேறு நிறைந்த வயல்கள் உள்ளன. அங்கே தாமரை, நெய்தல் முதலிய மலர்கள் அழகுறப் பூத்துள்ளன. வண்டின் கூட்டங்கள் நாளெல்லாம் தாமரை மலரில் தேனை உண்டு களித்து மயங்குகின்றன. அதனால் மாலைக் காலத்தில் சூரியன் மறையுங்கால், தாமரை மலர்கள் குவியத் தொடங்குவதனை அறியாமல், அவற்றிலேயே மயங்கி விழுந்து கிடக்கும் வண்டுகள், இரவெல்லாம் அம்மலர்களிலேயே உறங்க நேருகின்றது. மறுநாள் வைகறையில் தாமரை மலர்கள் மீண்டும் மலரத் தொடங்கும் போதே அவ்வண்டுகள் வெளியில் வர முடிகிறது. அப்போது அவைகள் வெளிவந்து, அவ்வைகறையில் அருகே உள்ள நெய்தற் பூக்களிலும், சுனைப் பூக்களிலும் சென்று ஊதி இன்புறுகின்றன. இத்தகைய வளப்பம் சான்றது திருப்பரங்குன்றம். இத்தகைய சிறப்பு மிக்க திருப்பரங்குன்றத்தில் முருகன் பெரிதும் விருப்பம் கொண்டு எழுந்தருளி விளங்கி வருகின்றான்.

### 2. திருச்சீரலைவாய் :

முருகன், திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில், களிற்றூர்திப் பெருமான் (கஜ வாகனர்) என்னும் நிலையில், பிணிமுகம் என்னும் யானையை ஊர்தியாகக் கொண்டு ஒரோவழி விளங்குகின்றான். அவ் யானையின் நெற்றியானது வரிகளை உடையது. அங்குசத்தாற் குத்தப் பெற்று ஆழ்ந்த வடுக்களை உடையது.

வாடாத பொன்னரி மாலையும், ஓடை என்னும் நெற்றிப் பட்டமும், அதன் மத்தகத்தில் அசைந்து கொண்டிருக்கின்றன. அதன் இரு பக்கங்களிலும் மாறி மாறி ஒலிக்கும் மணிகள் தாழ்ந்து கிடக்கின்றன. அது காற்றெழுந்தாற் போன்று வேகமான நடையை உடையது. எதிர்க்க முடியாத கூற்றுவனைப் போன்ற ஆற்றல் உடையது. முருகன் பிணிமுகம் என்னும் அந்த யானையின் மத்தகத்தில், பொன்னரி மாலையும் பட்டமும் கிடந்து அசையும் படி, ஏறி அமர்ந்து இருப்பன், தாமம் முகுடம் பதுமம் கிம்புரி கோடகம் என்னும் ஐந்துவகை உறுப்புகளையும், நிரம்பிய வேலைப்பாட்டினையும் உடைய அவனது திருமுடியில், வெவ்வேறு நிறங்களையுடைய, அழகிய மணிகள் மின்னலைப் போல ஒளிவிட்டு அழகுபடுத்தும். அவனதுமுகம் நிறை வெண்மதியைப் போன்றது. அவனது காதுகளில் ஒளிவிட்டு அசைந்து விளங்கும் பொற்குண்டலங்கள், நிறைவெண்மதியைச் சூழ்ந்து, அதன் அருகில் விளங்கும் விண்மீன்களைப் போன்று திகழ்கின்றன.

### ஆறுமுகங்கள் :

வருத்தங்களைப் பொருட்படுத்தாதகொள்கையுடன், தமது தவ ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற, சிறந்த ஞானிகளின் உள்ளத்திற் பொருந்தி, முருகனது ஒளிமிக்க அழகிய திருமுகங்கள் தோன்றும். அம்முகங்களுள் ஒன்று, இருள் மிக்க இப்பெரிய உலகமானது குற்றமின்றி விளங்கும்படி பல ஒளிக் கதிர்களைத் தோற்றுவிக்கும் (1); ஒருமுகம், அன்பர்கள் துதிக்க, அவர்களுக்கு இணங்கி இனிதாகத் தோன்றி, அவர்கள்பால் உள்ள காதலால் மகிழ்ந்து, அன்போடு வரம் கொடுக்கும் (2); ஒரு முகம், மந்திரங்களை உடைய வேத விதிகளினின்று வழுவாத அந்தணர்களின் வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி கடைக்கண் நோக்கம் செலுத்தும் (3); ஒருமுகம், மக்களின் அறிவினுள் அகப்படாது எஞ்சி நின்ற பொருள்களையெல்லாம், உலகம் இன்புறும்படியாக உணர்த்தி, கலைநிரம்பிய முழு வெண்திங்கள் போலத் திசைகளை எல்லாம் ஒளிபெறச் செய்து கொண்டிருக்கும் (4); ஒருமுகம் பகைவர்களை அழித்து, அவர்கள் பிறர் மேற் செய்யும் போரைக் கெடுத்து,நீங்காத கோபம் கொண்ட நெஞ்சத்துடன் போர்க்களத்தை விரும்பும் (5); ஒருமுகம் கொடி போன்ற இடையை உடையவளும், குறவர்களின் அழகிய இளம்பெண்ணும் ஆகு உள்ள வள்ளியம்மையுடன் மகிழ்ச்சியுற்று இருத்தலை விரும்பி இருக்கும் (6). இங்ஙனம், முருகனின் ஆறு திருமுகங்களும் அவ்வவற்றிற்

குரிய தொழில்களை முறைப்படச் செய்து கொண்டு வருகின்றன.

**பன்னிரு கைகள் :**

முருகனின் அழகிய பெரிய மார்பில் மாலைகள் தாழ்ந்து கிடக்கும்; உத்தம இயல்பிற்குரிய அடையாளங்களாகிய வரிகள், அம்மார்பில் தோள்கள் வரையிற் படர்ந்து நீண்டிருக்கும். அந்தத் தோள்கள் மிக்க வலிமையுடையன வாய், ஒளி பொருந்திப் புகழ் நிறைந்து வளைந்தும் நிமிர்ந்தும் இருக்கும். அவன் கைகளில் ஒன்று, உயிர்களைச் சூரிய வெப்பத்தினின்று காப்பதற்காக வானத்திற் செல்லுகின்ற தெய்வ முனிவர்களுக்குப் பாதுகாவலாக ஏந்தியது. (1) ஒருகை இடுப்பிலே வைத்தது. (2) ஒரு கை அழகிய ஆடையணிந்த தொடையின் மேலே கிடந்தது (3) ஒரு கை, அங்குசத்தைப் பிடித்துச் செல்லுவது. (4) ஒரு கை, கேடயத்தைப் பிடித்துள்ளது (5) ஒரு கை, வேலைச் சுழற்றிக் கொண்டிருப்பது. (6) ஒரு கை மார்பிலே தங்கி விளங்குவது (7) ஒரு கை, மாலையோடு அழகுறத் தோன்றுவது (8) ஒரு கை, கொடியோடு மேலே சுழன்று கொண்டிருப்பது (9) ஒரு கை, இனிய ஓசையுடன் ஒலிக்கின்ற மணியை மாறி மாறி ஒலிக்கச் செய்வது (10) ஒரு கை, மேகத்தினின்று மழைத்துளியைப் பொழியச் செய்வது (11) ஒரு கை, தெய்வ உலகப் பெண்களுக்கு மண மாலையைச் சூட்டுவது (12). இவ்வாறு முருகனின் பன்னிரண்டு திருக்கைகளும், தத்தமக்குரிய முறையில் தொழில் செய்து கொண்டிருக்கின்றன.

வான துந்துபி ஒலிக்கவும், ஊது கொம்புகள் இசைக்கவும், வெண் சங்குகள் முழங்கவும், இடியேறு போன்ற முரசம் அதிரவும், மயிலானது வெற்றிக் கொடியின் மீது இருந்து அகவவும், வான வழியாக விரைவாகச் செல்லுதலை மேற்கொண்டு, முருகன் திருச்செந்தூரிலே வந்து தங்குவான்.

## (3) திருவாவினன்குடி :

முருகப்பெருமான், சூரபதுமனை வென்று, தேவர்களைச் சிறை விடுவித்து, இந்திரன் மகள் ஆகிய தெய்வயானை அம்மையாரை மணந்த பொழுது, தம் கையில் உள்ள வேற்படையை நோக்கி, "நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல்" என்று கூறினார். அப்போது அண்மையிலிருந்த பிரமதேவன், 'இவ்வேலுக்கு இத்தகைய சிறப்பினை யானே அளித்தேன்' என்றான். அது கேட்ட முருகப்பிரான், "நம் கை வேலுக்கு ஆற்றல் அளிப்பவன் நீயோ?" எனச் சினந்து "இங்ஙனம் செருக்குற்றுக் கூறிய நீ மண்ணுலகம் சென்று பிறந்து மாழ்குக" என வெஞ்சொற் கூறினார். இங்ஙனம் பிரமதேவன் சாபம் இடப்பெற்றதன் விளைவாகப், படைப்பு முதலிய தொழில்கள் நிகழாமற் போனதனால் ஏற்பட்ட தங்கள் குறைதீரும் பொருட்டுத், திருமால் சிவபிரான் முதலியோர், ஆதித்தர் பன்னிருவர் (12), உருத்திரர் பதினொருவர் (11), வசுக்கள் எண்மர் (8), மருத்துவர் இருவர் (2) ஆகிய முப்பத்து முக்கோடி தேவர்களோடும், தேவர் அசுரர் முனிவர் கின்னரர் இயக்கர் இராக்கதர் கந்தருவர் சித்தர் சாரணர் வித்தியாதரர் நாகர் பூதர் வேதாளர் தாராகணர் வானரர் போகபூமியோர் என்னும் பதினெண் வகைத் தேவகணங்களோடும், வான் வழியாக முருகனைக் காண வந்தார்கள்.

**முனிவர்கள் :**

அவர்கள் தாமே முதலிற் சென்று முருகனைக் காண அஞ்சி, முருகனின் அருளுக்குரிய சிறந்த முனிவர்களை முன்னே செல்லச் செய்தனர். அம் முனிவர்கள் மரவுரியைத் தைத்து உடையாக அணிந்தவர்கள். வலம்புரிச் சங்கு போல் அழகாய் முடிக்கப்பட்ட, வெண்மையான நரைத்த முடியை உடையவர்கள். மாசற்ற ஒளிமிகுந்த மேனியை உடையவர்கள். மான் தோலைப் போர்த்திருப்பவர்கள். தசை இல்லாத மார்பினையும், எலும்புகள் மேலெழுந்து தோன்றுகின்ற உடம்பையும் உடையவர்கள். விரதமிருந்து பலநாட்களுக்கு ஒருமுறை உணவு கொள்ளும் இயல்புடையவர்கள். பகையும் கோபமும் நீங்கிய மனத்தினர். எல்லாவற்றையும் கற்றவரும் அளந்தறிய முடியாத பேரறிவை உடையவர்கள். கற்றவர்களுக்கெல்லாம் எல்லையாய் இருக்கும் தலைமைப்பாடு வாய்ந்தவர்கள். காமத்தையும் கடுஞ்சினத்தையும் நீக்கிய தவம்மிக்கவர்கள். எவரையும் எதனையும் வெறுக்காத அருளாளர்கள்.

இம்முனிவர்களை அடுத்து, அன்பு நிறைந்த நெஞ்சையும், மென் மொழியையும் உடைய கந்தர்வர்கள் இனிய யாழை இசைத்துச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து, நோயற்ற யாக்கையும், மாந்தளிர் நிறமும், பொன்போன்ற திதலையும் உடையராய்,

பதினெண்கோவையாகிய மேகலை அணிந்த **கந்தர்வப் பெண்கள்** சென்றனர். இங்ஙனம் சிறந்த முனிவர்களும், கந்தர்வர்களும், கந்தர்வ மகளிரும், முன்னே செல்ல, அவர்களின் பின்னே கருடக் கொடியுடைய திருமாலும், முப்புரத்தை எரித்த **உருத்திரனும்,** ஐராவதம் என்னும் வெள்ளை யானையாகிய ஊர்தியுடன், ஆயிரம் கண்களையுடைய **இந்திரனும்,** இந் நிலவுலகிற்கு வந்து தம்மைக் காணும்படி முருகப் பெருமான், குற்றமற்ற அருட்கற்பினையுடைய தெய்வயானை யம்மையாருடன், **திருவாவினன் குடி** என்னும் தலத்தில், சிலகாலம் தங்கியிருத்தலும் உரியன்.

## (4) திருவேரகம் :

திருவேரகம் என்னும் தலத்திலும் எழுந்தருளியிருப்பதற்கு உரியவன் முருகன். திருவேரகத்தில் முருகனை இருபிறப்பாளராகிய அந்தணர்கள், உரிய காலத்தைத் தேர்ந்து துதிப்பர். அவர்கள், தாய்வழியும் தந்தைவழியும் ஆகிய மரபு இரண்டும் நன்கு மதிக்கப்பட்ட, பழம் பெரும் குடிகள் பலவற்றில் தோன்றியவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் தமக்குரிய ஆறு தொழில்களிலும், முறை பிறழாது ஒழுகுபவர்கள். **நாற்பத்தெட்டு** (48) ஆண்டுகள் பிரமசரிய நெறியில் கழித்தவர்கள் (3). அறத்தை வளர்க்கும் கொள்கை யுடையவர்கள். வீட்டுத்தீ காட்டுத்தீ ஞானத்தீ என்னும் முத்தீச் செல்வத்தை வளர்ப்பவர்கள். ஒன்பது இழைகளைக் கொண்டு, முப்புரிகளாக அமைந்த நுண்ணிய பூணூலை உடையவர்கள். இவர்கள் ஈரமான ஆடை உடம்பிலே கிடந்து உலரும்படி உடுத்திக் கைகளை உச்சியிற் குவித்து, முருகனின் ஆறு எழுத்தாகிய மந்திரத்தை வாய்க்குள்ளே உச்சரித்து, மணம் பொருந்திய நல்ல மலர்களைத் தூவி, முருகனைப் புகழ்ந்து வழிபடுவார்கள். இவ்வந்தணர்களின் வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து, முருகன் திருவேரகத்தில் தங்கியிருப்பான்.

(3) "The highest class of Brahmacharya, third in number is upto the age of forty-eight Just as the Jagati metre Consists of forty-eight syllables similarly whoever keeps celibacy upto the age of forty-eight comes to possess his vital airs quite Capable of acquiring all knowledge"

—SWAMI DAYANANDAR, LIGHT of TRUTH.

## (5) குன்றுதோறாடல் :

முருகன் குறிஞ்சி நிலமாகிய குன்றுகள் தோறும், வேலனாக நின்று ஆடுதலையும், தனக்குரிய நிலைபெற்ற குணமாகக் கொண்டவன். குன்றுகளில் வேடுவர்கள் வில்லை ஏந்தி, மார்பில் மணமுள்ள சந்தனத்தைப் பூசி, மூங்கிலிலே விளைந்த கள்ளின் தெளிவைத் தங்கள் சுற்றத்தாருடன் கூடி உண்டு மகிழ்ந்து, **தொண்டகம்** என்னும் பறையைக் கொட்டிக் குரவைக் கூத்தாடுவார்கள். இவ் வேடர்களின் பெண்மக்கள், சுனையிற் பூத்த மலர்களைக் கண்ணியாகத் தொடுத்துத் தலையில் அணிந்திருப்பர். அவர்களின் கூந்தல், கொண்டையாகச் சேர்த்துக் கட்டப் பெற்றிருக்கும். மராமரத்தின் வெண் பூங்கொத்துக்களையும், கஞ்சங் குல்லையையும், இடையிடையே சேர்த்துக் கட்டிய தழை ஆடையை அவர்கள் தம்முடைய அரையில் உடுத்தியிருப்பார்கள். பலவகை மணி வடங்களையும் அணிந்திருப்பார்கள். இப் பெண்களும் குரவைக் கூத்தில் கலந்து கொண்டு குரவைக் கூத்தாடுவார்கள்.

வேடர்கள் ஆடும் குரவைக் கூத்தில் படிமத்தான் எனவும், தேவராளன் எனவும் கூறப் பெறும் வேலனும் கலந்து கொண்டு ஆடுவான். கோயிலில் பூசை செய்துகொண்டு, தெய்வ ஆவேசம் பெற்று ஆடிக், குறிமுதலியன சொல்லி வருதல், இவ்வேலனின் செயலாகும். வேலைக் கையிற் பிடித்துக் கொண்டு ஆடுவதனால், கோயிற் பூசகனாகிய இவனுக்கு வேலன் எனப் பெயர் ஆயிற்று. மலை நாட்டில் வேலன் என்ற பெயரோடு இன்றும் கோயிற் பூசகன் வழங்கப் படுகின்றான்.

குரவைக் கூத்தாடும் வேலன், பச்சிலைக் கொடியில் சாதிக் காயை இடையிடையே சேர்த்து, தக்கோலக் காயைக் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண்தாளியைக் கட்டின கண்ணியை அணிந்திருப்பான். சிவந்த மேனியனாய்ச் செவ்வாடை தரித்திருப்பான். அவன் தன்னுடைய காதுகளில் அசோகம் தளிரைச் செருகியிருப்பான். காலில் கச்சை கட்டிக் கழல் அணிந்திருப்பான். வெட்சி மாலை சூடியிருப்பான் குழலையும் கொம்பையும் ஊதிச் சிறிய இசைகளை உண்டாக்குவான். ஆட்டுக்கிடாயும் மயிலும் அவனுக்கு அருகில் இருக்கும். அவன் கோழிக் கொடியை ஏந்தியிருப்பான். உயரமான

வடிவத்தையுடைய அவன், தோளில் கடகத்தை அணிந்து, நிலத்தில் புரளும்படி ஆடை உடுத்தி யிருப்பான். நரம்பு ஒலித்தது போன்ற இனிய குரலிலே பாடும் பெண்களுடன், மான்பிணை களைப் போன்ற இளம் மகளிரை, முழவு போன்ற தன் தோள்களினுலே தழுவி ஆடு வான். இங்ஙனம் வேடர்களும் வேட்டுவ மகளிரும் வேலனும் குரவைக் கூத்தாடி மகிழும் குன்றுகள் தோறும், முருகன் தானும் ஆடல் நிகழ்த்தி நிலைபெற்று விளங்குவான்.

## (6) பழமுதிர்சோலை :

முருகன், எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பான். அவன் இல்லாத இடம் எதுவுமில்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, அன்பினுல் தன்னை வழிபடும் அடியவர்கள் அனைவருக்கும், ஏற்றபெற்றி அவன் அருள் புரிந்து உதவுகின்றான். சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசி யாக வைத்து, ஆட்டை அறுத்துக் கோழிக் கொடியை நிறுத்தி (ஏற்றி), மலை நிலத்து ஊர் கள் தோறும் எளிய மக்கள் இயற்றும் சிறப் புடைய திருவிழாக்களிலும், அவன் எழுந்தருளி யிருப்பான். அன்பர்கள் தன்னைத் துதிப்பத ஞல், அவர்கள் விரும்பும் இடங்களில் எல்லாம் தங்கி நிலைபெறுவான். படிமத்தான் ஆகிய வேலன் இயற்றும் வெறியாடு களங்களிலும், காடுகளிலும், சோலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், நாற்சந்தி முச்சந்திகளிலும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்திலும், ஊர் நடுவில் உள்ள மரத்தின் அடியிலும், மக்கள் பலரும் கூடும் பொது இடமாகிய அம்பலங்களி லும், பசுக்கள் உராய்ந்து கொள்ளும் நடுதறிகள் உள்ள இடங்களிலும், முருகன் எழுந்தருளி விளங்குவான். அன்றியும் நாத்திகர்கள் (முரணுநர்) அஞ்சுமாறு, தான் வந்து தோன் றும்படி ஆற்றுப் படுத்தப்பட்ட மலைக் கோயில் களிலும், முருகன் உறைவான்.

## அருவிகள் :

முருகன் இவ்வாறு ஆங்காங்குப் பலவிடங்களி லும் தங்கி விளங்கி இருப்பான். அவ்விடங் களுள் பழமுதிர்சோலை என்னும் தலமும் ஒன்று. அங்குள்ள மலையினின்று பெருகும் அருவிகள், பல நிறம் பொருந்திய ஆடைகளைப் போல ஒடுங்கி அசைந்து வரும்; அகில் மரங்களைச் சுமந்து வரும்; சந்தன மரங்களை உருட்டிக் கொண்டு வரும்; மூங்கிற் கிளைகளைப் பறிக்கும்; மலைமேல் தொடுக்கப்பட்ட தேன் கூடுகளைச் சிதைக்கும்; ஆசினிப் பலாவின் முதிர்ந்த சுளை களும், சுரபுன்னை மரத்துப் பூக்களும், அவ்வருவி நீரில் உதிர்ந்து விழும்; ஆணும் பெண்ணும் ஆகிய கருங் குரங்குகள் நடுங்கவும், யானைகள் குளிரால் ஒடுங்கவும், அவ்வருவி வெள்ளம் அலை வீசிச் செல்லும். பெரியகளிறுகளின் முத் துடைய தந்தங்களை வாரி எடுத்துக்கொண்டு, பொன்னும் மணியும் கொழித்துக் கொண்டு, அருவி வெள்ளம் தாவிக் குதித்து ஓடும். அது போது, அருவி நீர்ப் பெருக்கு வாழை மரங்களைச் சாய்க்கும். தெங்கங் குலைகளை உருட்டும். கரடி களும் பன்றிகளும், கோழிகளை அஞ்சிக் கற் பிளவாகிய குகைகளில் ஒளிந்து கொள்ளச் செய்யும். காட்டெருமைக் கிடாய்கள் கதறும் படி, மிக உயரத்திலிருந்து 'இழும்' என்ற ஓசை உண்டாகுமாறு, மலைமேல் இருந்து அருவிகள் கீழே விழும். இத்தகைய அருவிகளை உடைய பழமுதிர் சோலை என்னும் தலத்திற்கு உரிமை உடையவன் முருகன்.

## ஆற்றுப்படுத்துதல் :

இவ்வாறு திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல் பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களிலும் முருகன் எழுந்தருளியிருப்பான். அவனுடைய திருவடியை நினைவு கூர்ந்த நின் உள்ளம், செம்மல் உள்ளமாகும். நினைக்கத் தகாதவற்றை விடுத்து, நினைக்கத்தக்கதை நினைக்கப் பெற்றத ஞல், அது சிறப்புடையதாயிற்று. நன்மை பொருந்திய கொள்கையை விரும்பிய சிறந்த உள்ளத்துடன், நீ முருகனிடம் சென்று தங்கும் மெய்ஞ்ஞானப் பேற்றைப் பெற விரும்பினையா யின், நற்பண்புகள் பலவும் சேர்ந்து நன்மை பொருந்திய, நின் நெஞ்சத்தில் உண்டான இனிய விருப்பம் கைகூடி நிறைவேறும். ஆதலின் நீ விரும்பிய அந் நற்பேற்றை அடைய இப்பொழுதே இம்முயற்சியை மேற்கொள்க. மேற்குறித்த ஆறு தலங்களிலோ, அல்லது வேறு பிற இடங்களிலோ சென்று, நீ முருகனை நேரிற் காணலாம். அங்ஙனம் காணும்பொழுது இனிய முகத்துடன் அவனை அன்புடன் துதித்துக் கையினுல் தொழுது, வாயினுல் வாழ்த்தி, அவனது திருவடிகள் உனது தலையில் பொருந் தும்படி மெய்யினுல் வணங்கிப் பின்வருமாறு புகழ்ந்து கூறிப் போற்றுக.

புகழுரைகள் :

"நெடிய பெரிய இமய மலையில், சரவணப் பொய்கையில் அக்கினித்தேவன் தன் அங்கையில் ஏற்று விடுப்ப, அங்கே கார்த்திகைப் பெண்கள் அறுவராலும் பாலூட்டி வளர்க்கப் பெற்று, ஆறு வடிவங்கள் ஒன்றாகச் சேர்ந்த செல்வனே! கல்லாலமரத்தின் நிழலில் எழுந்தருளும் தட்சிணு மூர்த்தி ஆகிய சிவபிரானின் புதல்வனே! மலைம களின் மகனே! பகைவர்களுக்குக் கூற்றுவனைப் போன்றவனே ! போரில் வெற்றியைத் தரும் கொற்றவையின் சிறுவனே ! அழகிய அணிகலன் கள் பல அணிந்த சிறப்பினையுடைய காடு கிழாளின் குழவியே ! தேவர்கள் வணங்குகின்ற விற்படையை உடைய தலைவனே! மாலை யணிந்த மார்பனே! நூல்களை உணர்ந்த புலவனே ! போரில் ஒப்பற்றவனே ! போரில் வெற்றிமிக்க வீரர் வீரனே ! அந்தணர்களுக்குச் செல்வமாக விளங்குபவனே !

அறிஞர்கள் புகழ்கின்ற மலை போன்றவனே ! வள்ளி தெய்வயானையரின் கணவனே ! வேலைக் கையில் ஏந்தியவனே! சான்றாண்மைக் குணங்க ளாகியசெல்வம் மிக்கவனே! கிரவுஞ்சம்என்னும் மலையை அழித்த அழியாத வெற்றிப் புகழை உடையவனே ! வானளாவிய பெரிய மலைகளை யுடைய குறிஞ்சி நிலத் தலைவனே ! புகழ்மிக்க புலவர்களுக்குத்தலைவனே ! பெறுதற்கரிய சிறப்பினை உடைய வீடுபேற்றைத் தரும் முருகனே ! விரும்பி வழிபடும் அடியவர்களுக்கு எல்லா இன்பங்களையும் நிறையக் கொடுக்கும் புகழ் மிகுந்தவனே! துன்புற்றவர்களுக்கு அருள் புரியும் வேந்தனே! அடியவர்களைத் தாங்குகின்றவனே ! பகைவர்களுக்கு அச்சத்தை விளைவிப்பவனே! நெடுவேளே! பெரியவர்கள் எல்லாம் போற்றுகின்ற பெரும் புகழ் மிக்க இறைவனே! சூரபதுமனின் குலத்தை வேரொடு அறுத்த வலிமை மிக்கவனே ! மதவலி என்ற பெயருடையவனே! போர் புரிதலில் எடுத்துக் காட்டானவனே! பெருந் தகையோனே!" என்று பலவாறாக, யான் கூறிய முறையில் இவைகளை மட்டுமேயன்றி இன்னும் பற்பல வகைகளில் நீ அவனை விடாது மேலும் புகழ்க.

"பெருமானே! நின் சிறப்பை முழுவதும் அளந்தறிதல் உயிர்களுக்கு இயலாது. ஆதலின் நின் புகழை முழுவதும் கூறுதற்கு எளியேன் வல்லன் அல்லேன். நினக்கு இணையானவர்கள் இல்லாத புலமை உடையவனே! நின் திருவடிகளை நினைந்து விரும்பி இங்கு வந்தேன்" என்று முருகன்பால் நின் விண்ணப்பத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்க.

முருகன் அருள்புரிதல் :

இங்ஙனம் நீ, நின் விண்ணப்பத்தைச் சொல்லி முடிப்பதற்குள், பல்வேறு வடிவம் கொண்ட சிறு பூதங்கள் பல அவ்விடத்திற் பெருமை மிகத் தோன்றி, "இவன் தங்கள் அருளைப் பெறு தற்குத் தகுதியுடையவன்; அறிவு முதிர்ந்த சொல் வளமுடைய புலவனாகிய இவ்விரவ லன், தங்களின் செழும் புகழை நாடி இங்கே வந்திருக்கின்றான்" என்று, இனிய நல்ல சொற்க ளால் முருகனைப் பரவும். அப்போது தெய்வத் தன்மை நிரம்பியதாகவும், வலிமை மிக்கதாக வும், வானத்தை அளாவுகின்றதாகவும், உள்ள உயர்ந்த வடிவத்துடன், முருகன் நின் முன்பு தோன்றுவான். தோன்றி, அச்சம் தர வல்ல தனது பெருநிலையை உள்ளடக்கி மறைத்துக் கொண்டு, மணம் கமழ்வதும், தெய்வத் தன்மை யுடையதும், அழகு வாய்ந்ததுமான தனது இளமை நலத்தைக் காட்டி, "நினது வரவை யானறிவேன். நீ அஞ்சற்க" என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பலகாலும் கூறி, அருள் புரிவான். மேலும், உலகத்தில் நினக்கு ஒருவரும் ஒப்பில்லை எனும்படி, பெறுதற்கரிய சிறந்த பல பரிசில்களையும் வழங்கியருள்வான்" என்பது, திருமுருகாற்றுப் படையின் கருத்துப் பொருட் சுருக்கம்.

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்தவற்றால், 'நக்கீரர்கண்ட நற்காட்சி'' பற்றி விவரிக்கும் திருமுருகாற்றுப் படை, என்னும் சங்க கால நூலின் கருத்துப் பொருட் சுருக்கம் இனையது என்பதனை, அனைவரும் இனிதுணரலாம். "நக்கீரர் தாம் உரைத்த நன்முருகாற்றுப்படையைத்தற்கோல நாடோறும் சாற்றினால், முற்கோல மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித், தாம் நினைத்த எல்லாம் தரும்'' என்பது, நம் முன்னோர்கள் கண்டுணர்ந்த உண்மையனுபவம். எனவே ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கும் மேலாக, நம் தமிழகத்துச் சான்றோர்களால் மிகவும் போற்றி அன்புடன் சிறந்தெடுத்து ஓதப்பெற்றுவருகின்ற திருமுருகாற்றுப்படையினை, நாமும் அன்புடன் முறையாக ஓதி முருகனை வழிபட்டு வந்தால், நமக்கு எல்லாவகையான நலங்களும் கிடைக் கும் என்பது திண்ணம்.

ஆசிரியர்

# செய்திச் சுருக்கம்

## திருவேற்காட்டில் புதுப்பாலத் திறப்புவிழா

சென்னையையும் அம்பத்தூரையும் இணைப்பதுடன், திருவேற்காடு அருகில் அருள்திரு தேவி கருமாரிஅம்மன் கோயிலையும் இணைக்கின்ற, புதிய பாலத் திறப்புவிழா, 9—11—73 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது. விழாவுக்கு வந்தவர்களைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு டி. இராசரத்தினம் M.L.A., அவர்கள் வரவேற்றுப் பேசினர். தமிழக முதல்வர் மாண்புமிகு, டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களும், மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் அவர்களும் விழாவில், கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருவேற்காடு அருள்திரு தேவி கருமாரியம்மன் ஆலய நிர்வாகம் உள்படப்பல் வேறு அமைப்புகளின் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், விழாவிற் கலந்து கொண்ட மற்றைய அமைச்சர்களுக்கும், வரவேற்புகள் அளிக்கப்பட்டன. தேவிகருமாரியம்மன் திருக்கோயிலின் சார்பில், அம்மையின் அழகிய திருவுருவப்படம், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும். மற்றைய அமைச்சர்களுக்கும் வழங்கப்பெற்றது. அதனை அவர்கள் உரிய முறைப்படி அன்புடன் பெற்றுக் கொண்டனர்.

தலைமைவகித்த பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில், "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் ஆலயத் திருப்பணிகள் ஒழுங்காக நடைபெறுமா? மதச்செய்திகளின் தலையீடு இருக்குமோ? என்று பலர் அஞ்சினர்கள். ஆனல் இந்த ஆட்சியில்தான் ஓடாத திருத்தேர்களெல்லாம் ஓடுகின்றன. ஆலயத்திருப்பணிகள் எல்லாம் செம்மையாக நடைபெறுகின்றன. இதன் மூலம் பொது மக்களின் ஐயங்கள் நீங்கி நல்ல தெளிவு ஏற்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டார்கள். மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்கள் விழாவிற் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்கள்.

புதிய பாலத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு திரு. டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகையில், "கடவுட் கொள்கையைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சியின் கருத்து எப்படிப்பட்டதாக இருந்தாலும், எந்த மதத்தினரின் மனமும் புண்படாமல், எந்தப் பிரிவினருடைய தேவைகளும் புறக்கணிக்கப் படாமல் நடந்து கொள்வதே இத்த அரசின் கொள்கை" என்று வலியுறுத்தி உறுதி



கூறினர். "கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், செங்கை மாவட்டத்தில் 67 இலட்சம் ரூபாயில் 8 பாலங்கள் கட்டி முடிக்கப் பெற்றன. பாலாற்றின் குறுக்கே ஒரு பாலமும், தேன் பாக்கத்தில் ஒரு பாலமும், ஒருகோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பெற்று வருகின்றன. வேளாண்மை வளர்ச்சியில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதில் ஒரு முக்கிய கட்டமாகப் புதிய பாலங்கள், பாதைகள், சாலைகள் அமைக்கப்படுகின்றன. 7 இலட்ச ரூபா மதிப்பீட்டுச் செலவில், இந்தப் பாலம் கட்ட முதலில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 10 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் இது கட்டி முடிக்கப்பெற்றிருப்பது. எந்த மதத்தினர் எந்தப்பிரிவினர்மனமும் புண்படலாகாது. அவர்களின் நியாயமான எந்தக் கோரிக்கையும் அலட்சியப்படுத்தப்படலாகாது என்று அரசு எண்ணுவதற்கு இது ஒரு நல்ல சான்ருகும்" என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறை முதன்மைப் பொறியர் திரு. சி.வி. பத்மநாபன் அவர்கள் பாலம் பற்றிய விவர அறிக்கையைப் படித்தார். மேற்பார்வைப் பொறியாளர் திரு. எம். எ. சமத் அவர்கள் நன்றி கூறினர்.

—ஆசிரியர்

# 'கொழுமம் – நித்தம் நின்றுடுவார்'

திரு புலவர். செ. இராசு, ஈரோடு,

## இருப்பிடம்:

கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டைத் தாலூக்காவில் வளம்மிக்க கிழக்கு எல்லையில் இருக்கும் ஊர்தான் வரலாற்றுப் புகழ்மிக்க கொழுமம். கொங்கு 24 நாடுகளில் ஒன்றான வைகாவூர் நாட்டின் ஊராக, ஊர்த் தொகைப் பாடல் குறிப்பிட்டாலும், கல்வெட்டு 'கொங்கு மண்டலத்துக் கரைவழி நாட்டுக் கொழுமமான மாதவச் சதுர்வேதி மங்கலம்' என்றே குறிப்பிடும்.

## சங்க காலச்சிறப்பு:

சங்க இலக்கியங்களில் குழுமூர் என்றும், இடைக்காலத்தில் கழுமலம் என்றும் சிறப்புடன் அழைக்கப்பெற்ற ஊர்தான் கொழுமம். தமிழுக்குத் தலைதந்த வள்ளற் பெருமகன் குமணனின் முதிரமலை இன்று குதிரைமலை என்ற பெயருடன் மிக அருகில் உள்ளது. இம்மலையில் தோன்றிக் கொழுமத்தில் அமராவதியாற்றுடன் கலக்கும் ஆற்றுக்கும் குதிரையாறு என்றே பெயர். குமணன் வழிபட்ட லிங்கம் உள்ள ஊரைத் தான் 'குமரலிங்கம்' என்று அருகில் உள்ள ஊரைக் குறிக்கின்றனர்.

## கொங்குச் சோழர் தொடர்பு:

கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோனாட்டுப் பகுதியிலிருந்து குடியேறிச் சுமார் 300 ஆண்டுகள் கொங்கு நாட்டில் தனியரசோச்சிய கொடும்பாளூர் இருக்கு வேளிர் வழியினராகக் கொங்குச் சோழர்கள் முதலில் கொழுமம் பகுதியையே பிடித்தனர். இருபக்கம் மலையரணும் இருபக்கம் ஆற்று அரணும் உள்ள இப்பகுதியில் தங்கள் படைநிலையை அமைத்தனர். பழநியிலிருந்து பாலக்காட்டுக் கணவாய் வழியாகச் சேரநாட்டுக்குச் செல்லும் வழி கொழுமம் வழியாகவே சென்றது. அது பெருவழி, எனப்பட்டது.

விசயாலய சோழனின் தஞ்சை வெற்றி பிற்காலச் சோழர் ஆட்சி கால் கொள்ளுவதற்கு இன்றியமையாத காரணமாக இருந்தது. அதனால் அவன், 'தஞ்சை கொண்ட பரகேசரி' என்று பாராட்டப்பெற்றான். அதுபோல் கொங்குச் சோழர்க்கு அடிப்படை வெற்றியாக அமைந்த இவ்வெற்றியைக் 'கொழுமங் கொண்ட சோழன்' என்ற தொடரால் கொங்குச் சோழர் கல்வெட்டுப் பாராட்டும். கொங்குச் சோழர் மரபில் இரண்டாம் அரசனே இக் கோயிலை அமைத்தான். கொங்குச் சோழர்கள் அனைவரும் அவர்தம் தேவிமாரும், அரசியல் அதிகாரிகளும் பல திருப்பணியை இவ்வூர்க் கோயிலுக்குச் செய்தனர்.

## வீரசோழீசுவரர்

இன்று சோழீசுவரர் என்று இறைவன் அழைக்கப்பட்டாலும், கல்வெட்டில் 'நாயனார் வீரசோழீசுரமுடையார்' என்ற தொடர்தான் காணப்படுகிறது. இக்கோயிலைக் கி.பி. 1179-ல் பட்டமேற்ற இரண்டாம் வீரசோழன் தான் கட்டினான் என்று கூறுவர். ஆனால் அவனுக்கு முற்பட்ட உத்தம வீரநாரயணன் (1100) கல்வெட்டு இங்குள்ளது. தமிழக அரசின் தொல்பொருள் துறையினரால் வள்ளி எறிச்சிலில் கண்டுபிடிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டில் காணும் 'வீரசோழப் பெருமானடிகள்' தான் இக்கோயிலைக் கட்டியிருக்க வேண்டும்.

## திருச்சிற்றம்பலம்:

முதல் கொங்குச் சோழன் கோனாட்டான் கலிமூர்க்க விக்கிரம சோழன் (1004-1045) திருச்சிற்றம்பலமுடையான் என்ற பட்டப்பெயரை வைத்துக்கொண்டான். கொங்கு நாட்டில் ஒரு திருச்சிற்றம்பலம் என்ற பெயரைக் கல்

வெட்டுக்கள் குறிக்கின்றன. இவ்வூருக்குத்தான் ஆதித்தன் பொன் வேய்ந்தான் போலும்.

"சிற்றம்பல முகடு கொங்கில்
கனகம் அணிந்த ஆதித்தன்"

என்று நம்பியும்,

"மன்னிய பொன்னம்பலத்து
மணிமுகட்டில் மாக்கொங்கில்
பன்னுதுலைப் பசும்பொன்ஞல்
பயில் பிழம்பால் மிசை யணிந்த'

என்று சேக்கிழாரும்.

'கொங்கில் செம்பொன்
ஆனேற்றூர் மன்றில்
மாடம் பொன் வேய்ந்த ஆதித்தன்'

என்று உமாபதி சிவமும் கூறியிருப்பன சிந்தித்தற்குரியன, இவ்வூரைக் கைப்பற்றிய காரணத்தால் முதல் கொங்குச்சோழன் திருச்சிற்றம்பலமுடையான் என்று பெயர் பெற்றுன். 'தன்குல நாயகன் தாண்டவம் பயிலும் தில்லை'யைச் சோணுட்டுச் சோழர்கள் வழிபடு கடவுளாக வழிபட்டதுபோல் கொங்குச் சோழரும் இத்தலத்தில் நடராசப் பெருமானை வழிபடு கடவுளாகக்கொண்டனர். மூலவரான வீரசோழீசுவரரைக் குறிக்காமல் பல்வேறு கல்வெட்டுக்களும் நடராசப் பெருமானையே குறிக்கின்றன.

## தாண்டவேச்சுரம் :

நடராசர் பெயரில் கோயில் முழுவதும் தாண்டவேச்சுரம் என்று அழைக்கப்படுகிறது. நடராசருக்கு வழிபாடு செய்ய, விழாக் கொண்டாட, விளக்கெரிக்க, கொடைபல அளித்திருக்கின்றனர். அக்கல்வெட்டுக்களிலெல்லாம் நடராசர் பெயர் குறிக்கப்பெறும் அழகினைப் பார்த்தாலே இச்சிறப்பு விளங்கும்.

1. தாண்டவேச்சுரர்
2. நின்ருடுவார்
3. அழகிய சிற்றம்பலமுடையார்
4. திரிபுவன சுந்தரர்.
5. நிருத்தியப்பர்.
6. ஆகாசப் பெருமாள்.
7. தில்லைநாயகர்.
8. உமையுருக ஆடுவார்.
9. ஆனந்தத் தாண்டவப் பெருமாள்.
10. சிதம்பரேசுவரர்.

இப்படிச் சிறப்புடைய பெயர்களை நடராசரைக் குறிப்பிடுவனவாக அங்குக் காண்கின்ருேம்.

## கலைகள் :

ஆடும் பெருமானின் அணிமிகு இத்தலத்தில் 'திருநீறிட்டான்மடம்' 'சுந்தர நாயனுர் மடம், 'அதிராசராசன் திருமடவிளாகம்' போன்ற பல அறநிலையங்கள் கலைகளை வளர்த்தன. ஆவணக் களரியும் நிலைப்படையும் இங்கு இருந்தனவாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

1. "திருவாப்ப நல்லூர் உடையான் ஒவ்வாத கூத்தன்"
2. "ஆத்தூர் ராசராசபுரத்து ஆளுத கூத்தன்"
3. "யாழ்வல்லானுன விக்கிரம சோழ இருங்கோவேள்"
4. "வாத்யவித்துவானுனவீரராசேந்திரன்"

போன்ற அரசு அதிகாரிகளும் இங்குக் கலைகளை வளர்த்தனர். ஒரு குரங்காட்டி கூடக் கொடை அளித்துள்ளான்.

## நித்தம் நின்ருடுவார் :


அண்மையில் இவ்வூர் நடராசரைப் பற்றிய புதுக் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. நிருத்தியப்பர்க்கு வீரசோழபுரம், இரட்டையம் பாடி, மூலைக் கல்லாபுரம். சின்ஞக்கலைமறி, மேலைக்கண்ணுடிப்புத்தூர் போன்ற ஊர்கள் மானியமாக அளிக்கப்பெற்றன. ஒரு வாயிற் படியில் பின்வரும் கல்வெட்டு உள்ள கல் பதிக்கப்பட்டுள்ளது.

"ஸ்வஸ்திஸ்ரீ சர்வஜித்து
சம்வத்சரத்து ஆடி மாசம்
இரண்டாந்தியதி வீதி
யரைய நயினரேன் கொழும
த்தில் அழகிய சிற்றம்பல
விளாகத்து நித்த நின்ருடுவார்க்குக்
கல்வெட்டிக் குடுத்த பரிசாவது முன்பு
இருக்கும் குடிக்கும் பின்பற்
றும் குடிக்கும் வேடிக்கை
மும்மடி ஆதிக்கை மற்றும் எப்
பேர்ப்பட்ட உபாதியுட்பட
ஒன்றுக்கு மூன்று ஆவ
து இறுப்பார்களாகவும்
இது ஒழிய வேறு ஒன்று செயி
யிலுமவர்கள் நித்த நின்ருடு
வாரைப் பிழைத்தார்களாவதாக
வும். இப்படி சம்மதித்துக்கல்
வெட்டிக் குடுத்தேன் வீதி
யரைய நயினரேன்..."

இச்சிறப்புக்களை அறிய நீங்களும் ஒருமுறை கொழுமம் சென்று நித்த நின்ருடுவாரை நன்ருக வணங்குங்கள். ★



திருவிடைமருதூர்த் திருமுறைக் கருத்தரங்கத்தில், திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம், திருவார் திரு. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களுக்குப் பொன்னுடை போர்த்துச் சிறப்பித்தல் (28-10-73).



அருள்திரு. சீதைப்பிராட்டி—இராமபிரான்—இலக்குவன் (ஆஞ்சநேயருடன்)

# குறியீடு

மாட்சிமிகு திரு. எஸ் மகராஜன்
அவர்கள் B.A., B.L.
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

உடைந்துபோன பென்சில் குச்சியொன்று; உப்புப் பெறாதது; தரையில் கிடந்தால், குப்பையோடு குப்பையாகப் பெருக்கித் தள்ளிவிடுவார்கள். ஆனல் அதைப் பத்திரமாக ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து நான் பாதுகாத்து வருகின்றேன். பேழையைத் திறந்து குச்சியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மயிர்க்கூச்சல் எடுக்கிறது; அன்பு குமுறிக் கொண்டு வருகிறது; குச்சியைப் பார்த்தவுடன் பல ஆண்டுகளுக்கு முன்பு அமரனை என் நண்பனுடைய உருவம் என் மனத்தகத்தே பளிச்சென்று காட்சி கொடுக்கிறது. அந்த நண்பன் பரிசாகக் கொடுத்த குச்சி அது. மற்றவர்களுக்கு அது வெறுங் குச்சிதான். ஆனல், என் நெஞ்சத்திலே அந்தக் குச்சி செய்கிற மாயஜாலங்களே தனி. குச்சியைக் கண்டவுடன் அந்த நண்பனைக் கண்ட உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. நட்பு வளத்திலே, இங்கிதத்திலே, எல்லையற்ற பரிவிலே, பண்பாட்டிலே, சகிப்புத் தன்மையிலே, ஆர்வத்திலே அப்படியொரு நண்பன் எனக்குக் கிடைத்ததில்லை. அவன் மாய்ந்து விட்டால்தான் என்ன? அவன் கொடுத்த பென்சில் குச்சி இருக்கிறது. போதும். அவனுடைய புன்முறுவலை அந்தக் குச்சி எனக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. அவனுடைய வாழி நண்பினை அது எனக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறது. என்னுடைய இதயத்திலே இப்படியொரு பிணைப்பு, பிரிக்க முடியாத பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. குச்சியைக் கண்டதும் அந்த நண்பனைப் பற்றிய நினைவு; அந்த நண்பனை நினைத்ததும், குச்சியைப் பற்றிய நினைவு. இந்த இணைப்பு நெருங்க நெருங்க, வெறும் நினைவுக் குறியாக இருந்த குச்சி, நண்பனுகவே மாறிவிடுகிறது. எது குறி, எது மூலப்பொருள் என்ற பேதம் மறைந்துவிடுகிறது. இந்த மனநிலைதான் உருவ வழிபாட்டுக்கு அடிப்படையாக இருக்கும் நிலை.

எல்லையற்ற பரம்பொருளுக்கு நாம் ஒரு அழகிய உருவத்தைக் கற்பிக்கிறோம். உருவத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம், அந்தக் கருணைக் கடலின் நினைவு வருகிறது. இறைத் தத்துவத்தைப் பற்றிச் சிந்திக்கும் பொழுதெல்லாம், நாம் கற்பனையால் செய்த உருவத்தின் நினைவு வருகிறது. இவ்வாறு நம் மனம் குறியோடும் குறிக்குப் பொருளாக இருக்கும் தத்துவத்தோடும் பழகப் பழக, இரண்டுக்கும் இடையேயிருக்கும் பிணைப்பு வலுக்கிறது, வேறுபாடு மறைகிறது, அந்தக் குச்சியே என் நண்பனுக்குச் சமானமாயிற்றே, அதைப் போல.

அழகர் கோயிலிலிருக்கும் திருமாலின் ஒளி மிக்க சிலையைப் பார்த்துப் பார்த்துப் பழகியவர் நம்மாழ்வார். சிலையா அது? இல்லை, இறைவனே அர்ச்சாவதாரம் எடுத்து அந்தக் கோயிலில குடிகொண்டிருக்கிறன் என்பதை உணர்கிறர் ஆழ்வார். பெருமானின் பைம்பொன் திருமேனிக்குப் பட்டுப் பீதாம்பரத்தை உடுத்துகிறர். பல பொற்கலன்களைப் பூட்டுகிறர். தங்கத் தாமரையிலே நிற்கும் சோதித் திருவடிகளைப் பார்க்கிறர். முகத்திலுள்ள சோதி பொன் முடியின் சோதியிலே கலப்பதைக் கண்டு பரவசமடைகிறர். ஆடிப்பாடுகிறர். ஏன் செய்யமாட்டார்? நண்பனைக் காட்டிய அந்தப் பென்சில் குச்சியை மதித்து அதற்கு வெள்ளிப் பேழை கொடுத்தேனே; இறைவனைக் காட்டும் அந்தத் திருமேனிக்கு என்றுமழியாத ஒரு தமிழ்ப் பாடலைப் பாடிக் கொடுத்தார் நம் நம்மாழ்வார்.

"முடிச்சோதியாய் உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?"

"தங்கக்கிரீடம் வைத்திருக்கிறயே, அது எப்படி டால் அடிக்கிறது! ஆனல் அந்த

மூடியின் ஒளியெல்லாம் தன்னைத்தானே படைத்துக்கொண்ட ஒளியா! இல்லை, இல்லை. உன் முகச்சோதியிலிருந்து மலர்ந்ததுதான் அந்த ஒளியெல்லாம்.

"முடிச்சோதியாய் உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?"

பொற்றாமரை மேல் நிற்கும் திருவடிகளைப் பார்க்கிறார் ஆழ்வார். அடடா, பொற்றாமரைக்கு இவ்வளவு அழகா? "உன் திருவடியிலிருந்து வெளிப்பட்ட சோதிதான் அந்தத் தாமரையாக மலர்ந்துவிட்டதா?

"அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?"


என்று அதிசயிக்கிறார்.

"உடம்பை ஒட்டிக்கொண்டு ஒளிவீசி நிற்கிற அந்தப் பட்டுப் பீதாம்பரத்தோடும், நீ அணிந்திருக்கிற பலவகைப்பட்ட தங்கநகைகளோடும் உன் பைம்பொன் இடுப்பிலேயுள்ள சோதி கலந்துவிட்டதா? இந்த அற்புதத்தையெல்லாம் நானறிய நீ கட்டுரைக்க வேண்டும், அப்பனே!" என்று கேட்கிறார்.

"படிச்சோதி ஆடையொடும்
பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ?
திருமாலே, கட்டுரையே!"

உலக இலக்கியத்திலேயே இப்படி ஒரு பாடல் கிடையாது என்று தமிழர்கள் தோள் தட்டலாம். ஆனால், தோள் தட்டுவதற்கு முன், இப்படியும் ஒரு பக்திப் பாடல் தமிழில் இருக்கிறது என்று அறிந்து கொள்வது நல்லது. பாட்டைத் திரும்பவும் ஒருமுறை படித்துப் பார்ப்போமா?

"முடிச்சோதியாய் உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ,
திருமாலே, கட்டுரையே!"



திருவிடைமருதூரில் நிகழ்ந்த மூன்றாவது திருமுறைக் கருத்தரங்க விழாக் கூட்டத்தினரில் ஒரு பகுதி

# சன்மார்க்கத்துக்கு ஒரு சாரநாத்

'சன்மார்க்கச் செம்மல்' திரு. நா. மகாலிங்கம் அவர்கள் B.SC., A.M.I.E.,

தலைவர், இராமலிங்கர் பணிமன்றம், சென்னை.

நான் தில்லி சென்றிருந்தபோது சாரநாத் என்னும் புனிதத் தலத்துக்கும் போயிருந்தேன்; கொல்லாமையையும், கருணையையும் போதித்த வட பாரதத்தின் வள்ளற் பெருமானான புத்தர் இறுதியாகப் பரிநிர்வாணம் பெற்ற புனிதத் தலமே சாரநாத்தாகும்.

சாரநாத் காசியிலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ளது. காசியில் நிலவும் அமளி துமளிக்கு நேர்மாறாக, ஏழே மைல் தூரத்துக்குள் இப்படி ஓர் அமைதியும் அழகும் அருளும் ததும்பும் இடம் அமைந்திருப்பதைக் காசிக்கு வரும் பலர் அறிந்ததாகத் தெரியவில்லை. சாரநாத்தில் அழகான புத்தர் ஆலயம் இருக்கிறது. சுமார் இருநூறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள அந்த இடத்தைச் சுற்றிலும் அழகு பொங்கி வழிகிறது. பூங்காக்களும், தோட்டங்களுமாக அந்தப் புனித இடம் பொலிந்து மிளிர்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பழைய புத்த விகாரங்களை இங்கே அண்மையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தப் புத்த விகாரங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. யார் வேண்டுமானாலும் வந்து அங்குத் தங்கவோ; மாசுபடுத்தவோ அனுமதிக்காமல், புனிதமான கோட்பாடுகளைக் கடைப்பிடித்த உத்தமர்கள் உறைந்த இடம் என்கிற நினைவால், அதற்குப் புறம்பான எந்தச் செயலும் அங்கு நிகழ்ந்துவிடாமல், கண்ணுங் கருத்துமாகக் காத்து வருகிறார்கள். சாரநாத்தில் உள்ள புத்தரின் ஆலயத்தை, அந்த மதத்தைக் கண்ணெனப் போற்றுகின்ற ஜப்பானியர்களே அமைத்திருக்கிறார்கள். சமீபத்தில், சில ஆண்டுகளுக்கு முன் புத்தர் பெருமானின் 2500வது ஜயந்தி கொண்டாடப்பட்டது.

உயிர்க் கொலை கூடாது. கருணையே மனிதப் பிறவியின் உயிர்மூச்சு. இரக்கமே வாழ்வின் பொருள் என்கிற மகத்தான இலட்சியத்துக்காக அரண்மனை அரசபோகம் அழகிய மனைவி ஆள் அம்பு, படை, பரிவாரம் முதலிய எல்லாவற்றை வற்றையும் துறந்து வாழ்ந்த அந்த புனிதப் பெருமான், இறுதியாகவாழ்ந்த அந்த இடத்தைச் சுற்றி மூன்றுமைல் விஸ்தீரணத்துக்கு அவருடைய இலட்சியத்தைப் பரிபூரணமாக அந்த மாநில அரசு நிறைவேற்றி வைத்திருப்பதைக் கண்டு நான் மனமுருகி நின்றேன். சாரநாத்தைச் சுற்றி மூன்றுமைல் சுற்றளவுக்கு யாரும் எந்தவிதமான ஜீவஹிம்சையும் செய்யக் கூடாது; எந்தப் பறவையையும் சுடக்கூடாது; புலால் அறுக்கவோ, சமைக்கவோ, உண்ணவோ கூடாது என்பது, மாகாண அரசு அங்கே செய்துள்ள சட்டமாகும். இதைவிட உயர்ந்த சட்டம் வேறு என்ன உலகில் இருக்கமுடியும்.

நம் அருமைத் தமிழ் நாட்டிலும் ஒரு சாரநாத் இருக்கிறது. அங்கேயும் புத்தரை ஒத்த ஒரு பெருமான் தங்கியிருந்தார். உயிர்க்கொலை கூடாது; இரக்கமே என் உயிர், கொலையும் புலையும் தவிர், கருணையே கடவுள் என்று வாழ்நாள் முழுதும் அவர் உபதேசித்தார். அருளே இறைவன் வடிவம்; அன்பே அவன் உரு என்று திரும்பத் திரும்பச் சொன்னார். அவர்தான் மரணமிலாப் பெருவாழ்வை உபதேசித்த மகான் வடலூர்ப் பெருமான். 'அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை' என்ற தாரக மந்திரத்தை முழங்கி, மனித குலத்தின் சமய நெறியிலே எல்லோரும் ஏற்கும் புதுநோக்கை—பொது நோக்கத்தை—புகுத்தியவர் இராமலிங்க அடிகளாராவார்.

நூறு ஆண்டுக்கு முன்பு தமிழ்நாட்டில் எங்கும் வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் அவர்கள் அமைத்த சத்திய ஞான சபையைப் பற்றியே பேச்சாக இருந்தது. 'சாதி சமயச்

சழக்குகளை விட்டொழியுங்கள் பசிப்பிணியைத் தீருங்கள்; மூட நம்பிக்கைகளை உதறி எறியுங்கள்; மரணமிலாப் பெருவாழ்வு பெறுவோம் வாருங்கள், என்று அவர் முழங்கிய அன்புக் குரல் தமிழ் நாடெங்கும் எதிரொலித்தது.

ஆயிரமாயிரமாக மக்கள் வடலூர்ப் பெருமானைத் தரிசிக்க வந்தார்கள். வந்தவர்களுக்கெல்லாம் சத்திய தருமச்சாலை உடலுக்கு இலவச உணவையும், சத்திய ஞானசபை உயிருக்கு ஞான உணவையும் வாரி வழங்கி வந்தன. சாதி சமய வருண பேதமெல்லாம் வடலூர்ப் பெருமானின் ஞான ஒளியில் இற்று விழுந்தன. 'ஒன்றேகுலம்; ஒருவனே தேவன்' என்கிற திருமந்திரம் அங்கே புத்துயிர் பெற்றது. சத்திய ஞான ஜோதியின் கருணை, அன்பு சகோதரத்துவம் ஆகிய கிரணங்கள் மக்களைத் தூய்மைப் படுத்தின. சுத்த சன்மார்க்க சுகநெறி பரவியது. வடலூர்ச் சத்திய ஞானசபை சோதி விளக்கின் சுடரொளியில் வள்ளற் பெருமான் அருட்பெருஞ் சோதியாக அமைந்து அருள் செய்கின்றார்கள்.

உலக மக்கள் எல்லோரும் உவந்துபாடி ஞானஒளி எய்தும் வண்ணம் ஏராளமான அருட்பாக்களை இயற்றி, இன்றைய பகுத்தறிவுக்கும் பொருத்தமானதொரு வாழ்க்கை நெறியைக் கண்டு, தம் ஐம்பத்தொன்றும் வயதில், 1874-ம் ஆண்டு தைமாசம் பூசநட்சத்திரத்தில் வடலூர் அருகே மேட்டுக் குப்பம் என்ற கிராமத்தில், சித்திவளாகம் என்கிற மாளிகையில் திருக்காப்பிட்டுக் கொண்டார்கள். அறையிலே தாளிட்டுக் கொண்டதும், சில மாதங்கள் கழித்து மாவட்டக் கலெக்டர் வந்து அதிகார பூர்வமாகத் திறந்து பார்த்தபோது அறையினுள் ஏதுமின்றியிருந்ததும், ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்டவரின் தூல தேகமானது யோக முறைகள் மூலம் இயற்கையோடு நம் கண்ணுக்குப் புலனுகாமல் விளங்கும் என்று நிருபணமானதும்; உலகம் அறிந்த அற்புதச் செய்தியாகும். அதிலிருந்து கடந்த நூறு ஆண்டுகளாகச் சன்மார்க்க இயக்கமானது வளர்ந்து வருகின்றது.

வள்ளலார் வாழ்ந்து வந்த காலத்தில் சொல்லிவந்த சீரிய கருத்துக்களைப் பரப்பும் திருப்பணியைச் சன்மார்க்க சங்கங்கள் இடைவிடாது நடத்தி வருகின்றன. சீர்திருந்தி, மூடநம்பிக்கைகளற்ற ஒரு வாழ்க்கை முறையைக் கடவுள் நம்பிக்கையோடு இணைத்து ஒழுகும் முறைதான் சன்மார்க்க வாழ்க்கை என்று சுருக்கமாகக் கூறலாம்.

இந்த உலகத்தில் எத்தனையோ நாடுகளில் எத்தனையோ விதமான மதங்களும் வாழ்க்கை முறைகளும் இருக்கின்றன. ஆயினும் நமது பாரதத்தில் உள்ளது போன்ற மதச் செல்வங்கள் வேறு எங்குமே கிடையாது. நம்முடைய தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், திருமந்திரம் திருப்புகழ் போன்ற ஞான நூல்களும் சைவ வைணவ சித்தாந்தங்களைக் கூறும் தத்துவ நூல்களும் எங்குமே இல்லை என்றும் கூறி மகிழலாம்.

தமிழ்நாட்டின் ஞானச் செல்வங்களுக்கெல்லாம் தலையாயது சமரச சுத்த சன்மார்க்கம். புலால் மறுத்து, கருணை வளர்த்து, ஆன்மநேயத்தினுல் ஆண்டவனை அடைய வழி காட்டும் நன்னெறியாக அது அமைந்திருக்கிறது. வள்ளற்பெருமான் தமது சன்மார்க்க நெறியைப் பரப்பப் படைத்த இடம் வடலூர்த் தலமாகும். வடலூர் மக்களே முன்வந்து சத்திய ஞானசபை அமைக்க அவருக்கு எண்பது ஏக்கர் நிலம் அளித்தார்கள். அந்த இடத்தில்தான் இன்றைய தினம் சத்திய ஞான சபையும், வள்ளலார் பெருமானே ஏற்றி வைத்த அணையாத அருட்சோதியும், அன்பையும் கருணையையும் கொண்ட தருமசாலையும், உருவாகியிருக்கின்றன.

புத்தமதத்தினருக்குச் சாரநாத் புனித இடம் என்ருல், வள்ளலார் பெருமானிடம் பரம பக்தி கொண்ட தமிழ் மக்களுக்கு வடலூரே புனித பூமி. இன்றைய தினம் அந்த வடலூர் நிலையைப் பாராட்டிச் சொல்ல முடியாது. அந்த இடத்தை உபயோகிக்கும் மக்களும் வள்ளற் பெருமான் அருளிய வாழ்க்கை நெறி முறைகளுக்கு மாறுபட்டு நடக்கச் சிறிதும் தயங்கவேயில்லை என்பதை வருத்தத்தோடு கூறத்தான்வேண்டும். கொல்லாமையை அருளிய அப்பெருமான் வாழ்ந்த இடத்துக்கு மூன்று மைல் சுற்றளவுக்காவது, அங்கு வாழும் மக்கள் கொல்லாமையைக் கடைப்பிடிக்கக் கூடாதா? உயிர்க் கொலையைத் தவிர்க்கக் கூடாதா?

நம் தமிழ்நாடு அரசின் கவனம் வடலூர்ப் பக்கம் கொஞ்சம் திரும்பவேண்டும் என்பது

என் கோரிக்கை. சாரநாத்தைப்போல் வடலூரையும் மூன்று மைல் சுற்றளவுக்கு 'உயிர்க் கொலை தவிர்க்கும் இடமாக' அறிவித்துச் சட்டமியற்றினுல் அது அவர்களுக்கு மேலும் பெருமையைத் தரும். ஏனெனில், வள்ளலாரை நன்கு ஆராய்ந்தவர்களுக்கு அவரைவிடப் பெரிய சமூகச்சீர்திருத்தவாதி வேறு எவரும் இருக்கமுடியாது என்ற பேருண்மை தெளியலாம். வடலூர்ச் சத்திய ஞானசபையைச் சுற்றி ஒரு புது உலகமே உதயமாக வேண்டும். அதைச் சுற்றி யாரும் எந்தப் பறவையையும், விலங்கையும் சுடக்கூடாது, எந்த உயிர்க்கும் அங்கே இடர் தோன்றக்கூடாது, துன்புறுத்தக் கூடாது. அங்கு வாழும் மக்கள் சன்மார்க்கிகளாய் வாழவேண்டும். புலால் உணவைக் கொண்டுவரவோ, சமைக்கவோ, உண்ணவோ அறவே அனுமதிக்கக்கூடாது.

சத்திய ஞானசபையைச் சுற்றி மூன்று மைல் அளவுக்குப் பசியமரங்கள் அடர்ந்த சோலையை உருவாக்க வேண்டும். அந்தச் சோலையில் மான்கள் துள்ளித் திரியவேண்டும். மயில்கள் ஆடவேண்டும். குயில்கள் பாடவேண்டும். கோலமலர்கள் பூத்துக் குலுங்கவேண்டும். அதனிடையே வள்ளலார் வகுத்த நெறிபற்றி ஆராய அறிஞர்கள் கூடவும், விவாதிக்கவும், பயிலவும் மண்டபங்கள் (சாரநாத் விகாரங்களைப்போல) அமைக்கப்பட வேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாக அமர்ந்து அருட்சோதி வள்ளலாரின் கருத்துக்களை அறிஞர் பெருமக்கள் விளக்கக்கேட்டு மகிழும் சன்மார்க்க மண்டபங்கள் உருவாக வேண்டும்.

இராமகிருஷ்ண மடத்துத் துறவிகளைப்போல் இங்கும் வள்ளலார் வழி பரப்பும் சீலத் துறவிகளைத் தயாரிக்கும் திட்டம் ஆரம்பிக்க வேண்டும். அந்த சத்திய ஞான வள்ளலார் மடத்துத் துறவிகள் உலகெங்கும் போய், வள்ளலார் வழியில் வாழ்ந்து காட்டிச் சமரச சன்மார்க்கப் பிரசாரம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யத் தகுதிபடைத்த உத்தமர்களைத் தேடிப்பிடித்துப் பயிலுவிக்கும் நிறுவனம் தொடர்ந்து நடைபெற ஒரு பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

இதையெல்லாம் சமரச சுத்த சன்மார்க்க சங்கங்களும், எங்கள் இராமலிங்கர் பணிமன்றமும், முடிந்த அளவு செய்து வருகின்றன. ஆனல் இன்னும் விரிவான முறையில் செயற்பட வேண்டியிருக்கிறது. உலகமெல்லாம் பலமொழி அறிவு படைத்த சன்மார்க்கத் துறவிகளைத் தயாரித்து அனுப்பும் பெரும்பணி இன்னும் தொடங்கப்படாமலேயே இருக்கின்றது. அதற்குத் தக்க சூழ்நிலையையும் அடிப்படையான அமைப்பையும் உருவாக்க நினைத்து வருகிறேம். சூழ்நிலையை அரசாங்கம்தான் ஏற்படுத்த முடியும். வடலூர்ச் சத்தியஞான சபையைச் சுற்றி எல்லோரும் கொல்லாமையை அனுசரிக்க வேண்டும் என்று இராமலிங்க மிஷனே, சன்மாக்க சங்கங்களோ உத்தரவிட முடியுமா? அதை அரசுதான் செய்ய முடியும்; செய்யவேண்டும்.

சமுக சீர்திருத்ததுக்காகவும், மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்காகவும், அரும்பாடுபட்ட புத்தரை மத்திய அரசு போற்றிக் கொண்டாடியது. அதே பணியைப் புரிந்து புத்தநெறிக்கும் மேலாக மரணமிலாப் பெருவாழ்வையும் உபதேசித்த இறைவனின் புனித தூதரான இராமலிங்க வள்ளலாரைப் போற்றத் தமிழக அரசு தயங்காமல் முன்வரவேண்டும். வடலூர் அபிவிருத்திக்கு விசேஷமானிய உதவியையும் சர்க்கார் அளிக்கவேண்டும். சாரநாத் அபிவிருத்திக்காக உத்திரப்பிரதேச அரசாங்கம் உதவியதைக் கண்டதும் என் மனம் அன்றே இப்படி எண்ணத் தொடங்கிவிட்டது.

வள்ளலாரின் தொண்டுகள் தமிழ்நாட்டில் சிறிய அளவில் ஆங்காங்கு தொடர்ந்து நடந்து கொண்டு வந்தன. இன்றைய தினம் அவை மேலும் வளர்ந்து வருகின்றன. இராமலிங்க அடிகளின் அருட்பாவை ஆராய்ந்து பேசும் அறிஞர் கூட்டம் விரிவடைந்து வருகிறது. வடலூர்ச் சத்திய ஞானசபையையும், அதைச் சுற்றியுள்ள நிலையங்களையும், பெருவெளியையும் சிறப்பாக அமைக்கும் திருப்பணி என் தலைமையில் ஆரம்பமாகி நடந்து வருகின்றது.

சத்திய ஞானசபைத் திருப்பணி :

சத்தியஞான சபையின் கூரையை முற்றிலும் புதுப்பிக்கும் பணி நடந்து கொண்டு இருக்கிறது. அகவல் மண்டபத்தின் பழுதுபட்ட மேல்தளம் முற்றிலும் அகற்றப்பெற்றுப் புதிதாகப் போடப்பட்டுள்ளது. அதன் தரைக்கும் சபையில் உள்ள தேரைக்கும் பளிங்குக்கல் பாவி

வருகின்றோம். தரிசன மண்டபம் (இளஞ்சபை உள்ள ஓட்டுக்கொட்டகை) முற்றிலும் புதுப்பித்தல் அவசியம். இவையெல்லாமாக ஞான சபைத் திருப்பணிக்குச் சுமார் ஆறு அல்லது ஏழு இலட்சம் ரூபாய் செலவாகும். வடலூர்ப் பெருவெளி சுமார் என்பது ஏக்கர் பரப்பைத் தக்கவாறு பாதுகாக்கவும், பராமரிக்கவும் பெருந்திட்டமொன்று தயாரிக்கப்பெற்று வருகிறது. வடலூர்ப் பெருவெளியைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் வேலி அமைத்தல், நிலச் சீர்த்திருத்தம், பருக்கைக் கல்வெளியைப் பாதுகாத்தல், பச்சிலைத்தோட்டம், புல்வெளி முதலியன ஏற்படுத்துதல், குழாய்க்கிணறு, மேல் நிலை நீர்த்தொட்டி முதலியனவற்றை அமைத்து விழாக்காலங்களில் கூடும் திரளான மக்களுக்கு வேண்டிய நீர் வசதியும், ஆண்டு முழுவதும் கட்டுப்பாடின்றிப் பராமரிப்புக்கு வேண்டிய நீர் வசதியும் ஏற்படுத்துதல், பெருவெளிக்குள் தூசுபடியாதபடி சாலைகள், பாதைகள் அமைத்தல், வழிபடுவோர் தங்குமிடம், சொற்பொழிவு மண்டபம், விருந்தினர் விடுதி, நிர்வாக அலுவலகம் முதலியன கட்டுவித்தல் ஆகிய பிறவற்றுக்குச் சுமார் இருபது இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கருதுகிறேன். இவைகளையும் செய்யவேண்டும்.

வள்ளற்பெருமானுடைய சித்தி நூற்றாண்டு விழா 1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் தொடங்குகின்றது. இதனைப் பெரிய அளவில் மாவட்டந்தோறும் மாநிலந்தோறும் கொண்டாடவேண்டும். பெருமானுடைய அருள் உபதேசங்களை விளக்கும் நூல்களையும், உருவாக்கி வருகிறோம். பெருமானுடைய திருவுருவத்தை அஞ்சல் தலையில் பொறிக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் விடப்பட்டிருக்கிறது. தமிழக அரசு இப்பணியில் ஆர்வத்தோடு உதவி வடலூர்ப் பெருவெளியைச் சன்மார்க்கத்துக்கு ஒரு சாரநாத்தாக அமைதி, அழகு, அருள் நிலவும் திருத்தலமாக மாற்ற வேண்டும். சித்தி நூற்றாண்டு விழா ஆண்டிலேயே இந்தச் சிந்தனைகளும் நிறைவேற அருட்பெருஞ்சோதி, அருளையும், ஆற்றலையும் நமக்கு வழங்கும் என்று நம்புகின்றேன்.



புதுக்கோட்டை அரசினர் தொழுநோய்—பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் அருள்பிரசாதம் வழங்கும் விழா: பங்கு பெற்றுள்ளோர்:- நாள் 2—10—73 தவத்திரு குன்றக்குடி அடிகளார் M.L.C. அவர்கள், திருமிகு சி. வ. பாலகிருஷ்ணன் அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர், புதுக்கோட்டைத் திருக்கோயில்.

# சேவூர்க் கல்வெட்டு

திரு. இரா. நாகசாமி, எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

மேல் சேவூரில் ஒரு கல்வெட்டுபடி எடுக்கப் பட்டுள்ளது. அது சில அரிய செய்திகளைத் தருகிறது. அது இரண்டாவது இராசாதிராச சோழன் காலத்திய கல்வெட்டு. சற்றேறக் குறைய கி.பி. 1175-ஆம் ஆண்டைச் சார்ந்தது. செங்கேணி அம்மையப்பன் பாண்டிய ராச ராசச் சம்புவராயன் எனப்பெயர் பெற்ற ஒருவர் சேவூரில் உள்ள விருஷபபுரீசுவரர் கோயிலில் அர்ச்சனைக்காக நிலம்கொடுத்ததை அக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோயில் தெய்வத்தின் பெயர் திருத்தான் தோன்றி ஆளுடையார் என அக்கல்வெட்டுக் கூறுகிறது.

சேவூர் செயங்கொண்ட சோழமண்டலத்தில், உத்தம சோழவளநாட்டில் இருந்தது. வழி பாட்டுக்கு விடப்பட்ட நிலம் ஆரக்கராமூர் என்னும் ஊரில் இருந்தது. அவ்வூர் ஆமூர் நாடு ஓய்மாநாட்டின் ஒரு பகுதி. ஓய்மா நாட்டுக்கு விசயராசேந்திர சோழ வளநாடு என மற்றொரு பெயரும் இருந்தது என இக்கல் வெட்டால் அறிகிறோம்.

இந்நிலத்தை அர்ச்சனைச் செலவுகளுக்காக விட்ட ராசராச சம்புவராயரின் பாட்டனார் இதை ஊராரிடமிருந்து விலை கொடுத்து வாங் கியிருந்தார். அவர் இந்நிலத்தோடு ஒரு மனையும், தோட்டமும் வாங்கியிருந்தார். வாங்கி அதை அவர் அனுபவித்து வந்தார். அவர் பெயரால் அதை மீண்டும் தனக்கே தரவேண்டி அரசனின் ஆணைபெற்று, ஊராரிடமிருந்து பூமிப் பிரமாணம் எழுதி வாங்கினார்.

“செங்கேணி அம்மைஅப்பன் பாண்டிய
ராஜராஜ சம்புவராயரேன்
ஜயங்கொண்ட சோழமண்டலத்து,
உத்தம சோழவளநாட்டு, சேவூர்
திருத்தோன்றி ஆளுடையார்க்கு அர்ச்சனு
சேஷமாக நான் விட்ட நிலமாவது
இம்மண்டலத்து ஒய்மாநாடான விஜய
ராஜேந்திரசோழ வளநாட்டு
ஆமூர் நாட்டு ஆரக்கராமூரான ராஜேந்திர
சோழ நல்லூரில்
எங்கள் பாட்டனார் அம்மை அப்பன்
குலமாணிக்கம் பாண்டிநாடு கொண்டார்
ஊரார் பக்கல் விலை கொண்டுடைய
மனையும் விளை நிலமும்,
தோட்டமும், அனுபவித்து வாராநிற்க,
இத்தேவற்கு (ராஜாதிராஜதேவர்க்கு)
அஞ்சாவது (ஆட்சியாண்டு)
பழயகாணியாளரே பெறுவதாகப்
பிரசாதம் செய்தருளி உள்வரியும் பெற்று
ஊரார் சம்மதிக்கிறபோது என் காணி
எனக்கே பிரமாணம் பண்ணித்தந்த
பிரமாணப்படி ஸ்ரீ மெய்க்கீர்த்தி எழுதி”

எனக் கல்வெட்டு கூறுகிறது.

இங்கு நமக்கு ஒரு ஐயம் எழலாம். பாட்டன் ஊராரிடம் பொருள் கொடுத்து வாங்கிய நிலம் பெயரனின் காணி. இதை மீண்டும் அரச ஆணைபெற்று, ஊராரிடம் அனுமதி, பதிவு (பிரமாணம்) வாங்குவானேன் எனத்தோன்றும் பாட்டனார் விலைகொடுத்து ஊராரிடமிருந்து வாங்கியது அனுபவித்துக்கொள்ளும் உரிமை மட்டும்தான். அது இக்கல்வெட்டில் ஊரார் வாசகமாகக் குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து தெளிவாகிறது.

ஊரார் கூறுகிறார்கள், இந்நிலம் எங்களுக்குச் சொந்தமானது. இதைப் பழங்காணி யாளருக்கே கொடுத்துவிடுங்கள் என அரசன் ஆணை வந்தது. அதைப்பெற்றுக் கொண்டு, இந்நிலத்துக் கொடுக்கப்படவேண்டிய உள்வரி யும் பெற்றுக்கொண்டு இவருக்கு நாங்கள், விற்பதற்கும், ஒற்றி வைப்பதற்கும், தானம் கொடுப்பதற்கும் உள்ள சகல உரிமைகளும் கொடுக்கச் சம்மதித்துக் கொடுக்கிறோம் என்று ஊரார் கூறியதாக அக்கல்வெட்டு உள்ளது.

கல்வெட்டில் ஊரார் சொல்வதைக் கவனிப்போம்.

"பழங்காணி ஆளரே பெறுகவென்று
எங்களுக்கு சொம்மான
பூமிக்கு, பிரசாதம் செய்தருளின
திருமுகமும் உள்வரியும் பெற்று
எங்களில் சம்மதித்த இடத்தில், இவற்கு
இம்மனையும் தோட்டமும்,
விளைநிலமும், முன்பு நாங்கள் கொடுத்த
படியே மேல்நோக்கினமரமும்,
கீழ்நோக்கின கிணறும், இவற்கு
விற்றொற்றி, பிரதிகிரய தானங்களுக்கு
உரித்தாவதாக சம்மதித்துக் கொடுத்
தோம். ஆரக்கராமூரான
ராஜேந்திர சோழ நல்லூர் ஊரோம்".

இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் செய்தி இது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊராருக்குப் பொதுவான நிலம் உண்டு. இன்று பஞ்சாயத்து நிலம், முனிசிபாலிடி நிலம் என்கிறோமே அதுபோல. அந்நிலத்தை அனுபவித்துக் கொள்ளும் உரிமை பெறலாம். அவ்வாறு பெறும்போது அதற்கு ஒரு குறிப்பிட்ட பொருள் ஊர்ச்சபை கொடுக்க வேண்டும். அதை அனுபவ உரிமை என்று கூறலாம். ஆனால் அது அனுபவ உரிமைதானே ஒழிய, விற்பதற்கோ அடமானம் வைப்பதற்கோ (ஒற்றி வைப்பது) தானம் கொடுக்கவோ உரிமை இல்லை. அவ்வாறு வேண்டுமானால் ஊரார் சம்மதிக்கவேண்டும். இவ்வாறு நிலத்தை அனுபவ உரிமை பெறுவது காணி ஆண்மை என்று கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு அனுபவித்து வருகிற நிலத்தை முழு உரிமை ஆக்கிக்கொடுப்பதற்கு அரசனுக்கு அதிகாரம் இருந்தது. அவன் ஆணை இட்டு இதுபோல் முன் அனுபவித்து வந்த காணி ஆளருக்கு முழு உரிமை அளித்தான். அரச ஆணை இருந்த போதிலும் ஊர்ச்சபையும் அதை ஏற்றுப் 'பிரமாண இசைவு' அளிக்க வேண்டும். அதற்குப் பின்னரே முழு உடைமை ஒருவருக்குக் கிடைக்கும் என அறிகிறோம். ஊர்ச்சபைக்கு அக்காலத்தில் போதிய சுதந்திரம் இருந்தது என்பதும், ஊர்ப்பொதுச் சொத்துக்களைப் பற்றிய ஆணை இடும் உரிமை அரசுக்கு இருந்தது என்றும் இதனால் அறிகிறோம். அவ்வாறு அரசு ஆணை பெற்று ஊரார் பிரமாணம் தந்த பின்னர் மெய்க்கீர்த்தி எழுதப்பட்டது எனவும் அறிகிறோம். கல்வெட்டிலேயே "ஸ்ரீமெய்க்கீர்த்தி எழுதி" என எழுதப்பட்டுள்ளது ஒரு குறிக்கத்தக்க செய்தியாகும்.

இக்கல்வெட்டில் மனை, தோட்டம் இவற்றின் அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சோழர் காலத்தில் உரிமைகளுக்கு எவ்வளவு தெளிவாகக் கணக்குகள் வைக்கப்பட்டிருந்தன என அறியலாம்.

"மனை வடக்கில் தெருவில் வடசிறகில்
ராஜேந்திரசோழப்
பெருந்தெருவிற்கு மேற்கு; கங்கை
கொண்ட சோழப்
பெருந்தெருவிற்குக் கிழக்கு; மனை ஏழினால்
கீழ்மேல்
கோல் 21க்கு வால் நீளங்கோல் ஏழாக
குழி 107ம்,
தோட்டத்தில் ஸ்ரீதேவர்கருணாகரவாய்க்
காலுக்கு வடக்கு; ஆறுங்கண்ணாற்றில்
நாலாஞ்சதுரத்தில் தெற்கடைய நிலம்
நாலுமாவில் கீழக்கடைய
502 குழி கொண்டது ஒரு மாவாக வந்த
நிலம் இரண்டுமாவும்"

என்று வருகிறது காண்க!

இக்கல்வெட்டில் மற்றொரு சிறப்பும் காண்கிறோம். ஊரார் சம்மதித்து அவர்கள் பணிக்க ஊர்க்கணக்கன் பொன்மலை கற்பகம் என்பவன் இதை எழுதினான். இதில் ஊரார் கையெழுத்திட்டனர். இவ்வாறு எழுதுபவர்கள் "இது என் எழுத்து" என்று எழுதுவது வழக்கம். "இவை வல்லங்கிழான் சாந்திநாதன் குமரன், எழுத்து" என்பது போலப் பல பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. சிலருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அவர்களுக்கு ஊர்க்கணக்கன் வாசித்துக்காட்டுவான். அதுகேட்டு அவர்கள் ஒப்புதல் அளிப்பார்கள். அவர்கள் பெயரும் குறிக்கப்படும். "இது கொற்றமுழான் பத்தன் சங்கனை என்றால் எழுதப்படிக்கத் தெரியாதவன் எனப்பொருள். அதனால் ஊர்க்கணக்கனே எழுத்திட்டிருக்கிறான்.

இதிலிருந்து மற்றொன்றும் அறிகிறோம். ஊர்ச்சபையில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களும் அங்கத்தினராகப் பணிபுரிந்திருக்கிறார்கள். இதுபோன்ற பல அரிய செய்திகளைக் கல்வெட்டுகள் நமக்கு எடுத்துறைக்கின்றன.

# அப்பர் தேவாரத்தில் ஆலயங்கள்

'கம்பன்அடிப்பொடி' திரு. சா. கணேசன் அவர்கள், M. L. C., காரைக்குடி.

முன்னுரை :

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது அவ்வைப் பிராட்டியாரின் அருள் வாக்கு. கோயிலிற் சென்று வழிபடுவதே மிக்க பயனுடையது என்பது கருத்து. இதை வலியுறுத்தவே ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று உலகநீதி கூறிற்று. இவையும், இவைபோன்ற பிறபலவும், ஆலயம் அல்லது திருக்கோயில் மக்களின் நல்வாழ்வுக்கும், நற்கதிக்கும் எத்துணை இன்றியமையாதது என்பதைத் தமிழர்கள் தொன்று தொட்டு நெடுங்காலமாக நன்குணர்ந்துள்ளார்கள் என்பதைத் தெளிவுறப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பரம்பரையில் வந்தவர் தாமே அப்பர் பெருமானும்! அனைத்துக் கலைகளையும் ஆய்ந்து தெளிந்த அருட்செல்வர் அவர்!

''நிலைபெறுமாறு எண்ணுதியேல்
நெஞ்சே நீவா :
நித்தலும் எம்பிரானுடைய
கோயில் புக்குப்,
புலர்வதன்முன் அலகிட்டு,
மெழுக்கும் இட்டுப்,
பூமாலை புனைந்து, ஏத்திப்
புகழ்ந்து பாடித்,
தலைஆரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்,
அலைபுனல்சேர் செஞ்சடை எம்ஆதீ
என்றும்,
ஆரூரா என்றுஎன்றே அலறுநில்லே''

எனறும் தம் பேரியல்பு தோன்ற, அனுபவ நிலையில் அறிவுறுத்தி மகிழ்கின்றார்! இந்த மெய்ப்பாடுகள் தோன்ற வேண்டும். உணர்ச்சிப் பெருக்கெடுக்கக் காட்சியே உதவும். நம் அனையோர் அகத்துள் கண்டு இறைவனை உணர்தல் என்பது அசாத்தியம். திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும். அப் புனிதத் தலத்தில் மனம் ஈடுபட்டுப் பணிகள் ஆற்றி, அங்குள்ள எம்பெருமான் திருமேனிக்கு அலங்காரங்கள் செய்து, அந்தத் திருமேனிக்குரிய பரமனைப் பலவாறு அவன் கீர்த்திகள் புலப்படுமாறு பாடி ஆடி வாழ்த்தி வழிபட வேண்டும். அப்போதுதான் நம்மனத்தில் அவனுடைய குறைவிலா நிறைவுக்கோலம் படியும். அவ்வுணர்வு ஏற்பட, நாம் நம் வயம் இழந்து இறை வயம் ஆவோம்.

கோயிலும், அங்குள்ள அருள் சுரக்கும் கலைக் கருவூலங்களான படிமங்களும், திருமேனிகளும் இன்றேல், முழுநிலை அறிவினர்களை யன்றி மற்றையோர் நல்ல முறையில் குறிக்கோளை அடையும் நெறியை உணரவும் முடியாது. ஆகவே தான், நம் சமயச்சான்றோர்கள் அனைவரும் உருவ வழிபாட்டை வற்புறுத்தத் தவறுவதில்லை. இத்தகைய பெரும் பயனை நல்கும் கோயில்கள் தோன்றிய வரலாற்றை ஆயப்புகுவோமேயானால் அது பெரிதும் நீண்டு விடும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலேயே கோயில் தோன்றி விட்டது. அதுதான் முதற் கோயிலான குகைக்கோயில். அங்கு வணங்கப் பட்ட தெய்வம் ''குகன்'' எனப் பெயர் பெற்றான். ஆகவேதான் முருகன், முதல் நிலமான குறிஞ்சிக்குத் தெய்வம் ஆனான். மக்களின் எண்ணிக்கை வளர்ச்சிக்கும், எண்ண வளர்ச்சிக்கும் ஏற்ப மக்களினம் நெய்தல், முல்லை, மருதம் ஆகிய மற்றை மூவகை நிலங்களிலும் குடியேறி வாழத் தொடங்கியது. அங்கெல்லாம் எப்படியோ ஆலயத்தை அமைக்கத் தவறினார்களில்லை. கொடிக்கூடம், மரநிழல், காவணம், குடில், மண்தளி, சுடுமண்தளி, மரப்பலகைகளால் சமைத்த அம்பலம், குடைவரை, ஒற்றைக் கற்றளி, கற்கோயில் என்று அவை படிப்படியாய் வளர்ந்தன.

அவற்றின் வகை, தொகைகளை எல்லாம் ஆய இங்கு இடம் போதாது.

பலவகைக் கோயில்களும், அடிநாளிலிருந்து நீர் நிலைக்கு அருகிலேயே அமைக்கப்பெற்ற உண்மையை, நாம் இன்றும் கண்டு தெளியலாம். ஒருகால் நீர்நிலை அருகில் இன்றேல், கோயில்களின் அருகே குளம் தொட்ட அருமையை உணரலாம். பொதுவாகக் கான், காவு, கடல், மலை, ஆறு, ஏரி, பொய்கை அருவி போன்ற அமைதியும், அழகும், தூய்மையும் உள்ள இடங்களில் அல்லது அருகில் தான் ஆலயங்கள் அமைக்கப்பட்டன என்பதை ஊன்றிப் பார்த்தால், முன்னையோர் முறையின் அருமை பெருமைகளை நாமும் கூட நன்குணரலாம். அங்ஙனம் ஆக்கிய ஆயிரம் பல்லாயிரம் ஆலயங்கள் அமைத்தது அமைத்தபடியே இன்றில்லை. கால தேச எண்ணங்கட்கு ஏற்ப எத்தனை எத்தனையோ மாற்றங்களை அடைந்து அவை விளங்குகின்றன.

அந்தப் பழங்கால ஆலயங்களில் ஒரு சிலவற்றின் படிவங்கள் ஆகவே, மாமல்லபுரத்தில் சிலவற்றை மாமல்லன் காலத்துப் பெருந்தச்சர்கள் ஆக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றை 'ரதங்கள்' என்று கூறி நாம் நமது அறியாமையைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அத்தகைய ஆலயங்களில், அப்பர் பெருமான் சிலவகையை நமக்குப் புலப்படுத்தியருளுகிறார். முதலில் பாசுரத்தைப் பார்ப்போம். பின்னர்க் கோயில் வகைகளைப் புலப்படுத்திக் கொள்வோம்.

" பெருக்கு ஆறு சடைக்கு
அணிந்த பெருமான் சேரும்
பெரும்கோயில் எழுபதினோடு
எட்டும், மற்றும்
கரக்கோயில், கடிபொழில்சூழ்
ஞாழல் கோயில்,
கருப்பறியல் பொருப்பு அனைய
கொகுடிக் கோயில்,
இருக்கு ஓதி மறையவர்கள்
வழிபட்டு ஏத்தும்
இளம்கோயில், மணிக்கோயில்,
ஆலக்கோயில்,
திருக்கோயில், சிவன் உறையும்
கோயில்..."

(1) பெருங்கோயில்: 'இதையே மாநகர், என்றும் கூறுவர். பல கோட்டங்களும் விமானங்களும், மண்டபங்களும், திருச்சுற்றுகளும், திருமாளிகைப் பத்திகளும், கோபுரங்களும் கொண்டு, அனைத்து அங்கங்களுடன் விளங்குவது. திருவாரூர் மதுரை ஆனைக்கா திருவண்ணாமலை முதலியன, பெருங்கோயில் வகையாம்.

(2) கரக்கோயில்: மரக் கைகள் பரப்பி, அதன் மீது புல் கீற்று அல்லது ஓடு வேய்ந்து அமைக்கப்படுவது. சாலை, அர்த்தசாலை, கூடம் என இது மூவகையாக அமைக்கப்படும். தில்லைச் சிற்றம்பலம் இவ்வகையாம். இவ்வகை இன்று கேரளத்தில் மிகுதியாகக் காணப்படும்.

(3) ஞாழல் கோயில்: பல சிறு மரங்கள் சூழ்ந்த ஒரு கூடாரம் போன்ற இடத்தில் மரங்களின் நிழலில் அமைக்கப்படும் மேடைக் கோயில். பெரும்பாலும் வேலிசூழ்ந்த காவணத்தில் அமைக்கப்படும். இக்கோயிலே பலகால் மண்டபங்கட்கு வித்தாயிற்று என்னலாம். (ஞாழல்—கொன்றை). இதற்குக் கூரை இல்லை.

(4) கொகுடிக்கோயில்: முல்லை, பிரம்பு போன்ற கொடிவகை கூடம்போல் ஓங்கி விளங்கி நிழல் தவழும் கொடிக்கூடம். " கருப்பறியல்பொருப்பு அனைய " என்ற அடைமொழியால், உள்ளீடு குடைந் தெடுக்கப்பட்ட மலை போன்ற தன்மையை அப்பர்பெருமான் அழகாக நமக்கெல்லாம் உணர்த்தியருளும் கருணைத் திறத்தை மனங்கொள்ள வேண்டும்.


(5) இளங்கோயில்: இதைச் சில அறிஞர்கள் 'பாலாலயம்' எனக் கொள்கின்றனர் எளியேன் கருத்து மாறுபாடுடையேன். இளங்கோயில் என்பது திருவுண்ணாழி (கர்ப்பக்கிருகம்) மட்டும் அமைந்த கோயில். பின்னே வளரக்கூடிய நிலையுடையது. மீயச்சூர் இளங்கோயில் போன்றவற்றை நோக்க வேண்டும்.

(6) மணிக்கோயில்: இது வண்ணந் தீற்றிய விமானத்தையுடைய சிற்பங்களுடன் கூடிய அழகிய சுதை வேலையுள்ள கோயிலாகும். மண்ணீட்டாளர் கைவன்மை புலனாகும் இக் கோயில் வகைகளில். திருவதிகை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

(7) **ஆலக்கோயில் :** நாற்புறமும் நீர்சூழ்ந்த இடத்தில் அமையும் கோயில். தஞ்சை, வலிவலம் முதலிய ஊர்க்கோயில்களை நினைவு கூரலாம்.

(8) **திருக்கோயில் :** பஞ்சப் பிரகாரங்களுடன் கூடிய பெருங்கோயில் அல்லாவிட்டாலும், பெரிய அளவில் சிறிய நலங்களுடன் கூடிய பல மண்டபங்களும், கொடிமரம், சுற்றுலயங்கள் முதலியவையும் அமைந்த ஆலயம் ஆகும்.

இங்ஙனம் அப்பரடிகள் கோயில் வகைகளை ஒருவாறு எடுத்து விளக்கியருள்வதை மனத்தில் கொண்டு, பல்வேறு வகைகளில் தென்னாட்டில் திகழும் திருக்கோயில்களைக் கண்டு களி இன்பம் துய்ப்பதுடன், மனித வாழ்வின் குறிக்கோளை எய்த அவனருளையே துணையாய்க் கொண்டு உய்தி பெறுவோமாக.



சேலம் அருள்திரு. சுகவனேசுவர சுவாமி கோயிலில்,
ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால் வழங்கும் விழா

(2.10 73). கோவைத் துணையாணையர் திரு. M. சூர்யராஜ், B.A.,B.L. அவர்கள் தலைமையில், சேலம் நகர மன்றத் தலைவர் திரு ஆர். அர்ச்சுனன் அவர்களால் துவக்கி வைக்கப்பெற்றது. காலை மாலை இரு வேளையும் 25 குழந்தைகளுக்குப் பால் வழங்கப்படுகின்றது.

# உலகியலும், மெய்ந்நெறியும்

தருமையாதீனப் புலவர்
மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், தருமபுரம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவதாகிய திருமந்திரம், திருமூல நாயனுரால் அருளிச் செய்யப்பெற்றது என்பது பலரும் அறிந்தது. இதனை இந்நாயனுர், "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் கருணையுள்ளத்தோடு அருளிச் செய்தார். உயர்ந்த நூல்களைச் செய்த பெரியோர் அனைவரும் அந் நூல்களை இங்ஙனம் உலகம் உ தற்பொருட்டே செய்தனர்.

'உலகம் நன்மை அடையவேண்டும் என்னும் அருள் உள்ளத்தால்நூல்களைச் செய்த பெரியோர்கள், அந் நூல்களால் உலகிற்கு உணர்த்தும் நெறி இரண்டு. அவை, 'உலகியல், மெய்ந்நெறி' என்பன. உலகியலாவது, 'அறம், பொருள், இன்பம்' என்பவற்றை அடைவிக்கும் நெறி. "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்-அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல" என்ற புறநானூற்றின் படி, பொருளும், இன்பமும் அறத்துள் அடங்குதலால், உலகியலாவது 'அறநெறி' என்றே கூறலாம். இதில் வீடு பற்றிக் குறிப்பால் சிறிது கூறப்படுமே யல்லாது விரிவாக எடுத்துக் கூறப்படாது.

இத்தன்மைத்தான அறநெறியில் மக்கள் மெய்ந்நெறிக்கு மாருகாமல், வையகத்துள் வாழ்வாங்கு வாழும வழி பற்றிய ஆராய்ச்சி நிகழுமேயல்லாது, பொருளியல புகள் பற்றிய ஆராய்ச்சி நிகழாது. அதனுல், உலகியல் நூல்களில் கருத்து வேறுபாட்டிற்கு மிகுதியாக இட மில்லை. ஆகவே, உலகியல் நூல்களை, 'அனைவர்க்கும் ஒத்த பொதுநூல்' என்றே சொல்லலாம். அவற்றுள்ளும் திருவள்ளுவ நாயனுர் அருளிச்செய்த திருக்குறள், உயர்ந்த பட்சமாக எந்த அளவுக்குப் பொதுவாகச் செய்ய இயலுமோ, அந்த அளவிற்குப் பொதுவாகச் செய்யப்பட்டது. ஆகவே, திருக்குறளோடு சிறிது மாறுபடினும், அது பொதுவாக அறத்தோடு மாறுபடுவதேயாய் முடியும்.

இனி மெய்ந்நெறியாவது, பிறப்பற்ற வீடுபேற்றைத் தரும். இஃது உயிர், தொன்று தொட்டு விடாது பற்றிவரும் பொய்ப் பொருட் பற்றுக்களைவிடுவதும், இதுகாறும் பற்றியறியாத மெய்ப்பொருளைப் பற்றுவதுமாகும். இந்நிலை, பொருளியல்புகளை உள்ளவாறு உணரும் முகத்தால், "பொய்ப் பொருள் எது? மெய்ப் பொருள் எது?" என்று ஆராய்ந்து உணர்ந்தாலன்றி வாய்க்கமாட்டாது. ஆகவே, மெய்ந்நெறியில் பொருளியல் புகளின் ஆராய்ச்சியே, 'தத்துவ விசாரணை' எனப்படுகின்றது. இவ்வாராய்ச்சியில் கருத்து வேற்றுமை மிகுதியாய் இருத்தல் இயல்பு. அவ்வேற்றுமைகளே மத வேறுபாடு அல்லது சமய வேறுபாடு எனப்படுகின்றன. பல வேறுபட்ட சமயங்களுள், "உண்மைச் சமயம் இது' எனத் துணிதல், அவரவரது அறிவின் நிலையைப் பொறுத்ததேயன்றி, அதற்கு வேறு ஒருவரும் பொறுப்பாவதற்கில்லை. எனினும், காய்தல், உவத்தல்களை அகற்றி நடுவு நின்று, 'சுருதி, யுக்தி, அனுபவம்' என்னும் மூன்றற்கும் ஒப்பவைத்து நோக்கின், உண்மை ஒருவாறேனும் விளங்காமற் போகாது. அவ்வாறு உற்று நோக்கி உணர்ந்த பெரியோர் 'சைவ சமயமே மெய்ச் சமயம்' எனக் கூறியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக, தாயுமானவ அடிகள் பற்றும், பற்றின்மையும் காரணமாக, ஒன்றை உயர்த்தியும், ஒன்றைத் தாழ்த்தியும் கூறும் போக்குடையவரல்லர். நடுவுநின்று உண்மை காண்பதில் முனைந்து நிற்பவர் என்பதை அனைவரும் உடன்படுவர். அவர் "சைவ சமயமே சமயம்" என்றும் "இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம், அழகிது அந்தோ" எனறும் கூறியிருத்தலைக் காண்கின்ருேம். ஆகவே, 'உலகியல் நூல்களில் தலையாயது திருக்குறளாய் இருத்தல்

போல, மெய்ந்நெறி நூல்களில் தலையாயவை சைவத் திருமுறைகள்' என்று அறுதியிட்டுக் கூறலாம்.

சைவத் திருமுறைகளில் பெரும்பாலன தோத்திரங்களாகவும், திருத்தொண்டர் புராணம் அடியார்களது வரலாருகவும் ஒரு பக்கம் நிற்க, திருக்குறள் போல நூலாக (சாத்திரமாக) விளங்குவது திருமந்திரம் ஒன்றே. இஃது ஒரு நிறைவுடைய முழு நூலாகும். திருக்குறள், அறம் பொருள் இன்பம் மூன்றையும் கூறி, வீட்டையும் அறத்துப்பாலுள் அடக்கிச் சுருங்கக் கூறுதலால், அது நிறைவுடைய ஓர் உலகியல் நூல். திருமந்திரம் உலகியலாகிய அறம் பொருள் இன்பங்களைச் சுருங்கக் கூறி, வீட்டு நெறியை விளங்க விரித்துக் கூறுதலால், இஃ ஒரு நிறைவுடைய மெய்ந்நெறிநூல்.

''திருமந்திரம் ஒருவருக்கும் பொருள் விளங்காது; அதன் பொருளை அதனைச் செய்த திருமூலர் போன்ற யோகிகள் அல்லது சித்தர்களே அறியமுடியும்; மற்றவர்கள் பொருள் கொள்வது எவ்லாம் வெறும் பேச்சு'' என்று சொல்லி, அதன் பொருளை அறியத் தாங்களும் சிறிதும் முயலாமல், முயல்வோரையும் இகழ்ந்து, அதனைச் சிறிதும் அணுகவொட்டாமல் செய்கின்ற திருப்பணியோடு நின்றுவிடுவர் சிலர். திருமந்திரத்தில் சொல்லப்பட்ட பொருள்களின் அனுபவம் கிடைப்பது அரிதாய் இருக்கலாம். 'அந்நூல் இன்ன பொருளைச் சொல்கின்றது என்பதுகூட ஒருவருக்கும் விளங்காது' என்ருல், ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று செய்யப்பட்ட அந்நூலின் குறிக்கோள் என்னுவது? மற்றைய நூல்கள் போலத் திருமந்திரம் எளிதில் பொருள் விளங்காமல் இருக்கலாம். ஒன்றுமே விளங்காத பகுதியும் சில இருக்கலாம்; ஆயினும், 'நூல் முழுவதுமே ஒன்றும் விளங்காது' என்னும் கூற்று எவ்வாறு பொருந்தும்? ஆகவே பிற நூல்கள் பற்றிய கல்வி கேள்வி அனுபவம் முதலியவற்றைக் கொண்டும், அறிவுடையோர் சிலரை அடுத்து நின்றும் திருமந்திரத்திற்கு இயன்ற அளவு பொருள் காண முயலுவதே நன்னெறி நாடும் நன்மக்கட்கு அழகாகும்.

முதலில் கூறியபடி திருமந்திரத்தில் பாயிரத்திரத்திற்குப் பின், நூல் தொடக்கத்தில் 'உபதேசம்' என்பது போகப் பின்னர் உலகியற் பகுதிகளே சொல்லப்படுகின்றன. அவற்றுள் முதற்கண் நிலையாமை, பலவற்றை நாயஞர் கூறுகின்ருர். மற்றைய நூல்களில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, இவைகளே சொல்லப்படுகின்றன. திருமூலர், இவற்ருேடு, உயிர் நிலையாமை என்ற ஒன்றைக் கூறுகின்ருர். யாக்கை நிலையாமைக்கு வேருக, 'உயிர் நிலையாமை' என்பது யாது என்ற ஐயம் எழுகின்றது. உயிர் என்பது அதன் அறிவையேயாகும். அஃதாவது ஒன்றை 'நன்று' எனத்துணிந்த அறிவு, பின் அதனையே 'தீது' என எண்ணுகின்றது. இவ்வாறே தீது என நினைத்ததைப் பின் நன்று எனக் கருதுகின்றது. இது பற்றியே, 'அறம் செய்ய நினைத்தால், அப்பொழுதே செய்துவிட வேண்டும்; காலம் தாழ்த்தலாகாது' என்றும் கூறுவர். இத்தன்மையான அறிவு நிலையாமையாலும் உயிர் அல்லற்படுகின்றது. அதனைத் திருமூலர் அறிவுறுத்தருள்கின்ருர்.

''ஆம்விதி நாடி அறம்செய்மின்; அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்;
நாம்விதி வேண்டும் நெறிசொலின் மானுட
ராம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே''

என்பது அவற்றுள் ஒரு திருமந்திரம்.

மற்றும் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, அந்தணர் ஒழுக்கம், அரசர் ஒழுக்கம் வான்சிறப்பு, அறன் செய்வான்திறம், அறன் செயான் திறம் அன்புடைமை, கல்வி, கல்லாமை, கேள்வி கேட்டமைதல் , நடுவு நிலைமை என்று அறங்கள் பலவற்றையும் திருமூலர் கூறியுள்ளார். பின்னர்ப் புராண வரலாறு, மந்திரங்கள், யந்திரங்கள், (சக்கரங்கள்) அட்டாங்க யோகம், அட்டமாசித்தி, சமயங்களின் வகை, சரியை, கிரியை, ஞானம், குருபத்தி. சிவபத்தி, அடியார்பத்தி, திருக்கோயில் வழிபாடு முதலிய பலவும் திருமந்திரத்தில் விரிவாகக் கூறப்படுகின்றன. எனவே உலகியலையும், மெய்ந்நெறியையும் ஒருங்குவைத்து, மெய்ந்நெறியை முதன்மைப்படக் கூறுகின்ற நிறைநூலாகிய திருமந்திரத்தை, மக்கள் நன்குணர்ந்து பயன் பெறுதல் தக்கதாகும்.

வாழ்க திருமந்திரம்!

# திவ்வியப் பிரபந்தத் திருப்பாசுரங்கள்

(சிலவற்றின் செம்பொருட்டெளிவு விளக்கம்)

மகாவித்வான்
திரு கி. வேங்கடசாமிரெட்டியார் அவர்கள்.

முன்னுரை :

பிற சமயத்தவர்களுள் ஒரு சிலர், திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் சிலவற்றுக்குத் தவருகப் பொருள்கூறிச் சிலரை மயங்க வைக்கின்றனர். அவற்றையும் அவற்றின் உண்மைப் பொருளை யும் காண்போம்.

"நீறுசெவ்வே இடக்காணில்
நெடுமால் அடியார் என்ேறடும்"
—திருவாய் 4-4-7

என்பதில் நீறு அணிபவர்களைக் கண்டால் நெடுமால் அடியார் என்றேடும் என்றிருப் பதனுல், வைணவர்கள் திருமண் அணியாமல் திருநீறே அணிந்திருந்தனர் என்பது.

"கரிய மேனி மிசை வெளிய
நீறு சிறிதேயிடும்
பெரிய கோலத்தடங் கண்ணன்"
—திருவாய் 4-5-6

என்பதனுல்கண்ணபிரானும்திருநீறணிந்தனன் என்பது.

"உடையார்ந்த ஆடையன் கண்டிகையன்
உடை நாணினன்"
திருவாய் 3-7-4

என்பதனுல், திருநாராயணன் உருத்திராட்ச கண்டிகை யணிந்திருந்தனன் என்பது.

"அரன்நா ரணன் நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில்— வரைநீர்
கருமம் அழிப்பளிப்பு கையதுவேல் நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று"
—முத. திருவந். 5.

இதனுல் சிவபெருமானை வேருகக் கருதாது, ஆழ்வார்கள் வணங்கினர் என்பது.

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னுணும் தோன்றுமால்— சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேலெந்தைக்
கிரண்டுருவும் ஒன்ருய் யிசைந்து"
—மூன். திருவந். 63

இதனுல் திருமலையில் இரண்டுருவும் ஒன்ருக விளங்கியதால், சிவபெருமானையும் ஆழ்வார் வணங்கினர் என்பது.

பொருள் விளக்கம்: நீறு:

இவைகளின் உண்மைப் பொருளையும் குறிப்பிடுவோம்.

"நீறு செவ்வே யிடக்காணில்
நெடுமாலடியார் என்றேடும்" (1)

"கரிய மேனி மிசை வெளிய
நீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன்." (2)

மேலே குறிப்பிட்ட முதல் இரண்டிடத்தும் வருகின்ற 'நீறு' என்ற சொற்கு 'புழுதி, பொடி' என்ற பொருள்களும் உண்டு. விபூதிக்கு மட்டும் உரிய சொல் அல்ல அது. 'நீறு செவ்வே இடக்காணில்' இதில் நீறு என்பது பஸ்பம். இதனை (செவ்வே) மேல்நோக்கி இடுபவர்களைக் கண்டால், இவர்கள் நெடுமால் அடியார்கள் என்றெண்ணிப் பின் தொடர்ந்து ஓடுவள். 'நாறுதுழாய் மலர்காணில் நாரணன் கண்ணி ஈதென்னும்' என்பதற்கும் மேலே யுள்ள 'நீறு செவ்வே இடக்காணில் நெடுமால் அடியார் என்றேடும்' என்பதற்கும் காரணமாக

ஈற்றடியில் 'தேறியும் தேறுதும் மாயோன் திறத்தனளே இத்திருவே' என்றதைக் கொண்டு திரல் நிறையாக, தேருத நிலையில் நீறு நேராக இடுவதை மட்டும் கொண்டு, நெடுமால் அடியார் என்றேடினள். தேறிய நிலையில், 'நாறுதுழாய் மலர்காணில் நாரணன் கண்ணியிதென்பள்' என்று முன்னேர் உரையிட்டுள்ளனர். மேல்நோக்கி இடுதல் இங்கு நோக்கேயன்றி, குறுக்காக இடுதலில் இங்கு நோக்கில்லை.

''தணியும் பொழுதில்லை நீரணங்
காடுதிர் அன்னைமீர்
பிணியும் ஒழிகின்ற தில்லை
பெருகும் இதுவல்லால்
மணியில் அணிநிற மாயன்
தமரடி நீறு கொண்டு
அணிய முயலின்மற் றில்லை
கண் டீர்இவ்வணங் குக்கே''
—திருவாய் 4—6—6.

என்ற பாசுரத்தில், 'தமரடி நீறு' என்பது திருநீற்றை விலக்கி நிற்றலை யாவரும் அறிவர். நீறணிதல் என்ற சொல்லால் திருமாலடியார்கள் நீறணிந்தனர் என்பது முறையாகாது. அங்ஙனமாயின்,

''சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்,
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்,
வெவ்வேறிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம்பலத் தாடும்
தலைவா! என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனே,
நம்பி இனித்தான் நல்காயே''

என்ற பாடலில் (திருவாச. கோயில் மூத்த.9) 'திருநாமம் தரிப்பார்' என்பதற்குச் சிவபெருமானுடைய அடியார்கள் திருநாமம் தரிப்பவர்கள் தாம் என்று சொன்னால் மறுக்க இயலுமா? என்பதை நினைவு கூர்க. மேலும்,

''நீறு சிறிதேயிடும், பெரிய
கோலத்தடங் கண்ணன்''

என்பதில், 'கண்ணன்' என்பது சினையடியாக வந்த பெயர். இங்கு இப்பெயர் இயற்பெயரல்ல. 'தடங்கண்ணன்' என்பதில், அடைமொழியாக உள்ள தடம் என்ற உரிச்சொல்லே, கண்ணன் என்பது, சினையடியாக வந்த பெயர் என்பதை உணர்த்தும். இங்குச் 'சினை—கண்' என்பது யாரும் அறிவர். எனவே 'கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும் பெரிய கோலத்தட' என்ற இவ்வளவும் கண்ணுக்கு அடைமொழிகள். ஆதலின் அதற்கேற்பப் பொருள் கொள்ள வேண்டுமே யன்றி வேறு வழியாகப் பொருள் கூறுதல் முறையன்று. மேனி என்று திறமாய் திருக்கண்களில் கருவிழியினுடைய கருத்த நிறத்தால் வந்த அழகுக்கு மேலே என்பது 'கரிய மேனிமிசை' என்பதற்கு முன்னேர் உரைத்த பொருள். 'கரிய வாகிப் புடை பரந்து' (அமலனுதிப்பிரான்—8) என்பதும் நோக்குக. 'அஞ்சன சூர்ணம்' என 'வெளிய நீறு' என்பதற்குப் பொருளுரைத்தனர். 'நீறு' என்பது இங்கே 'சுண்ணம்' என்ற பொருளில் வந்துள்ளது.

சிறிய திருமடலும் 'ஆரா ரயில்வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து' என்பது இப்பொருளாதலை அறிக. மங்கலத்துக்காக இடுவதாகையாலே 'சிறிதேயிடும் என்பர்' என்பது முன்னேர் உரை. ஒப்பனை வேண்டாதபடி, அழகு அளவு இறந்திருக்கிறபடி. எனவே கறுத்த நிறத்தின் அழகுக்கு மேலே அஞ்சன சூர்ணத்தை அளவாக இட்ட பெரிய அழகிய விசாலமான கண்ணையுடையவன் என்பது பொருளாகும். இதனை அறியாது, கறுத்த திருமேனியிலே வெளுத்த நீற்றைச் சிறிதேயிடும் கண்ணபிரான் என்று பொருளுரைப்பது பொருந்தாது. அன்றியும், நீறிடுவது என்றால் சிறிதேதான் இடுவது என விதியுண்டா? என நோக்குக. 'கண்ணன்' என்பது இயற்பெயரானல், 'தடங்கண்ணன்' என்பதில் 'தட' என்ற அடைமொழிக்குப் பொருள் யாதோ? இங்ஙனம் முரண்பெறச் சொல்வது அழகன்று.

2. கண்டிகை:

மேலும்,

''உடையார்ந்த ஆடையன் கண்டிகையன்
உடைநாணினன்''
—திருவாய 3-7-4.

இதனுள் 'கண்டிகை' என்பது கண்டத்தில் (கழுத்தில்) அணியும் அணி என்பதுதான் பொருளேயன்றி 'உருத்திராட்ச கண்டிகை' என்ற பொருள் வராது. இச்சொல்லைக் கொண்டு திருமால் உருத்திராட்ச கண்டிகை

யணிந்திருந்தனன் என்பது நகைப்பிற்குரியதே யாகும்.

3. உடலும் உயிரும்:

"அரன்நா ராணன்நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்— வரைநீர்
கருமம் அழிப்பளிப்பு கையதுவேல் நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று"
—முதல் திருவந். 5

என்ற இப்பாசுரத்துக்கு நிரல்நிரையாகப் பொருள் கொள்ள வேண்டும்.

அரன்—நாரணன், நாமம்; ஆன்விடை-புள், ஊர்தி; நூல் (ஆகமம்) மறை (வேதம்), உரை; வரை—நீர். கோயில்; அழிப்பு—அளிப்பு, கருமம் வேல்—நேமி, கையது; எரி—கார், உருவம்; மேனிஒன்று—உடல்ஒன்று (உயிர் ஒன்று).

என்பதே இங்குப் பொருள். முதன்முதல் சிவ பிரானையும், அடுத்துத் திருமாலையும் வைத்து அவரவர்கட்கு உரியனவற்றை நிரல்நிறையாகச் சொல்லியுள்ளதைக் கவனித்தல் வேண்டும். 'மேனி' என்ற இடம் தவிர, மற்றைய இடங்களில் இரண்டிரண்டாகச் சொல்லி வந்தனர். இங்கு ஒன்றுமட்டும் சொல்வது பொருந்தாது; எனவே, உருவம் எரி கார் மேனி என்னும் இவ் இரு வகையும் ஒன்றே எனப் பொருள் கூறுதல் தகாது. அங்ஙனமாயின் இறுதியில் 'மேனி' என்று சொன்னதுபோல 'உயிர்' என்றும் சொல்லலாமே; சொல்லியிருப்பின் ஐயத்திற்கு இடமில்லையே என்போர்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்கிற திருக்குறளை நோக்குக. இதனுள் 'பிறவிப் பெருங்கடல் இறைவனடி சேராதார் 'நீந்தார்' என எழுவாயும் பயனிலையும் இருக்க, அடுத்து எழுவாயின்றிப் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' எனப் பயனிலைமட்டும் இருக்கின்றது. எனினும், 'இறைவனடி சேராதார் நீந்தார்' எனவே 'நீந்துவர் இறைவனடி சேர்ந்தார்' என்று எழுவாய் எளிதில் கொள்ளலாம் அன்றோ? இப்படிச் சொல்லுதல் கவிசமயம். உய்த்துணர்வு என்ற உத்தியும் ஆகும். அம் முறையே இங்கு 'மேனி' (உடல்) ஒன்று அரன் என்றால், 'உயிர்' (மற்றொன்று) 'நாரணன்' என் பது எளிதாக விளங்கும் அல்லவா? 'நாரணன்' என்ற சொல்லுக்கு 'எல்லாவற்றுக்கும் ஆதார மானவன்' என்ற பொருளைக் கொண்டு, 'சிவ பிரான் உடல்—நாராயணன் உயிர்' எனக் கொள்வதுதான் இங்குப் பொருந்திய உரை.

'பிறவிப் பெருங்கடல்' என்ற குறளில் பொருள் கொள்வது போல இங்கும் விட்டபொருளை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டுமேயன்றி 'உருவம் எரி கார் மேனி, (இரண்டும்) ஒன்று என நுனிப்புல் மேய்வது அறிவுடைமையாகாது

## இவ்வாறும் கூறல் இயலும்:

இதுபோன்ற முறையில் அவர்கள் நூல்களி லும் சில உண்டு. அவற்றில் நுழைந்து நாமும் நம் சமயத்துக்குப் பொருந்துமாறு பொருள் கூற முடியும். அவை:

"வந்திமை யோர்கள் வணங்கி ஏத்த
மாக் கருணைக் கட லாய் அடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
பரமன் பெருந்துறை யாதிஅந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந் தன்
றோங்கு மதில் இலங் கையதனுள்
பந்தணை மெல்விரலாட்கருளும்
பரிசறி வார் எம் பிரானாவாரே"

என்ற பாடலில் (திருவா. திருவார்த்தை—5). "பரமன் பெருந்துறை ஆதி அந்நாள் (அனுமா னாகி) உந்து திரைக் கடலைக் கடந்து அன்று ஓங்கு மதில் இலங்கை அதனுள் பந்தணை மெல்விரலாட்கு (சீதாபிராட்டிக்கு) அருளும் பரிசறிவார் எம்பிரான் ஆவார்" என்று சொன் னால் நன்கு பொருந்துமே!

"திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடும் பிரியாதே
அருந்து ணைவனாய் ஆண்டுகொண்
டருளிய
அற்புத மறியனே" (2)

என்பதில் (திருவா. அற்புதப் பத்து—3) "திருமாமகளோடும் பிரியாமல் அருந்துணை வனாய் என்னை ஆண்ட அற்புதம் இன்னதென் றறியேனே" என்றாலும் பொருந்துமே!

"கருங் கண்ணனை யறியாது நின்றேன்!
(திருக்கோவை. 53)— (3)

என்ற இடத்து-கண்ணனை யறியாது நின்றவன் சிவபெருமான் எனக் கொள்ளலாமல்லவா ? நிற்க. பேயாழ்வார் பாடலில்,

" தாழ்சடையும்... இரண்டுருவும் ஒன்று
யிசைந்து "
(மூன். திருவந்-63)—(4)

என்பது, சிவபிரானும் திருமாலும் ஒன்றாக இருக்கும் இருப்பினைத் தெரிவிக்கின்றது. " தடம்புனல சடைமுடியன் தனியொரு கூறு அமர்ந்துறையும், உடம்புடையன் " என்ற இடத்திற் போலப் பொருள் கொள்ளாமல் 'திருமலைமேல் எந்தையின் உருவம் சிவ பெருமானோடு கூடிய கேசவார்த்த மூர்த்தி' என்று குறிப்பிடுவது நகைப்பிற்கே யிடமாகும். அங்ஙனமாயின்,

" பண்டானைப் பரந்தானைக் குவிந்தான்
றன்னைப்
பாரானை விண்ணு யிவ்வுலக மெல்லாம்
உண்டானை உமிழ்ந்தானை உடையான்
றன்னை
ஒருவருந்தம் பெருமைதனை யறிய ஒண்ணு
விண்டானை விண்டார்தம் புரங்கள்
மூன்றும்
வெவ்வழலில் வெந்துபொடி யாக வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்
நானே " (5)

என்னும் திருநாவுக்கரசர் திருக்கற்குடித் திருத்தாண்டகத்திலும் நமக்கேற்றவாறு வலிந்து பொருள் கொள்ளக் கூடுமே என்பதனை உணர்க. மேலும் சேரமான் பெருமாள் நாயனாரின்

" இடம்மால் வலம்தான்;
இடப்பால்துழாய்,
வலப்பால் ஒண்கொன்றை
வடமால்; இடம்துகில் தோல்வலம்,
ஆழி இடம்வலம்மான்;
இடமால் கரிதால் வலம்சேது ;
இவனுக் கெழில்நலஞ்சேர்
குடமால் இடம், வலம் கொக்கரை
யாம்எங்கள் கூத்தனுக்கே " (6)

என்ற பொன்வண்ணத்தந்தாதிப் பாடலில் (6) தில்லையில் கூத்தப்பிரானுக்கு இடப்பகுதியில் உள்ளவை யாவும் திருமாலுக்குரியவையாகக் கூறப்பட்டுள்ளதால், அங்கு அக்கூத்தன் திருமாலோடு கூடியுள்ளான் என்று கூறலாமே!

முடிவுரை :

இதுகாறும் விளக்கியவற்றால் தம்தம் சமய நூல்களை நன்கு கற்றுத் தெளிந்து அனுட்டிக்க வேண்டுமேயன்றிப்பிறசமய நூல்களுள் அவ்வச் சமயச் சான்றோரின் கருத்தறியாது தத்தமக்குத் தோன்றியவாறு பொருள் கூறிப் பிறரை மயக்குதல் தகாது. அஃது அடாத செயல்; பாவச் செயலுமாம்.

இங்ஙனம் மாறுபட்ட பொருள் கூறுவதைச் சைவசமயச் சான்றோர்கள் பலர் மறுத்திருப்பதை யானறிவேன். எனினும், ஒரு சிலர் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வதும், முதற்பதிப்பு மறுபதிப்பு என வெளியிடுவதும், கண்கூடாகக் காண்டலின் இத்துணையும் எழுத நேர்ந்தது. அவ் அச்சமய முதல் நூல்களுக்கு அவ் வச்சமயச் சான்றோர் விளக்கும் உரையினை நன்கு தெளிந்து கொள்ள வேண்டும். பிற சமயத்துறையில் நம் கருத்தினைப் புகுத்தலாகாது என்று இத்துடன் அமைகின்றேன்.

அருள்திரு



நடராசர்

# கோயில் வழிபாடு

'மும்மொழிப் புலமைச் செம்மல்'
திரு. பெ. திருஞானசம்பந்தம் அவர்கள், M. A. L. T.
பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

'மாலற நேயம மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'

என்று செப்புகிறது சிவஞானபோதம். 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவை வாக்கை அறியாதார் யார்? 'திருக்கோயிலுள் ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே' என்று உருவ வழிபாட்டின் உட்பொருளை உணர்த்து கின்றார் அருணந்திசிவம்.

சங்ககாலத்திலேயே உருவ வழிபாடு இருந்தது என்பதை ஒருவாறு துணியலாம். தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற மாயோன், சேயோன் ஆகிய சொற்கள் நிறம் பற்றியவை யாகலான், உருவ வழிபாடு அவர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில்இருந்து வந்தது எனலாம். கடவுளை நானில மக்கள் பல்வேறு வகையான உருவங்களிலும் முறைகளிலும் வழிபட்டனரே னும், தெய்வங்களிடையே ஏற்றத்தாழ்வு கூறப்படவில்லை. அனைத்தையும் கடந்து நிற்கும் இறைவன், அனைத்துள்ளும் வியாபித் திருக்கிறான் என்னும் உண்மையை விளக்கும் 'கடவுள்' என்ற அருமையான சொல்லை மிகத் தொன்மையான தொல்காப்பியத்திற் காண் கிறோம். சிலப்பதிகாரக் காலத்திலே, பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும் இருந்தனவென அறி கிறோம். சமயாசாரியர்கள் காலத்தில் 'செம்பியன் கோச்செங்கணான் செய்கோயிலை'ப் போன்ற மாடக்கோயில்கள் இருந்தனவாகவும் அறிகிறோம்.

அகத்தியமாமுனிவர், அருளிய தேவாரத் திரட்டின் தொடக்கத்திற் கூறப்படும் வெண்பா வில், அதன் உட்கிடையாகக் காணப்படும் பொருள் எட்டனுள், கோயிற்றிறமும் சிவனுருவ மும் இடம்பெற்றிருப்பதை நோக்குங்கால், தேவாரத் திருப்பதிகங்களில் இவை ஆங்காங்கே எங்ஙனம் சிறப்புற ஓதப்படுகின்றன என்பதை அறிகிறோம்.

''குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
அரனுருவு மென்றலைமேல் ஆக்கும்— திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டுஞ் சிவலாயர்க்கென்
றிட்டார் அகத்தியனார் எட்டு.''

இந்தியாவிலேயே தமிழ்நாடு கோயில்களுக் குப் பெயர் பெற்றது. இக்கோயில்கள், சிற்பம், இசை, கூத்து, ஓவியம், இலக்கியம் ஆகிய பலகலைகளுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றன. வாழ்வியலோடு சமய அறிவும், அதன்வழி ஒழுக்கமும் பின்னிக் கிடந்த நிலையைத்தான் இது நமக்கு உணர்த்து கிறது. இன்று அந்நன்னிலை மாறிவருவது வருந்தத்தக்கது. மீண்டும் வாழ்வியலும் சமய நெறியும் ஒன்றுபட்டாற்றான் மக்களினத்திற்கு உய்தி உண்டு என்பதை மேன்மக்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

கடவுள் எங்கும் வியாபித்திருந்தாலும் கோயில்களே அருள் பெருகும் இடங்களாகக் கொள்ளத்தக்கன. அரசனுக்குரிய நாடு பரந் திருந்த போதிலும் அவன் உறைகின்ற இடம் என்று தனியே ஒன்று உண்டு. அங்கிருந்தே அவன் ஆணை செலுத்துகிறான். அதுபோல உலகிற்கெல்லாம் வேந்தனான (கோவாக) இறைவன் இருந்தாலும், அவனுடன் நமது மனம் கூடுமிடம், அவனை நாம் நெருங்கிக் காணுமிடம் கோயில் (கோ+இல்) ஆகும். அங்கே நமது மனம் லயிப்பதற்குரிய சூழல் இருப்பதனாலேதான் ஆலயம் (ஆ+லயம்) என்று அதனை நாம் அழைக்கின்றோம்.

ஆ = ஆத்மா லயிப்பதற்குரிய இடமென்றும், ஆ = ஆணவம் ஒடுங்குதற்குரிய இடமென்றும் அச்சொல்லிற்குப் பொருள் கூறுவாருமுண்டு.

நமது உயிருக்கு உறைவிடமாக எப்படி உடல் அமைந்துள்ளதோ அப்படியே இறைவனின் உறைவிடமாகக் கோயிலின் அமைப்பும் பொருந்தியிருக்கிறது. நமது கால்கள் எப்படி உடலைத் தாங்குகின்றனவோ, அப்படியே கோயிலைத் தாங்குகின்ற தூண்களும் சிற்ப நூலில், 'பாதம்' என்று அழைக்கப்படுகின்றன. நமக்குக் கழுத்தும் தலையும் சிகையும் இருப்பது போல அதே அமைப்போடு கூடியகோயிற் பகுதிக்குக் களம், சிகரம், சிகை என்ற சொற்கள் முறையே ஆளப்படுகின்றன. நமது உடலில் வயிறு நடுப்பகுதியாதல்போல, கோயிலில் கர்ப்பக்கிருகம் அமைந்துள்ளது. மேலும் கர்ணம் (காது), நாசி (மூக்கு) போன்ற உறுப்புக்களும் சிகரத்தில் அமைந்துள்ளன. மனிதனுக்கு முகமே முக்கிய உறுப்பாதல்போல முகத்தைக் கொண்டே இன்னார் என்று பகுத்தறிதல் போல, கோயிலின் சிகரத்தைக் கொண்டே ஒன்று மற்றொன்றினின்றும் எவ்வாறு வேறுபடுகிறதென் ஆராய்ந்து கூறுவர் சிற்பநூலோர்.

பண்டைக் கோயில்கள் தமிழகத்தில் மரத்தினால் கட்டப்பட்டவை என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதனாலேதான் பல்லவர் கற்கோயில் தோன்றிய கி.பி. ஆறும் நூற்றாண்டிற்கு முன்னர் இருந்த மரக்கோயில்களை அழித்துவிட்டிருக்கக்கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர். கோவில் வளர்ச்சியை நாம் நோக்கும்போது, பொதுவாகப் பல்லவர் (கி.பி. 600—850) காலத்தில் குடைவரைக் கோயில்களும் கற்கோயில்களும், முற்காலச் சோழர் (கி,பி. 850-985) காலத்தில் சிறு கற்கோயில்களும், இடைக்காலச் சோழர் (985-1070) காலத்தில் பெரிய கோயில் விமானங்களும், பிற்காலச் சோழர் பாண்டியர் (1070-1350) காலத்தில் வானளாவும் கோபுரங்களும், விசயநகரவேந்தர் (1350-1600) காலத்தில் கோபுரங்களும் உருவாகின என்பதைப் பார்க்கிறோம்.

கோயில் சமைப்பது பற்றியும், சிற்பங்கள் வடிப்பது பற்றியும், பூசை முறைகளைப் பற்றியும் சைவ வைணவ ஆகமங்களும் பிற சிற்ப நூல்களும் கூறுகின்றன. 'பாஞ்சராத்ர ப்ராசாத ப்ரசாதனம்' என்ற வைணவ ஆகம நூலில், "மரம் உலோகம் கல் ஆகியவற்றால் நல்ல முறையில் பிரதிமையைச் செய்து தக்க இடத்தில் சாத்திரத்தில் விதிக்கப்பட்ட முறையானே தாபனம் செய்து வழிபடுவாயாக" என்று, விஷ்ணு பகவான் பிரமதேவனிடம் கூறுகிறார்.

அநுபூதிமான்களாகிய நாயன்மார்களும் பல கோயில்களுக்குச் சென்று வழிபாடாற்றிய வரலாற்றினை நாம் படிக்கிறோம். அப்பர் பெருமான் கோயில் வழிபாடு செய்யவேண்டிய முறையை உணர்த்தியிருப்பதைப் பாருங்கள்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வ தன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

இத்தகைய மூர்த்தி வழிபாடு சைவசமயாசாரியர்கள், ஆழ்வாராதியர், சங்கரர், இராமானுசர், இராமகிருஷ்ண, பரமஹம்சர் போன்ற அநுபூதிமான்களுக்கே வேண்டியிருந்ததென்றால் நம்மனோர்க்கு அது இன்றியமையாதது என்பதைக் கூறவும் வேண்டுமோ? 'தம்மிலேயே இறைவனைக் காணும் பெரும் யோகியருக்கு உருவ வழிபாடு வேண்டாதிருக்கலாம். ஆனால், சிற்றறிவினராகிய நாம் அன்பு செலுத்துதற்காகத்தான் கோயிலில் திருவுருவங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன' என்று கூறுகிறது, ஜாபாலோபநிடதம்.

பல திறப்பட்ட ஆன்மகோடிகளுக்கு இறைவன் எப்படி அருள் பாலிக்கின்றான் என்பதை உணர்த்துகின்றன. நமது சமய சாத்திர தோத்திர நூல்கள். சிவாலயத்தைச் சிவமென வழிபடுகின்ற சரியையாளருக்கு இறைவன் வெளிப்படாமல் இருந்து அருள் புரிகின்றான். மந்திரம் ஓதி வழிபடுகின்ற கிரியையாளருக்கு விறகைக் கடைகிறபோது தோன்றும் தீப் போல வெளிப்படுகின்றான். தமதுள்ளமே கோயிலாகக்

கொண்டு வழிபடுகின்ற யோகியருக்குக் கறந்த போது தோன்றும் பால்போல வெளிப்படுகின்ருன். எங்கும் இறைத்தன்மையைக் காணும் ஞானியர் கோயிலிலுள்ள திருவுருவத்தைக் காணும்போது, கன்றை நினைத்த மாத்திரத்திற் பசுபால் சுரப்பதுபோல இறைவன் அருளை வழங்குகின்ருன்.

உய்யவந்ததேவநாயனுரும், யாவருக்கும் காண்பரிய இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த பெருங்கருணையால் திருமேனிகொண்டு எழுந்தருளுகின்ருன் என்று கூறுகின்ருர்.' 'அகளமாய் யாரும் அரிவரிது அப்பொருள் சகளமாய் வந்ததென்றுந்தீபற' என்பது அவர் பாடல்.

பக்திநெறியில் நிற்போரின் பக்குவநிலைக்கேற்ப இறைவன் வெளிப்படுகின்ருன். ''எள்ளில் எண்ணெயைப் போலவும், தயிரில் நெய்யைப்போல்வும், ஊற்று நீரைப் போலவும். விறகில் தீயைப்போலவும், சத்தியம் தவம் ஆகிய நெறிகளைப் பின்பற்றும் சீவன் இறைவனைத் தன்னுள் காண்கிருன்'' என்று, முண்டகோபநிடதம் எளிய இனிய உவமையின் வாயிலாக உணர்த்துகின்றது. இதனேடொத்த கருத்தைத் திருநாவுக்கரசர் பாடலில் பார்க்கிருேம்.

''விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே''

ஆன்மாக்கள் மாட்டு இறைவன் காட்டுகின்ற பெருங்கருணைத் திறமும், அருளிப்பாடும், சைவ சித்தாந்தக் கருத்துக்களில் பெருஞ் சிறப்பு வாய்ந்தன. மாக்னிகால் என்னும் அறிஞர் தனது 'இந்தியக் கடவுட் கொள்கை' (Indian Theism) என்ற நூலில் இதனையே விதந்தோதுகின்ருர்.*

"அருளே உலகெல்லாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தாஞல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்
எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு.''

என்று காரைக்காலம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில் பாடியிருப்பதும் இங்கு நாம் நினைந்து மகிழ்ந்து இன்புறுதற்குரியது.

---

* "The breath and dignity of this (Saiva) doctrine and its deep sense of the gracious character of God give it a place apart from other systems of theism that havearisen in India".

—MACNICOL

திருக்குவளை



அம்மன்

# தாயுமானவ அடிகள்*

## முன்னுரை :

தாயுமானவ அடிகள், நம் தமிழ் நாட்டில் தோன்றியருளிய தவஞானச் சான்றோர்கள் பலருள், தலைசிறந்த ஒருவர். அப்பெருந்தகையினை நினைக்குங்காலெல்லாம், அவர்தம் தூய துறவு நெறிப்போக்கு - தத்துவஞானச்சால்பு - யோகானுபவ நலம்-அருள் உள்ளம்-தாழ்வெனும் தன்மை-பக்தி மனப்பான்மை-பலகலை நூற் பயிற்சி-உலகியலறிவு-அரிய இனிய கவிதைத் திறம் ஆகிய பற்பல நற்பண்பு நலங்கள், நம்மனோர் மனக்கண்களின் முன்னே தோன்றிக் களி நடம் புரிகின்றன.

> "புவிராசர் கவிராசர்
> தவராசர் என்றுனைப்
> போற்றிசய போற்றிஎன்பார்"

என்று தாயுமானவர் தம்முடைய மௌனகுரு வணக்கப் பாடலிற் குறிப்பிடுவதனைத் தழுவி, நாமும் நம்முடைய குருவாகிய தாயுமானவர் பெருந்தகையைக் கவிராசர் என்றும், தவராசர் என்றும் களிப்புறப் புகழ்ந்து போற்றி மகிழலாம்.

## அறிஞர்களின் புகழுரைகள் :

நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகச் சான்றோர்கள் பலர் தோன்றியிருந்தாலும், அவர்களுள்ளே இந்தக் காலநிலையில் மிகவும் சிறந்தெடுத்துப் போற்றத் தக்கவராக விளங்குபவர் தாயுமானவரே என்றும், அவர்தம் பாடல்கள் பின்னைப் புதுமைப் பெற்றிமையுடையவாயினும், முன்னைப் பெரியோர்களின் முன்னைப் பழம் பொருள்களையே நன்கினிது எடுத்து முழங்குகின்றன என்றும், பேரறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். (1).

சமயம் தத்துவம் கவிதை ஆகிய துறைகளில், வடமொழி இலக்கியங்களை விடக் கூட ஒருவகையில் தமிழ் மிகவும் சிறந்து விளங்குகின்றது என்றும், அதற்குக் காரணம் தாயுமானவர் திருவள்ளுவர் நக்கீரர் மாணிக்கவாசகர் போன்ற சான்றோர்களின் பாடல்களேயாம் என்றும், வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இருதிறக் கொள்கைகளிலும் உள்ளனபோலத் தோன்றும் முரண்பாடுகளைப் போக்கி வேதாந்த சித்தாந்த சமரச நிலையினை விளக்கியருளியவர் தாயுமானவர் என்றும், மற்றொரு சிறந்த பேரறிஞர் கூறுகின்றார். (2)

இவ்வாறே தமிழ் நாட்டிற்குப் போந்து வாழ்ந்திருந்து தம் சமயப் பணியாற்றி வந்த ஒருவர், 'தாம் கிறித்தவ சமய வுணர்வும் உறுதியும் உடையவராக இருந்தும், தாயுமானவரின் பாடல்கள் பலவற்றிலும் ஒளிவிட்டுத் திகழும் நுண்ணிய ஆன்மஞான அனுபவ உண்மைகளை

---

* சென்னைக் கோகலே மண்டபத்தில், 'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம், M.L.C. அவர்கள் தலைமையில் நடைபெற்ற, யோகாசனலயக் கிளை துவக்கவிழாவில், நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது. (8—9—73).

—ஆசிரியர்

(1) "Saint Thayumanavar, whose lyrics have led me on to think philosophically while still a young boy, is one such in a long line of mystics but one best suited to the modern age, though speaking an idiom 'more ancient than the ancients'".

—Sir KANDIAH VAIDYANATHAN.

2. "Even Sanskrit literature with all its multiform development and its technical perfection, is not superior in the matter of philosophical and religious speculation or poetry, to the highest example of the art of Tamil-especially as exemplified in Thayumanavar in such miraculous verses as the Ode to Sakthi and in the works of Thiruvalluvar, Nakkirar and Manickavasagar. The Saiva Siddhanta held sway in the extreme south of India and the tenets of the Vedantha seemed on certain points to conflict with it but the task of sages like Thayumanavar was to reconcile and harmonize the conflicting positions."

—Dr. C. P. RAMASWAMY AIYAR.

வியந்து பாராட்டாது தம்மால் இருக்க இயல வில்லை' என்றும், 'அப்பாடல்களிற் பொதிந் துள்ள அரும்பெறல் உண்மைக் கருத்துக்கள் ஒருபுறம் இருப்ப, அப்பாடல்களில் அமைந் துள்ள நய ஒலியின நடனமே, தம்முடைய ஆங்கிலேயச் செவிகளையும் கவர்ந்துவிட வல்ல தாக விளங்குகின்றது' என்றும் போற்றிப் புகழ்கின்றார். (3)

## இயற்கையும் இறையுணர்வும் :

தாயுமானவர் மிகச் சிறந்த ஒரு பெருந் தத்துவஞானத் தலைவர். அவர் உலகப் பொருள்கள் எல்லாவற்றின் இயல்பிலும் இயக்கத்திலும், கடவுட்டன்மை ஊடுருவி ஒளிர்ந்து நிற்றலை நன்கு உணர்ந்து வியந்தருள் கின்றார். இரவும் பகலும், காற்றும் முகிலும், மண்ணும் கடலும் ஆகிய எல்லாம், அவர்க்குக் கடவுளியல்பினைப் புலப்படுத்துகின்றன.

நேரேதான் இரவுபகல்
கோடா வண்ணம்
நித்தம்வர, உங்களை இந்
நிலைக்கே வைத்தார்
ஆரே? அங் கவர்பெருமை
என்னே? என்பேன் (1)

அடிக்கின்ற காற்றேநீ
யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய்?
என்பேன். (2)

பெய்கின்ற முகில்காள்! எம்
பெருமான் நும்போல்
தாராள மாக்கருணை
பொழியச் செய்யும்
சாதகம்என் னே? கருதிச்
சாற்றும் என்பேன். (3)

கருதரிய விண்ணே! நீ
எங்கு மாகிக்
கலந்தனையோ! உன்முடிவின்
காட்சி யாக
வருபொருள்எப் படியிருக்கும்?
சொல்லாய் என்பேன்.
மண்ணேஉன் முடிவில்எது
வயங்கும் ஆங்கே? (4)

உரையிறந்த பெருமைபெற்றுத்
திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலே! இவ்
வுலகம் சூழக்
கரையுமின்றி உன்னைவைத்தார்
யாரோ? என்பேன். (5)

## கடவுளின் கருணை :

தாயின் கருப்பப் பையில் நாம் அனைவரும் பத்துத் திங்கள் தங்கியிருந்தே பின்னர் இவ் வுலகில் வந்து பிறக்கின்றோம். அப்பத்துத் திங்களிலும் நமக்கு இன்றியமையாத நீரையும் உணவையும்காற்றையுமெல்லாம், உள்ளுக்குள் உடனுயிருந்து கொடுத்துதவி, நம்மைக் காத் தருளியவன் கடவுள் அன்றோ? உயிர் பிரிந்து விட்டால், நான்கு ஆட்கள் ஒன்று சேர்ந்து சுமக்க வேண்டிய அளவு சுமைமிகுந்த நம் உடலை, நம்முடைய உயிர் ஒன்றே சுமந்து கொண்டு எளிதில் திரியும்படி, நம் உடலையும் உயிரையும் ஒருங்கியைத்துப் பொருத்தி வாழ வைத்தவன் இறைவனே யன்றோ? என்றெல் லாம் பரம்பொருளின் பெருங் கருணைத் திறனை வியந்து பேசி இன்புறுகின்றார் தாயுமானவர்!

தாயர்கர்ப்பத் தூ டுஅனமும்
தண்ணீரும் தந்தருளும்
நேய! உனை யாரே
நினையார் பராபரமே (1)

காரகமாம் கர்ப்பஅறைக்
கண்ணூடும் என்கண்ணே
வாரம்வைத்துக் காத்தனை நீ
வாழி பராபரமே (2)

தோற்பாவை நாலாட்
சுமையாகும், சீவன்ஒன்றிங்கு
ஆர்ப்பால் எடுத்தது
எவராலே? பரபபரமே (3)

## வரலாற்றுக் குறிப்புகள் :

தாயுமான சுவாமிகள் வாழ்ந்திருந்த காலம் 18-ஆம் நூற்றாண்டு, அவர்தம் தந்தையார் ஆகிய கேடிலியப்பபிள்ளை என்பவர், திருச்சிராப்

---

3. "It is impossible even for one accustomed to the light and certainty of Christianity not to admire the keen spiritual insight which many passages of the Thayumanavar's writings display. Apart altogether from the thought which they contain the rhythmic dance of the original strikes an English ear."

—G. MACKENZIE COBBAN.

பள்ளியில் இருந்து அரசு செலுத்தி வந்த விசயரங்க சொக்கநாத நாயகர் (கி.பி, 1706—1732) என்பவரின், அரண்மனை மேற்பார்வை யாளர் பதவியிற் பணியாற்றி வந்தார். தம் தந்தையாருக்குப் பின்னர், அரசரின் வேண்டு கோட்கு இணங்கித் தாயுமானவரும், விசயரங்க சொக்கநாத நாயகர் காலத்தும், அவர் தம் மனைவியார் ஆகிய அரசி மீனுட்சியம்மையார் காலத்தும் (கி.பி. 1732—1736), அப்பதவியில் அமர்ந்து சிலகாலம் பணியாற்றினுர்.

அக்காலத்தில் அரசியற் சிக்கல்களும் சூழ்ச்சி களும் நிறைந்திருந்தன. பாளையக்காரர்களுக் குள்ளே போரும் பூசலும் பிணக்கும் மிகுந்து வந்தன. ஆற்காட்டு நவாபும், ஐதராபாத் நிசாமும், பாளையக்காரர்களைப் பல வகைகளில் ஆட்டிவைத்து, நாயக்க அரசை நலிவுறுத்திக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிகள் புரிந்து வந்தனர்.

நாடும்நக ரும்நிசான்
ஆட்டிய பாளயமும்
ஈடுசெயு மோ?முடிவில்
எந்தாய் பராபரமே

என இச்சூழ்நிலைகளை, ஒருவகையில் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுதல் காணலாம்.

விசயரங்க சொக்கநாத நாயகர், தஞ்சை மகாராட்டிரரின் திடீர்ப் படையெடுப்பால் திகைத்து மனமுடைந்து மாண்டார். அரசி மீனுட்சியம்மையாரின் அரசாட்சியை அடை தற்குத் தானே உரிமையுடையவன் எனப் பங்காரு திருமலை என்பவன் பல குழப்பங்களும் சதிகளும் செய்தான். சந்தாசாகிப் சூழ்ச்சி யினுல் அரசி மீனுட்சியம்மை தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது. அம்மையார் வளர்த்து வந்த விசயகுமார் என்னும் இளவரசர், அன்வருதீன் என்பவனுற் கொல்லப் பட்டார். இவைகளெல்லாம் தாயுமானவரின் இயற்கைத் துறவுள்ளத்தை மேலும் துறவுநெறி யில் உறுதிப் படுத்துவன ஆயின.

வந்ததையும் போனதையும்
வைத்துவைத்துப் பார்த்திருந்தால்
சிந்தை இதம்அகிதம்
சேரும் பராபரமே (1)

போனநாட் கிரங்குவதே
தொழிலா இங்ஙன்
பொருந்துநாள் அத்தனையும்
போக்கினேன். என்
ஞானநா யகனே! நின்
மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கும்
நாள்எந் நாளோ? (2)

## சான்றோர்ப் போற்றிய தகவு :

தாயுமானவர் உலகில் வாழ்ந்தார்; ஆனல் அவருள்ளத்தில் உலகம் வதியவில்லை. ('He was in the world but not of the world'.) அவ ருடைய உள்ளம் இயல்பாகவே இறையருட் பேற்று முயற்சியிலேயே ஈடுபட்டு நின்றது. தமக்கு முன்னே வாழ்ந்திருந்த சான்றோர்களை யும், அவர்தம் நூல்களையும், தாயுமானவர் தகவுறப் போற்றி ஒழுகினுர். அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் சமய குரவர் களையும், மெய்கண்டார் அருள்நந்தி மறை ஞானசம்பந்தர் உமாபதிசிவம் ஆகிய சந்தான குரவர்களையும், தாயுமானவர் சாலவும் வழி பட்டுத் துதித்து மகிழ்ந்தார், திருமூலர், பட்டினத்தார், அருணகிரியார், சிவவாக்கியர், சுகர், வாமதேவர் முதலிய சான்றோர்களை யெல்லாம் அவர் பாராட்டிப் பரவியுள்ளார்.

தேவர்தொழும் வாதவூர்த்
தேவே! என்பேன்.
திருமூலத் தேவே!இச்
சகத்தோர் முத்திக்கு
ஆவலுறச் சிவஎன்வாக்
குடனே வந்த
அரசே! சும் மாஇருந்துன்
அருளைச் சாரப்
பூவுலகில் வளர்அருண
கிரியே! மற்றைப்
புண்ணியர்காள்!
ஓ என்பேன்.

எனச் சுவாமிகள், தமக்கு முன்னே வாழ்ந் திருந்த சான்றோர்கள் பலரையும் குறிப்பிட்டுப் போற்றுதல் காணலாம். பட்டினத்தடிகள் மாட்டும், அருணகிரிநாதர் இடத்தும் சுவாமி கள் பெருமதிப்புக் கொண்டவராக விளங்குகின் ருர். ''பாரனைத்தும் பொய் எனவே பட்டினத் துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரி

தரிது" என விதந்து மொழிகின்றார் தாயுமான வர்! "ஐயா அருணகிரி அப்பா! உனைப்போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?" என வியந்து வினவுகின்றார் அவர்! அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி என்னும் நூலினைச் சிறந் தெடுத்துப் போற்றிக் 'கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தையருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ?' என்று சுவாமிகள் ஏக்கறுகின்றார்.

தாயுமானவப் பெருந்தகைக்குத் தேவார திருவாசகத் திருமுறைகளில் எத்துணைப் பற்றும் ஈடுபாடும் இருந்தன என்பது,

"தேவரெல்லாம் தொழச்சிவந்த
செந்தாள்முக்கட்
செங்கரும்பே! மொழிக்குமொழி
தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும்
திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொல்
முற்று மோர்தான்?" (1)

"பாகத்தி னற்கவிதை
பாடிப் படிக்கவோ
பக்திநெறி யில்லை; வேத
பாரா யணப்பனுவல்,
மூவர்செய் பனுவலது
பகரவோ இசையுமில்லை" (2)

எனவரும் பாடலால் விளங்கும். "அறிஞருரை" என்னும் பகுதியில் வரும் பாடல்களும் இவ் வுண்மைக்குச் சான்று பகரும்.

## மௌன குரு :

திருமூலரைச் "சக்கரவர்த்தி தவராச யோகி" எனப் புகழ்ந்து போற்றும் தாயுமானவர்க்குத் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவர், சிறந்த அருட்குருவாக வாய்க்கப்பெற்றார். அவரை "மந்த்ரகுருவே யோகதந்த்ர குருவே! மூலன் மரபில் வரும் மௌனகுருவே!" எனக் குறிப்பிட்டுத் தாயுமானவர் துதிக்கின்றார். "ஞான கருணாகர முகம் கண்ட போதினிலே நவநாதசித்தர்களும் உன் நட்பினை விரும்பு வார்; சுகர் வாமதேவர் முதல் ஞானிகளும் உனை மெச்சுவார்" எனத் தம் குருவை வியந்து புகழ்ந்தோதுகின்றார். திருமூலர் மரபில் வந்த மௌனகுரு, இவர்க்கு 'வேதாகமத் துணிபு இரண்டில்லை ஒன்றே' என்று, வீறு சிவஞான சித்தி நெறியை விளக்கி உபதேசித்தருளினார். அதனால் "தரணிமிசை லோகாயதன் சமய நடை சாராமல், வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி நிலை" இவருக்கு இனிது வாய்ப்பதாயிற்று.

## சமய சமரச ஞானம் :

"இறையுணர்வு ஒளியானது முழுவதாக நமக்கு வெளிப்படுமாயின், நம் கண்கள் அதனைத் தாங்கமாட்டாது ஒளி மழுங்கிக் குருடாகிவிடும். அதனால் நம் கண்கள் அதனைக் கண்டுணரக் கூடும் வண்ணம், அது பல நிற ஒளிகளாகச் சிதறி வெளிப்படுகின்றது. பல்வேறு சமய ஒழுகலாறுகளும், ஒப்பற்ற ஒரு பரம்பொருளையே வெவ்வேறு வடிவங்களிற் கண்டு அணிசெய்கின்றன. அப்பல்வேறு சமயக் காட்சிகளும் ஒன்றனையொன்று தழுவிச் செழிப்புறுத்தி, மனித இனத்துக்குப் பலதிறப் பட்ட முழுநிறைவுத் தன்மையை யளித்துப் பயன்படுகின்றன.

இந்து மதத்தின் ஆன்ம ஞானஒளி, யூதமதத் தின் கீழ்ப்படிதற்பண்பு, கிரேக்க மதத்தின் அழ கியலுணர்வு, ஜைன மதத்தின் பரந்த நோக் கம், பௌத்த மதத்தின் சிறந்த கருணைத்திறம், கிறித்தவ மதத்தின் தெய்விக அன்புக் காட்சி, இசுலாம் மதத்தின் இறையருட்டலைப்பாடு ஆகிய எல்லாம் ஆன்மீக வாழ்வின் பல்வேறு கூறுகளையே புலப்படுத்துகின்றன. இவை யனைத்தும் மனிதவுணர்வு எய்தித் திளைத்த சிறந்த இறையருளனுபவத்தின் வெளிப்பாடு களேயாகும்."(4)

---

4. "The light of Eternity would blind us if it came full in the face. It is broken into colours so that our eyes can make something of it. The different religious traditions clothe the one Reality in various images, and their visions could embrace and fertilize each other so as to give mankind a many-sided perfection.

The spiritual radiance of Hinduism, the faithful obedience of Judaism, the beauty of Greek Paganism, the broad Catholic outlook of Jainism, the noble compassion of Buddhism, the vision of divine love in Christianity, and the spirit of resignation to the Sovereign Lord of Islam, all these represent different aspects of the inward life, projections on the spiritual plane of the ineffable experience of the human spirit."

—Dr. S. RADHAKRISHNAN.

இன்னோரன்ன சிறந்த உண்மைகளையெல்லாம் மௌனகுருவின் அருளுபதேசத்தால், தாயுமான சுவாமிகள் செவ்விதின் உணர்ந்து தெளிந்தார்; சமய சமரச ஞானம் அவர்க்கு நன்கினிது கைவந்தது. பல்வேறு இடங்களினின்று தோன்றும் நதிகளெல்லாம் முடிவிற் கடலையே சென்று அடைதல் போல, எல்லாச் சமயங்களும் அனுபவ நிலையில் இறைவனிடமே நம்மைக் கொண்டு சென்று சேர்க்கின்றன. ஆதலின் சமயங்களுள் ஒன்றுக்கொன்று மாறுபாடு எதுவும் இல்லை.

"வேறுபடும் சமயமெலாம்
புகுந்து பார்க்கின்,
விளங்குபரம் பொருளேநின்
விளையாட் டல்லால்,
மாறுபடும் கருத்தில்லை;
முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல்
வயங்கிற் றம்மா"

எனத் தாயுமானவர் பாடியருளியிருப்பது, அவர் தம் சமய சமரச ஞானத்தைத் தகவுற நமக்கு உணர்த்துவதாகும்.

## அத்துவித அனுபவம் :

சமய தத்துவ உலகில் 'அத்துவிதம்' என்னும் சொல்லின் பொருள்பற்றிப் பற்பல கருத்துக்களும் விளக்கங்களும் நிகழ்ந்தன. ஒரோவழி அவற்றுற் பூசலும் பிணக்கும் கூட நேர்ந்தன. கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், சுத்தாத்துவிதம், துவிதம் எனத் தனித்தனியே பல கொள்கைகளும் பிரிவுகளும் ஏற்படலாயின. இவைகள் ஒன்றற்கொன்று முரண்படுவன போலவும் தோன்றின. நம் தாயுமான சுவாமிகள் இத்தகைய வேற்றுமை நெறிகளில் தலைப்படாமல், இவைகளுளெல்லாம் ஊடுருவி நிற்கும் ஒருமைப் பாட்டினையே உணர்ந்து வலியுறுத்தி யருளினர்

"வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் மற்றுமுள்ள கலைகள் எல்லாம் அத்துவிதமார்க்கத்தையும், துவித மார்க்கத்தையுமே விரிவாக எடுத்துரைக்கின்றன; உண்மையில் ஆராய்ந்து பார்த்தால், துவித ஞானமே, அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞானம் ஆகும்; இவ்வுண்மை, ஊகம் (அனுமானம்), அனுபவம் (பிரத்தியட்சம்), வசனம் (ஆகமம்) என்னும் மூவகைப் பிரமாணங்களுக்கும் பொருத்தம் மிக்கதாகப் பொலிகின்றது; அத்துவிதவாதிகள் துவிதவாதிகள் ஆகிய உபயவாதிகளும் (இரு திறத்தினரும்) சம்மதிக்கத் தக்க அனுபவ உண்மை இது" எனத் தாயுமானவர் வலியுறுத்துகின்றார். இது போன்ற பாடற் பகுதிகளால், தாயுமானவரின் அனுபவ ஞானச் சிறப்பும், சமரச உணர்வின் சால்பும் நன்கு தெளியப்படும்.

## இல்லறமும் துறவறமும் :

சமய உலகிலும், தத்துவ ஆராய்ச்சிச் சூழல்களிலும், இல்லறம் துறவறம் பற்றிய பலவகைக் கருத்து வேறுபாடுகள் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றன. இவ்விரண்டனுள் ஏதேனும் ஒன்றை உயர்த்தியோ தாழ்த்தியோ, அவரவர் தத்தம் மனநிலைக்கேற்பப் பேசுவது வழக்கம். தாயுமான சுவாமிகளோ, 'சாட்டையிலாப் பம்பரம் போல இறைவனே உலகத்தை ஆட்டுவிக்கின்றான் என உணர்ந்து, அருள் நெறியில் நின்றால், இல்லறம் துறவறம் ஆகிய இரண்டுமே மேன்மை யுடையன' எனத் தம் நெஞ்சத்திற்கு அறிவுரை கூறியருள்கின்றார்.

## வீண் விவாதங்கள் :

இங்ஙனமே தாயுமானவர், கடவுள் உண்டா? இல்லையா? என்று தொன்று தொட்டே நிகழ்ந்து வரும் வீவாதங்களிலும் தலைப்பட விரும்பவில்லை. வாதிப்பவர்கள் தம் வாக்கு வன்மையினால், இல்லதை உள்ளதென்றும், உள்ளதை இல்லதென்றும், எப்படி வேண்டுமாயினும் வாதித்தல் கூடும். அவரவர்களும் தத்தம் கொள்கைகளுக்கு ஏற்பக் காரணங்களும் சான்றுகளும் காட்ட முற்படுவர். இத்தகைய பயனற்ற வீண் விவாதங்களிலிருந்து விலகி நின்று, இறைவனைத் தஞ்சம் அடைந்து, தம்மை வாழ்வித்தருளல் வேண்டும் எனப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றார் தாயுமானவர்!

"இல்லை உண்டென்
றெவர்பக்க மாயினும்
சொல்ல வோஅறி
யாத தொழும்பன்யன்;
செல்ல வேறொரு
திக்கறி யேன், எலாம்
வல்ல நீஎனை
வாழ்விக்க வேண்டுமே"

எனத்தாயுமானவர் பாடுதல் காணலாம்.

விண் வாதங்களிலேயே ஈடுபட்டுக் காலங் கழிக்கும் மக்கட் போலிகளின் இயல்பினைத் தாயுமானவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

"மாறுபடு தர்க்கம் தொடுக்க அறிவார்; சாண் வயிற்றின் பொருட்டதாக, மண்டலமும் விண் டலமும் ஒன்றாகி, மனதுழல மாலாகி நிற்க அறிவார்; வேறுபடு வேடங்கள் கொள்ள அறிவார்; ஒன்றை மெண மெணென்று அகம்வேற தாம் வித்தையறிவார்; சந்தைபோல் மெய்ந்நூல் விரிக்க அறிவார்; சீறுபுலிபோற் சீறி மூச்சைப் பிடித்து விழி செக்கச் சிவக்க அறிவார்; திரம் என்று தம்தம் மதத்தையே தாமதச் செய்கை கொடு உளற அறிவார்" எனவரும் தாயுமானவரின் பாடற்பகுதி படித்து மகிழ்தற் குரியது.

## வெருட்டி மருட்டும் வித்தை :

தாயுமானவர், தாமும் இத்தகைய போலி வாதங்களில் ஈடுபட்டு நின்றதாகக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார்: "நல்லோர்கள் ஞானயோக நீதிகளையுரைத்தால் அவர்களை மறுத்துக் கருமயோகந்தான் மிகவும் முக்கியம் என்று நாட்டுவேன் ; கருமயோகத்தினைப் பற்றி யாரேனும் வற்புறுத்திப் பேசினால், அதனை மறுத்து ஞானயோகம்தான் மிகவும் சிறந்தது என்று நவிலுவேன் ; வடமொழியிலே வல்லவர்கள் வந்தால், அவர்களிடம் தமிழிற் புலமை கைவந்தது போல விவரிக்கத் தொடங்குவேன்; வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழி யின் வசனங்கள் சிறிது புகல்வேன் ; இங்ஙனம் பிறரை மருட்டி வெருட்டி விடக் கற்றவித்தையி னால் யாது பயன் ? இத்தகைய போலிக் கல்வி கற்றவர்களைக் காட்டிலும், "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் ! கற்றும் அறிவில் லாத என் கர்மத்தை என் சொல்கேன்? மதியை என் சொல்கேன்?" என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளுகின்றார் தாயுமானவர் !

## ஞானச் சான்றாண்மை :

'பணியுமாம் என்றும் பெருமை' எனத் திருவள்ளுவர் கூறியதற் கேற்ப, இங்ஙனம் பல வகைகளில் தாயுமானவர் தம்மைத் தாமே பழித்துக் கொண்டாலும், அவர் எத்தகைய அருள்ஞானப் பெருந்தகை என்பதனை, அவர் தம் அழகிய இனிய பாடல்கள் நமக்கு நன்கினிது உணர்த்துகின்றன. அவர் காண்பதெல்லாம் சிவக் காட்சியாகக் காண்கின்றார். அவர் தம்முடைய கைகளாற் செய்யும் தொழில்கள் அனைத்தும் இறைவழிபாடேயாக முடிகின்றன. பேசுவன எல்லாம் மந்திரங்களாக அமைந்து விடுகின்றன. நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்தும், உலகில் வாழும் உயிர்களும் ஆகிய எல்லாம் இறைவனின் அருள்வடிவமாகவே அவர்க்குத் தோன்றுகின்றன. அவர்தம் தூய நெஞ்சே இறைவனுக்குக் கோயிலாக மாறுகின்றது. நினைவே நறுமணம் பரப்புகின்றது. அன்பே திருமஞ்சன நீராக அமைகின்றது. அவர் செப்புவதெல்லாம் செபம் ! சிந்திப்பதெல்லாம் தியானம் !

"கண்ணிற் காண்பதுன்
காட்சி ; கையாற் றொழில்
பண்ணல் பூசை,
பகர்வது மந்திரம் ;
மண்ணொடைந்தும்
வழங்குயிர் யாவுமே,
அண்ணலே ! நின்
அருள்வடிவு ஆகுமே !" (1)

"நெஞ்சகமே கோயில் ;
நினைவே சுகந்தம்; அன்பு
மஞ்சனநீர் ; பூசைகொள்ள
வாராய் பராபரமே !" (2)

"செப்புவதெல் லாம்செபம்! நான்
சிந்திப்பதெல்லாம் நின்
ஒப்பில் தியானம், என
ஓர்ந்தேன் பராபரமே !" (3)

"துள்ளும் அறியா எனது மனது பலி கொடுத்தேன், கர்மதுட்ட தேவதைகள் இல்லை. துரிய நிறைசாந்த தேவதையாம் உனக்கே தொழும்பன். அன்பு அபிடேகநீர். உள்ளுறையில் என் ஆவி நைவேத்தியம். பிராணன் ஒங்குமதி, தூப தீபம். ஒருகாலம் அன்று இது, சதாகால பூசையா ஒப்புவித்தேன்" என்றெல் லாம் வரும் தாயுமானவரின் பாடற் பகுதிகள், தாயுமானவரின் ஞானச் சான்றாண்மையினை நன்கினிது வெளிப்படுத்துகின்றன.

## நெஞ்சையள்ளும் செஞ்சொற் பாடல்கள் :

தாயுமானவரின் பாடல்களுள் ஒவ்வொன்றும், நெஞ்சையள்ளும் நீர்மையுடையன. மக்கட் பிறப்பின் விழுப்பத்தை விளக்கும் முறையில் வரும் "எண்ணரிய பிறவிதனில் மானிடப்

பிறவிதான் யாதினும் அரிதரிது காண்! இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஏது வருமோ அறிகிலேன்'' எனவரும் பாடல், அனைவருமே அறிந்ததொன்று! பெரும்பாலான மக்களிடம் பொதுவாக மிகுந்து காணப்படும் 'ஆரா இயற்கை அவா' ஆகிய பேராசையின் பெற்றியினை ''ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல்மீதிலே ஆணை செலவே நினைவர். அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும், நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர். நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இனும்காய கற்பம் தேடி நெஞ்சு புண்ணாவர். எல்லாம் யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்'' என எடுத்து விளக்கும் பாடலும் எல்லாரும் அறிந்த சிறந்த பாடல். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என அறை கூவி அழைக்கும் முறையில் ''காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்! அகண்டாகார சிவ போகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட நாம் இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே!'' எனவரும் பாடல் எவர் நெஞ்சையும் கவர வல்லது! ''சைவ சமயமே சமயம்.'' ''இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிகசைவம் அழகிது அந்தோ!'' என்பன போன்றுவரும் பாடற் பகுதிகள், உள்ளுவோர் உள்ள மெல்லாம் கொள்ளை கொள்ள வல்லன. பராபரக் கண்ணி, எந்நாட் கண்ணி போல்வன, பல்காற் பயின்று சுவைத்து மகிழும் பான்மையன.

## சிறந்த கவிதைகள்:

உலகியற்கைப் பொருள்களிற் காணப்படும் பலதிற அமைதியின்ப அழகினை ஆராய்ந்து உணரும் சான்றோர்களுக்கும், மனித வாழ்க்கையின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண்பொருள்களை நுனித்தறிய முயலும் அறிஞர்களுக்கும், சமயத்துறையிலும் தத்துவநெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய்யுணர்வாளர்களுக்கும், ஒழுக்கத் தூய்மையிலும் இறையருளுணர்விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்து நிற்கும் அருளாளர்கட்கும், நிலைத்த அழகுடையதாய் நெஞ்சைத்திறம்படக் கவர்வதாய்த் துலங்குவது; சிறந்ததொரு கவிதையினைப் படித்துச் சுவைத்து மகிழ்வதினும் வேறு பிறிதொன்று இல்லை.(5)

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித் தின்புறு வோர்க்கும்,
மருவுமிவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,
விரிவுறு சமய மெய்யுணர்வு ஒளியில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்த தூயவர்க்கும்,
சிறந்தநற் கவிதையே இன்பாம்!!

—ந. ரா. மு.

148716

## முடிவுரை :

இத்தகைய சிறந்துயர்ந்த தெய்விகக் கவிதைத் தொகுதியாகத் தாயுமானவரின் பாடல்கள் சாலவும் திகழ்கின்றன. அவற்றை நாம் அனைவரும் அன்புடன் ஓதியுணர்ந்து, நலம் பெற்றுய்ய முயலுவோமாக! —ஆசிரியர்

---

5. "To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a soul soaring high into ethereal regions of religion and philosophy, to a spirit seeking serene rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective as the study of a fine piece of poetry".

– MARAI MALAI ADIGAL



# சம்பந்தர்தமிழில் சாத்திரநோக்கு

திருவாவடுதுறை ஆதீனப்புலவர், சித்தாந்தக் கலைச்செல்வர்
திரு. க. வச்சிரவேலுமுதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்.

சாத்திரம் என்பது சமய அனுபவங்களின் அடிப்படைக் கருத்தொழுங்கைக் கூறும் நூல். அஃது இலக்கியத்திற்கு இலக்கணம் போல்வது. சமய நெறியில் முதன்மையான இலக்கியமாகப் போற்றப்படுபவை முதல்வனைத் தலைப்பட்டு உணர்ந்த பெருமக்களுடைய வாய்மொழிகளே ஆகும். அவையே மறைகள் எனவும், மந்திரங்கள் எனவும் போற்றப்படுவன. செய்யுள்களில் தலைசிறந்தவை மெய்யுணர்வு பெற்ற பெருமக்கள் பாடியனவே ஆகும். அவர்கள் கடவுள் அனுபவமாகிய இன்ப வெள்ளத்தில் மூழ்கிப் பேரின்ப அனுபவம் பெறும்போது அவ்வனுபவப் பயனாக வெளிவருவனவே அச்செய்யுள்கள். உணர்ந்து பயில்வோர்க்கு, உயர்வற உயர்நலம் பயப்பனவாய் அமைதலின், திருமுறைகள் எனப் போற்றப் பெறும். முறை—நூல். திருமுறை—திருவைப் பயக்கும் உயர் நூல்.

பின்னே வருகின்ற சிவானுபூதிச் செல்வர்கள் அத்திருமுறைகளில் இலைமறைகனிகள் போலுள்ள உயர்ந்த கருத்தொழுங்குகளைக் கண்டுணர்ந்து, பொதுமக்கள் நன்னெறியை உணர்ந்து உய்தற்பொருட்டு ஒழுங்குபடுத்தி நூல்களாகவும் தோத்திரங்களாகவும் இயற்றுவர்; இயற்றி அவற்றைத் தம் மாணாக்கர்களுக்கு உணர்த்தி வருவர். இங்ஙனம் சிவானுபூதிச் செல்வர்கள், ஆசியர் மாணவர் என்னும் வழிமுறையில் இடையறவுபடாது உணர்த்தி வருவனவே சாத்திரங்கள் எனப்பெறும். அவற்றுள் உயர்ந்த சமய அனுபவங்களையும் கருத்தொழுங்குகளையும் ஐயத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தி உணர்த்துவனவே மெய்கண்ட நூல்கள் ஆகும்.

இவை, சைவசித்தாந்த சாத்திரங்கள் என வழங்கப்பெறும்; இவை பதினான்கு என்னும் எண்ணிக்கையினை உடையவை.

அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கந்தரும் விண்மீன்களை மேடம், இடபம் முதலாகப் பன்னிரண்டு தொகுப்பில் வைத்து உணர்வது வானநூலின் இயல்பு. அதுபோல, தமிழ் மொழியில் எழுந்துள்ள தலைசிறந்த உயர் முறைகளை நம் முன்னோர்கள் பன்னிரண்டு திருமுறைகள் என வகுத்தருளினர். பன்னிரண்டு வான வீடுகளில் குறிக்கப்பெறும் விண்மீன்கள் இருபத்தேழு; அவையாவும் தன்னொளியுடையவை. அதுபோல, திருமுறைகளைத் தம் அகக்கண்களால் கண்டு வெளிப்படுத்திய சுதந்திர ஞானம்பெற்ற திருமுறை ஆசிரியர்களும் இருபத்தெழுவர் ஆவர். அவர்களுள் முதலாமவராகக் குறிக்கப்பெறும் அருளாசிரியர் திருஞானசம்பந்தர். அவர்தம் வாய்மொழியில் சாத்திரக் கருத்துக்கள் பல ஐயத்திற்கு இடமின்றி எழுந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைச் சிந்தித்து உணர்வும் இன்பமும் பெறுவோமாக.

பின்வரும் திருப்பாட்டு, அவர் திருமுதுகுன்றத்தில் அருளிச் செய்த, நட்டப்பாடைப் பண் அமைந்த, திருப்பதிகத்தில் மூன்றாவதாக வருவது.

விளையாத தொர் பரிசில் வரு
பசுபாசவே தனை ஒண்
தளை யாயின தவிரவ்வருள்
தலை வன்னது சார்பாம்
களையார் தரு கதிராயிரம்
உடை யவ்வவ னோடு
முளை மாமதி தவழும் உயர்
முது குன்றடை வோமே.

என்பது பாட்டு.

எல்லா உலகங்களுக்கும் உயிர்களுக்கும் தலைவனாகிய சிவபிரான், இவ்வுலகத்துக்கு அணுக்கமாக விளங்கிநின்று அருள் புரிவதற்கு இடமாக உள்ள திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தை அடைந்து அவனை வழிபடு

வோம் என்பது இதன் முதன்மையான கருத்து. இதில் தலைவனுக்குக் கூறும் அடைமொழியும் முதுகுன்றத்துக்குக் கூறும் அடைமொழியும் உண்மையின் இணைப்பு நிலையை, சித்தாந்த சைவத்தின் அடிப்படை உண்மைகளை, நன்கு இனிது விளக்குபவை.

இறைவனைத் தலைவன் எனக் குறித்த ஆசிரியர் உயிர்களைப் பசு என்னும் சொல்லால் குறிக்கின்றார். பசு என்னும் சொல் கட்டுற்றது என்னும் பொருளைத் தரும்; தருதலின், உயிர்கள் தன்வயம் இல்லாதனவாய், தடுக்கப்பட்ட அறிவு செயல்களை உடையவை என்பதும், அங்ஙனம் அவற்றைத் தடுக்கும் பொருள்கள் உள்ளன என்பதும் குறிப்பிக்கப்பட்டன. உயிர்களுக்குத் தடையாய் உள்ள பொருள்களைப் பாசம், வேதனை, ஒண்தனை என்னும் பெயர்களாற் குறிக்கின்றார் சம்பந்தர். பசுக்கள் இவற்றைத் தவிர்ந்து உய்யும்படி அருள்பவன் தலைவன் என்பார், "பசுபாச வேதனை ஒண்தனை ஆயின தவிர அருள் தலைவன்" எனக் கூறியருளினர்.

பாசம் என்னும் சொல், கட்டுவது என்னும் பொருளைத் தரும். அஃது உயிர்களின் அறிவு செயல்களை மறைத்துத் தடைசெய்யும் ஆணவத்தைக் குறிக்கும். நெல்லிற்கு உமியும் செம்பிற்குக் களிம்புபோல, உயிர்க்கு உள்ள இயற்கைக் குற்றமாகிய பகைப்பொருளே ஆணவம் என்பது. அஃது இருள்-மலம்-மாசு-சகசமலம் முதலிய பெயர்களால் குறிக்கப்படும்; இங்குப் பாசம் என்னப்பட்டது.

வேதனை என்பது உயிர்களுக்கு உண்டாகும் நுகர்ச்சிகளாகிய இன்பதுன்ப மயக்கங்களைக் குறிக்கும். அஃது இங்கு ஆகுபெயராய் நின்று இன்பத் துன்ப மயக்கங்களுக்குக் காரணமாகிய இருவினைகளைக் குறிக்கின்றது. இருவினைகளைக் கன்மம் எனவும் வழங்கும் நூல்கள். இன்பத் துன்ப நுகர்ச்சியைத் தன்வேதனை என்பர் அளவை நூலோர்.

இனி, ஒண்தனை என்றது உயிர்களுக்குஅறிவு செயல்களை விளக்குவனவாயும், தடை செய்வனவாயும் உள்ள உலகப்பொருள்களையும், அவற்றின் முதற் காரணமாகிய மாயையினையும் குறித்து நிற்கின்றது. நாம் வாழும் உலகத்தை உடம்பு எனவும், அதன் சூழ்நிலை எனவும் இரண்டாக வகைப்படுத்தி உணரலாம்; மேலும் கூர்ந்து நோக்கின், உடம்பும், அதன் கண் உள்ள மெய், வாய், கை, கால் முதலிய புறக் கருவிகள்; மனம் முதலிய அகக் கருவிகள் ஆகிய கரணங்களும், உடம்பு நிலவுதற்கு இடமாக உள்ள உலகும், உடம்பிற்கு ஊட்டமும் தேய்வுமாகியவற்றைக் கொடுக்கும் நுகர்ச்சிப் பொருள்களும் என நான்காகவும் பகுத்து அறியலாம். இவற்றை முறையே தனு, கரணம், புவனம், போகம் என மெய்ந்நூல்கள் குறிக்கின்றன. இவை நமக்குப் புலப்படும் உருவுடையவை; இவற்றின் முதற் காரணமாய்ப் புலப்படாத அருநிலையில், யாண்டும் நிறைந்து உள்ளதாய் இருக்கும் அறிவில் ஆற்றலை (சடசக்தியை) மாயை என்பர். அதன் காரியமாய்ப் புலப்படும் உருவுடைப் பொருள்களை மாயேயம் என்பர் நூலோர். உடம்பு, கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள்கள் என்பவை மாயேயம்; இவற்றின் முதற்காரணம் மாயை.

நமக்கு உடம்பு இன்றி, உலகத்துப் பொருள்களின் தொடர்பு இன்றி, அறிவு விளங்காது என்பது கண்கூடு. நமக்கு மாறிமாறி வந்து கொண்டிருக்கும் நனவு கனவு உறக்கம் என்னும் உணர்வு நிலைகளை, தன்நோக்கு உணர்வால் சிறிது உணர்ந்து பார்த்தால், உடம்போடும், மனத்தோடும், நம் அறிவிற்குத் தொடர்பு உள்ள வரையில், அறிவு விளக்கம் உள்ளது; அத்தொடர்பு நீங்க, அறியாமையாகிய உணர்வு-இழப்பு உண்டாகின்றது என்பதை எளிதின் உணர்வோம். இவ்வுண்மையை, கலைஞானத்தைப் பன்னிரு சூத்திரங்களில் அடக்கிக் கூறித் தமிழகத்தைத் தெளிவித்த மெய்கண்டமுதல்வர் "மாயா தனு விளக்கா மற்றுள்ளம் காணாதல்-ஆயாதாம் ஒன்றை" என விளக்கி அருளினர்.

"மாயையின் காரியமாகிய உடம்பு, கண்களுக்கு விளக்கு உதவியாதல் போல, துணையாக நிற்க, அதனைக் கொண்டு அறிந்தால் அன்றி, உயிர் ஒன்றையும் அறியாது என்பது அவர் வாய்மொழியின் பொருள். இதற்கு மூல மறையாக உள்ள தொடரே திருஞானசம்பந்தர் திருவாக்கில் எழுந்த "ஒண்தனை" என்பது. ஒண்தனை—ஒட்பத்தைத் தரும் தளை, அறிவை விளக்கும் பிணிப்பு, அஃதாவது மாயை.

இனி, பசுவும், பாசவேதனை ஒண்தனை ஆயினவும், பசு இவற்றைத் தவிர்த்து இன்புறும்படி

அருளும் தலைவனும், என்றும் உள்ள தோற்றமில் பொருள்கள் (அநாதி நித்திய பதார்த்தங்கள்) இவ்வுண்மையை, உணர்த்துதற் பொருட்டு, "விளையாததோர் பரிசில் வரு" என்னும் பெயரெச்சத் தொடரை முதற்கண் அமைத்தனர் ஆசிரியர்; அஃது அம் மூன்றனோடும் தனித்தனிக் கூட்டி உரைக்கப்படும். ஒரு காலத்தில் தோன்றியது எனப்படாத தன்மையில், தோற்றமில் காலமாக உடம்பொடு கூடிப் பிறந்தும், அதனைப் பிரிந்து மறைந்தும் வருவது பசு எனப்படும் உயிர்.

பாசம் என்பது அவ்வுயிர்களைத் தோற்றமில் காலமாகப் பிணித்து வருவது. இஃது ஆணவம் எனப்பெறும். உயிர்கள் ஆணவத்தில் அழுந்தி இருக்கும் தனிநிலை (கேவல அவத்தை) ஏனைய தளைகளோடும் கூடிநிற்கும் கூட்டுநிலை (சகல அவத்தை) என இருநிலைகளை உடையன. பாசம் எனப்பட்ட ஆணவம் தனிநிலையில் உயிர்களின் அறிவு இச்சை செயல்களை விளங்காதபடி மறைத்து நிற்கும்; அவ்வுயிர்கள் ஏனைய தளைகளோடு கூடித் தம் அறிவு விழைவு செயல்கள் ஓரளவு விளக்கம் பெற்று நிற்கும் கூட்டுநிலையில் அப்பாசம் அவற்றின் ஆற்றல்களை, தம்மையும் தலைவனையும் நோக்காதபடி, புறப்பொருள்களில் வீழ்த்தி நிற்கும். ஆணவத்தின் மறைக்கும் ஆற்றலை ஆவாரக சத்தி எனவும், வீழ்க்கும் ஆற்றலை அதோ நியாமிகா சத்தி எனவும் மெய்ந்நூல்கள் குறிக்கும். வேதனை எனப்பட்ட இருவினை தோற்றமில் காலமாக உயிர்களுக்கு இன்பத் துன்பமயக்க நுகர்ச்சியைக் கொடுத்து வரும். ஒண்தளை எனப்பட்ட மாயையும் அதன் ஆக்கப்பொருள்களும் உயிர்களுக்கு இன்பத் துன்ப மயக்க நுகர்ச்சிக்கு வேண்டிய அளவு அவற்றின் அறிவு விழைவு செயல்களை விளக்குவதோடு, அவற்றைத் தம் எல்லையிலேயே அடக்கி வைப்பதாகிய மயக்கத்தையும் செய்து தளைத்துநிற்கும். இனி, தலைவன் எனப்பட்ட முதல்வன் இவற்றை இங்ஙனம் தொழிற்படுமாறு செய்து உயிர்களின் ஆற்றல்களை நுணுகி வளரும்படி செய்வான். இச்செயல் மறைத்தல் திரோபவம், பந்தமுறப் பிணித்தல் எனப் பல வகையாக நூல்களுள் குறிக்கப்பெறும். இம் மறைத்தல் தொழிலில் ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழிலும் அடங்கும். இச்செயலின் அடையாளமாகவே இறைவன் திருக்கையில் மூவிலைவேல் உள்ளது.

"மூன்று மூர்த்தியுள் நின்றியலுந் தொழில் மூன்றுமாயின மூவிலைச் சூலத்தன்" என்பது அப்பர் அருள்மொழி. உயிர்கள், இறைவன் நியமிக்கும் இவ்வொழுங்குக்கட்டுப்பாட்டினால், தம்முணர்வு நுணுகி மலர்ந்து விரியப்பெறும். அப்பக்குவ நிலையில் முதல்வன் அவற்றிற்குத் தன்னோடு உள்ள தொடர்பை விளக்கி ஆட்கொள்வன். அந்நிலையில் அவ்வுயிர்கள் மூவகைத் தளைகளினின்றும் முற்றிலும் நீங்கி, வியாபக உணர்வுபெற்று முதல்வனைத் தலைப்பட்டு உணரும்; உணர்ந்து அவனது பேரின்ப அருள் ஒளியில் திளைத்து இன்புறும். இவ்வின்புறு நிலையே, 'பாசவேதனை ஒண்தளை ஆயின தவிர அருள் தலைவன்' என்னும் தொடரில், அருளுதல் என்பதனால் குறிக்கப்பெற்றது.

முதல்வனைத் தலைவன் என்றமையால் பசுக்கள் அவனுக்கு அடிமை என்பதும், ஒண்தளை எனப்பட்ட மாயை அவனது உடைமை என்பதும் பெறப்படும்.

மேலே எடுத்துக்கொண்ட பாட்டின் முதல் இரண்டு அடிகளில் மேற்காட்டியவாறு சைவ சித்தாந்த நுண்பொருள் அனைத்தும் கோவைப்பட்டுச் செறிந்து நிற்றல் தலையாய அறிவினால் எவர்க்கும் இன்பமும் வியப்பும் தருதற்குரியது.

இனி, பின்னிரண்டு அடிகளைச் சிறிது உற்று நோக்குவோம். அவை திருமுதுகுன்றத்தின் இயற்கை வனப்பை எடுத்து நவில்கின்றன. சைவ சித்தாந்தத்தில் உலகை, கயிற்றில் அரவுபோல வெறும் தோற்றமாகிய இல்பொருள் எனக் கொள்வதில்லை; அது காரண காரிய நியதிக்கு உட்பட்டு மாற்றம் எய்திவரும் உள்பொருள் என்பதே சித்தாந்தம். இவ்வுண்மை விளங்குதற் பொருட்டு, சம்பந்தர் செய்யுள்களில் இரண்டடிகளில் முதல்வனுடன் இயற்கை வனப்பும் குறிக்கப்பெறும். திருமுதுகுன்றத்தில் அளவில் பேரொளியை உடைய கதிரவனும் தவழ்கின்றான்; அக்கதிரவனால் ஒளிபெற்றுக் கலைவளரப்பெறும் முளைமா மதியும் தவழ்கின்றது.

இங்ஙனம், கூறினமையின், உலகம் காரண காரிய நியதிக்கு உட்பட்டு மாறிவரும் உள்

பொருளே என்பது குறிக்கப்பெற்றது. மேலும் சைதன்னியம் எனப்படும் அறிவுடைப் பொருள்கள் இருவகைப்படுவன என்பதையும் இவ்வடிகள் குறிக்கின்றன. இயற்கை முற்றுணர்வுடைய முதல்வனது இருப்பைக் கதிரவன் என்றது குறிப்பால் உணர்த்துகின்றது; அம்முதல்வனால் விளக்கப்பெற்று முறையாக வளரும் செயற்கைச் சிற்றறிவுடைய உயிர்களின் இருப்பு முளைமாமதி என்பதனால் குறிப்பிக்கப் பெறுகின்றது. முதல்வன் தானே தனித்து நின்று அறிந்து அறிவிப்பவன்; உயிர்கள் அறிவிக்க அறிவனவாய், சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிவன. இவ்வுண்மைகள் எடுத்துக் கொண்ட பாட்டில் தெளிவு பிறக்கும்படி கூறப்படுதல் ஓர்ந்து உணரத்தக்கது' இன்னும் பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அணைவதே வீடுபேறு என்னும் உண்மையும் குறிப்பிக்கப்பட்டது; தலைவன் எனப்பட்ட முதல்வன் உயிர்களுக்கு அருள்பவன் என்பதும், உயிர்கள் என்றும் முதல்வன் அருளைப் பெற்று வாழ்தற்கு உரியன என்பதும் உணர்த்தப்படுதல் காண்க.

இன்னும் ஒரு சிறந்த செய்யுளில் திருஞான சம்பந்தர் அருளிச் செய்துள்ள பரம சித்தாந்தமாகிய உண்மை முடிபைக் காண்போம். வேத முடிவிலும் ஆகம முடிவிலும் பயிலும் அறிஞர்களுக்கு உண்டாகும் கருத்து வேறுபாடு ஒன்று உண்டு. அது முதல்வனும் உயிரும் வேறா ஒன்றா என்னும் வினாவைப் பற்றியது. சிலர் முதல்வனே உயிர் என்பர்; வேறு சிலர் முதல்வனும் உயிரும் வேறு வேறே என்பர். இந்நிலையில் சித்தாந்த சைவர்கள் முதல்வனும் உயிர்களும் வேறுவேறு பொருள்களே; ஆயினும் முதல்வன் உயிர்களில் கலந்து, தான் என வேறு காணப்படாது ஒன்றேயாய் நிற்றலும் உரியன்; மேலும், உயிர்களுக்கு அறிவை விளக்கி அவற்றைச் செலுத்துதலால் உடனாதலும் உரியன் என்பர். உயிர்களுக்கும் முதல்வனுக்கும் உள்ள பிரிவில்லாத இச் சம்பந்தத்தை மெய்கண்டதேவர் "அவையே தானே ஆய்" என இரண்டாம் சூத்திரத்துள் குறித்தருளினார். அத் தொடரின் பொருளை, "இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும்" என விளக்கியும் உரைத்தருளினர். அருள்நந்திசிவம் சிவஞானபோதத்தின் வழிநூலாகச் செய்தருளிய சிவஞானசித்தியாரில், "உலகெலாமாகி வேறாய் உடனுமாய், ஒளியாய் ஓங்கி" என அச்சம்பந்தத்தை விளக்கி அருளுகின்றார். மேலும், இங்கு ஒன்றாய் வேறாய் உடனுமாய் இறைவன் உயிர்களில் நிற்கின்றான் என்பது, வேதங்களில் அத்வைதம் எனவும் அத்வீதியம் எனவும் வந்துள்ள சொல்லின் பொருளே என்பதையும் மெய்கண்டதேவர் நிருபித்து அருளினர். இவை எல்லாவற்றிற்கும் மூல மறையாக எழுந்தஞானமொழி பின் வருமாறு;

ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணாண்குண
மூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம்மவை
ஐந்தாய்
ஆறார் சுவையே ழோசையொடெட்டுத்
திசை தானாய்
வேறாயுடனானானிடம் வீழிம் மிழலையே.

இது திருஞான சம்பந்தர் வாய்மொழியாகும். திருவுந்தியாரில் இங்குக் கூறிவரும் பொருண்மை பற்றிய பரம சித்தாந்தத்தைப் பின்வரும் தாழிசை தெரிவிக்கின்றது.

அதுஇது என்னா அனைத்து அறிவாகும்
அதுஇது என்றறிந்து உந்தீ பற!
அவிழ்ந்த சடையா ரென்றுந்தீ பற !!

எனவரும். "அவிழ்ந்த சடையார் அறிவு, அது இது என்று அறிந்து, அது இது என்னா(த) அனைத்து ஆகும்" என்பது பாட்டின் உரைநடை. இங்கு அது என்றது பரம்பொருள்; இது என்றது சீவான்மா எனப்படும் உயிர்.

கல்லால் நிழலின்கண் மோன முத்திரை அத்தனாய் இருந்து உணர்த்தும் சிவபிரானது ஞானமாவது பரமான்மாவையும் சீவான்மாவையும், ஒன்றன் இலக்கணம் மற்றொன்றன் இலக்கணத்தோடு மயங்காதபடி பிரித்து உணர்ந்து பரமான்மாவைத் தலைப்பட்டுணரும் இன்புறு நிலையில், உணரப்படுவது, உணர்வது உணர்வு என்னும் பகுப்புணர்வு தோன்றாதபடி ஒன்றி அடங்கி நிற்றலே ஆகும் என்பது, இப்பாட்டின் பொருள். இப்பாட்டின் பொருளை மகா வாக்கியப் பொருளோடு இணைத்து உணர்த்தும் திருக்களிற்றுப்படியார் என்னும் வழிநூல் மேற்காட்டிய சம்பந்தர் வாய்மொழியினையே

எடுத்துக்காட்டி முடிபு கூறுகின்றது: அம் முடிந்த முடிபு வருமாறு:

> ஈருகி யங்கே முதலொன்று மிங்கிரண்டாய்
> மாறுத வெண்வகையாய்
> மற்றிவற்றின்—வேருய்
> உடனு யிருக்கும் உருவுடைமை யென்றுங்
> கடனு யிருக்கின்றான் காண்.

இங்ஙனம் மேலான பொருள்கள் பற்றிய உண்மை முடிபுகள் சம்பந்தர் திருவாக்கில் ஐயத்திற்கு இடமின்றித் தெளிவுபட வருவன பல உள. இவற்றை ஓர்ந்து உறுதியை உணர்ந்து ஒழுகுதல் தலையாய அறிவினர் கடன்.



பிட்சாடனர் திருவுருவம்

# மதிப்புரை

## (1) பெரிய புராண ஆய்வுரை முதல்தொகுதி :

இந்நூல், 'தமிழ்க்கடல்' சிவத்திரு மறைமலையடிகளார் அவர்களின் புதல்வர், 'திருமுறைச் செல்வர்' 'சித்தாந்த தினகரன்' பேராசிரியர் மறை. திருநாவுக்கரசு அவர்களால் எழுதப் பெற்றது. பெரிய புராணத்தின் காப்பியத் தலைவர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றினை, அகச் சான்று புறச்சான்றுகளுடன், மிக நுணுக்கமாகவும், விரிவாகவும், ஆசிரியர் அவர்கள் அரிதின் ஆராய்ந்து எழுதியிருக்கின்றார். ஆசிரியரின் செந்தமிழ்ப் புலமையும், திருமுறைப் பயிற்சியும், சித்தாந்த ஞானமும், சிவநெறியுணர்வும், ஆராய்ச்சியுள்ளமும், நூலின் தொடக்கமுதல் இறுதி வரையிற் சுடர்விட்டு மிளிர்கின்றன. சைவ அன்பர்கள் அனைவரும் படித்து மகிழ்ந்து பயன்பெறத் தகுந்த, நல்ல ஆராய்ச்சி நூல் ! 232 பக்கங்கள். நல்ல அழகிய திருத்தமான பதிப்பு. விலை ரூபா 6-50. கிடைக்குமிடம் : "மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி, (வழி) ஈரோடு, கோவை மாவட்டம்". மற்றும் சைவசித்தாந்த மகாசமாசம், 12-ஏ. கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர். சென்னை-4. என்னும் முகவரியிலும், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் சென்னை மதுரை கோயம்புத்தூர் கும்பகோணம் திருநெல்வேலி விற்பனைநிலையங்களிலும் கிடைக்கும்.

தனித்தமிழ் இயக்கத் தந்தை ! சைவசித் தாந்தச் சான்றோர் !
முனைத்தநற் கொள்கை வீரர் ! மும்மொழிப் புலமை வேந்தர் !
மனித்தருள் தெய்வம் போன்ற மறைமலை அடிகளார்தாம்,
எனைப்பல துறையிற் சைவம், இன்றமிழ் வளர்த்தார் நன்றே ! (1)

இத்தகு சிறந்த நல்ல இணையிலாச் சான்றோர் மைந்தர் !
வித்தகப் புலமை மிக்கார் ! திருநாவுக் கரசாம் மேலோர் !
மெய்த்திருத் தொண்டர் மேன்மை சால்புரா ண(ம்)மிக்கிங் காராய்ந்(து),
எத்திறத் தவரும் போற்ற இனிதளித் துயர்ந்தொ ளிர்ந்தார் ! (2)

நம்பியா ரூரர் என்னும் சுந்தரர் பெருமான், நன்றே
இம்பரிற் சிவபி ரான்றன் எழிற்பெருந் தோழர் ஆக,
உம்பரும் போற்ற வாழ்ந்த உண்மைநல் வரலா ருய்ந்து,
செம்பொருட் டிறங்கள் கண்டார், திருநாவுக் கரசர்; வாழ்க ! (3)

சொன்னலம் புகழ்கோ ? தூய சுவைப்பொருள் புகழ்கோ? நுட்பம்
முன்னிறன் ருய்த்து கூறும் முறையினைப் புகழ்கோ ? பக்தி
தன்னலம் புகழ்கோ? சைவத் தமிழ்நலம் புகழ்கோ? எல்லாப்
பன்னல முஞ்சால் இந்நூல், பயன்மிகும் சிறந்த நூலாம் ! (4)

—ந. ரா. முருகவேள்.

# மனித வாழ்வியலின் சொல்லோவியம்

## முன்னுரை :

ஓவியமும் காவியமும் ஒன்றற்கொன்று மிகவும் தொடர்புடைய கலைகள் என்பர். மிகப் பழங் காலத்தில் மக்கள் தம்முடைய எண்ணங்களை, ஓவியங்கள் (Pictograph) வரைவதன் வாயிலாகவே வெளியிட்டு வந்தனர். பின்னர் நாளடைவில் நாகரிகம் வளர வளரப் பல்வேறு மொழிகளும், அவற்றின்கட் பற்பல காவியங்களும் தோன்றலாயின.

இயற்கைக் காட்சிகளையும், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளையும், ஓவியம் எழில்மிக்க வண்ணங்களினல் அழகுற வரைந்து காட்டுகின்றது. அங்ஙனமே காவியமும், அவற்றை அழகிய பற்பல சொற்களினுல் நிரல்படத் தொகுத்துப் பாடி விளக்குகின்றது. இவ்வகையில் இரண்டிற்கும் இடையே மிகமிக நெருங்கிய தொடர்பும், ஒப்புமையும் அமைந்திருத்தல் வெள்ளிடைமலை. ஓவியம் காவியம் என்னும் இரண்டுமே, நம்மனோர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சிறந்த கலைகள். இவ்விரு கலைகளுமே நம்முடைய மனித வாழ்வியலை நுண்ணிதின் ஆராய்ந்து, சிந்தைக்கு இனிய முறையில் செவ்விதின் விளக்கிக் காட்டுகின்றன.

## சேக்குவீயர் :

உலகப் புகழ்பெற்ற பெருங் கவிஞர் ஆகிய சேக்குவீயர் (shakespeare), தம்முடைய நூல்களில், மனித வாழ்வியல்பினை ஆங்காங்கே சிறுசிறு சொல்லோவியங்களாக அழகுற எழுதிக் காட்டுகின்ருர் : " வாழ்க்கை என்பது ஒரு நடக்கும் நிழலேயாகும்; ஓர் ஏழை நடிகன் மேடையின்மேல் பெருமிதமாக நடக்கின்ருன்; வறிதே தன் உடலை அசைத்துக் குலுக்கி அலட்டிக் கொள்கின்ருன். அதற்குப் பிறகு அவனைப் பற்றிய செய்தி எதுவும் கேட்கப் படுவதேயில்லை. ஓர் அறிவிலியால், கூச்சலும் ஆரவாரமும் நிரம்ப, ஒருவகையான பொருட் குறிப்பும் இன்றிச் சொல்லப்படுகின்ற சுவையற்ற கதையே, வாழ்க்கையாகும்" (1) என்று 'மகபதி' என்னும் நாடக நூலிற் குறிப்பிடுகின்ருர்.

இவ்வாறே மற்ருேர் இடத்தில் "உலகமே ஒரு நாடக மேடை. ஆண்களும் பெண்களும் அதன்கட் போதரும் வெறும் நடிகரேயாவர். அவர்கள் பிறப்பு என்னும் நுழைவாயிலையும், இறப்பு என்னும் வெளிவாயிலையும் பெற்றுள்ளனர். ஒரு மனிதனே தனக்குரிய நேரத்திற் பற்பல வேடங்களை ஏற்று நடிக்கின்ருன். அவனுடைய நடிப்பு ஆகிய உலக வாழ்க்கை, ஏழு வகைப் பருவங்களாக அமைகின்றது" (2) என்று, 'நீங்கள் விரும்புவது போலவே' என்னும் நாடகத்தில், அரிய முறையில் உருவகம் செய்து பாடியிருக்கின்ருர். 'கனவு எதனுல் அமைகின்றதோ, அதனுலேயே நாமும் அமைக்கப்பட்டிருக்கின்ருேம். நம்முடைய சிறிய வாழ்வு, தூக்கம் என்பதனேடு சுழன்று உழன்று முடிந்து போகின்றது" (3) என்று 'பெரும் புயல்' என்னும் நாடகத்தல் சேக்குவீயர் கூறுகின்ருர்.

உலக வாழ்க்கை என்பதுதான்
உலவித் திரியும் வெறும் நிழலே;
நலமில் வறிய நடிகன் அவன்,
நடந்து குலுங்கி மேடையினில்
சிலவே நேரம் இருந்தொழிவான்;
பின்னர்ச் சிறிதும் செவிக்கணுகான்;
இலகு சுவையின் றறிவிலிசொல
கதைபோற் பொருளில்
வெற்ருெலியே ! (1)

---

(1) "Life is but a walking shadow;
a poor player
That struts and frets his hour
upon the stage,
And then is heard no more;
it is a tale
Told by an idiot full of
sound and fury,
signifying nothing."

—MACBETH

உலகம் எலாம்ஒரு நாடக
மேடை ; ஒருங்கியைந்து
நிலவும்ஆண் பெண்கள் எலாமும்,
வெறும் நிழல் போல்நடிகர்;
உலவ வரும்வழி, செல்வழி
உண்டு, அவர்க்கு; உற்றொருவர்
பலவகைப் பாங்கின் நடிப்பர்; ஏழ்
வாழ்க்கைப் படிவங்களே ! (2)
கனவு எதனல் அமைந்துவரக்
காண்கின் ருேமோ, அதனல்தான்
மனிதர் நாமும், நம்வாழ்வும்
வகுக்கப் பெற்று வயங்குகின்ருேம்;
துனிநின் றியைந்த நம்முடைய
சிறிய வாழ்வ துவும், தூக்கம்
எனும்ஓர் நிலையிற் சுழன்றுழன்றே,
இடரிற் கிடந்து முடிந்தொழியும். (3)

—ந. ரா. மு.

இவற்றைப் போன்று, மனித வாழ்வியல்பினை விவரிக்கும் எத்தனையோ பற்பல பாடல்கள் அமிழ்தினும் இனிய நம் தமிழ் இலக்கியங்களின் காணப்படுகின்றன. அவைகளுள் "வாக்கிற்கு அருணகிரி" என நம் தமிழ்கூறும் நல்லுலகம் புகழ்ந்து போற்றிப் பாராட்டி வருகின்ற அருண கிரிநாதர் பெருமான், தமது திருப்புகழ்ப் பாடல் களுள் ஒன்றில், மனித வாழ்வியல்பினை விளக் கித் தீட்டிக் காட்டும் அழகிய இனிய சொல் லோவியம் ஒன்றினை மட்டும், ஈண்டுக் கண்டு அமைதல் சாலும் !

## சொல்லோவியம் :

"நம்முடைய மனித வாழ்வு அறுகம் புல்லின் நுனியில் உள்ள பனித்துளியைப் போன்று, மிகச் சிறிய அளவில் முதன் முதலில் தொடங்கு கின்றது. தந்தையின் விந்து, தாயின் சுரோணிதத்துடன் கலந்து, கருப் பையைச் சென்று சேர்கின்றது. அங்கே அது பத்துத் திங்கள் தங்கியிருந்து பெரிய உடலாக வளர்ந்து குழந்தையாகப் பிறக்கின்றது.

அக்குழந்தையினைப் பெற்றோர்களும் உற்றோர் களும் மிகவும் அன்புடன் எடுத்து வளர்க் கின்றனர். குழந்தை குதலை மொழிகள் பேசு கின்றது. அதுகேட்டுத் தாயும் தந்தையும் மகிழ்ந்து, மோகங் கொள்கின்றனர். அருமையி னில் அருமையாகச் சீராட்டிப் பாராட்டிப் போற்றுகின்றனர். குழந்தையின் உடல் மொளுமொளு என வளர்கின்றது. ஆளும், பெரியவன் ஆகி வாலிபப் பருவம் அடைகின்ருன்.

பின்னர்ப் பெரிய மனிதனுகி, அழகிய நாகரிக நடையிற் பயிலுகிருன். கிருது படும் மொழிகள் பேசப் பழகுகின்ருன். உயிர் போலும் தேவிமார்கள் பலருடன் தொடர்பு கொள்ளு கின்ருன். நிலையற்ற உலகியல் வாழ்வினை நிலை உடையது என எண்ணி மயங்குகின்ருன். வீடு வாசலும் மாடகூடங்களும் தேடுகின்ருன்.

பொருள் சேர்ப்பதிற் பேராசை கொண்டு, அணுவளவு தவிடு கூடக் கீழே விழுந்து சிதறிவிடக் கூடாது என்று எண்ணும் இரக்க மற்ற கல்நெஞ்சனய்ப் பரமலோபியாய் மாறு கின்ருன். நூலுக்கு மட்டுமே நுழைய இடந்தரும் ஊசியினைப்போன்று, தன் மனைவி மக்களை மட்டுமே யன்றி, மற்றைப் பிறரெவரையும் தன் பால் அவன் அணுக விடமாட்டான்.

அவிந்து போவதற்கு முன்னர் ஒளிவிட்டு எரியும் சுடர்போல, இனிப் பின்னர்த் தனக்கு நேரக்கூடிய இன்னல்களைப் பற்றி எண்ணுமல், அவன் செருக்குற்று இறுமாந்து நிற்பான். ஓர் ஏழை இரவலனே, அன்றி ஒரு துறவியோ, தன் வீட்டின் முன் வந்து 'சிறிது சோறு போடுங்கள்' என்று கேட்டால், 'அதோ ! மேற்கேயுள்ள வீட்டிற்குப் போய்க் கேள்' 'இதோ ! கிழக்கிலேயுள்ள வீட்டிற்குச் சென்று கேள்' என்று சொல்லி வெருட்டி ஓட்டி விடு வான். அவர்கள் திரும்பிச் செல்லுவதற்கு முன்னரே, திடுதிடு என அவர்களின் எதிரே வேகமாக முடுகிச் சென்று, நாய் போலச் சீறிப் பாய்ந்து மேலே விழுவான்.

பின்னர்ச் சின்னுளில், முன்னே அவன் பல தீய வழிகளிலும் முயன்று சேர்த்த பொருள் வளம் குறைந்து, வறண்டு போகத் தலைப்படு

---

(2) "All the world's a stage,
And all men and women merely players;
They have their exits and their entrances;
And one man in his time plays many parts,
His acts being seven ages."
—AS YOU LIKE IT

(3) "We are such stuff as
Dreams are made on ; and our
Little life is rounded with a sleep."
—THE TEMPEST

கின்றது. நல்லவர்களின் சொற்களை அவன் கேட்பதில்லை. வீணர்களின் பேச்சையே விரும்பி ஏற்று நடக்கின்றான். நீதி நெறிமுறைகள் பற்றியெல்லாம் அவன் நினைப்பதேயில்லை. இறைவனையும் அடியார்களையும் அறவே புறக்கணித்து, வீணர்களுக்கே விரும்பிச் சேவை பூண்டு பாவியாகிப் பழிவழிகளிற் படர்ந்து நிற்பான்.

148716

அதனால் மினுகுமினுகு என்று செழித்துச் சிறந்திருந்த உடம்பு, முழுவதும் வளைந்து கூனாகிவிட, மெலிவுற்று வருந்துவான். 'பாவ புண்ணியங்கள் உண்டு. தீய செயல்கள் புரிந்தால், தீங்குகளே நேரும். மறுபிறவி என்பதொன்று உண்டு. இப்பிறவியிற் செய்த பாவங்களை மறுபிறவிகளில் அனுபவித்தேயாகல் வேண்டும். எனவே இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து நடந்து கொள்ளுதல் நலம்' என்று பெரியவர்கள் யாரேனும் கூறினால் அவர்களை ஏளனம் செய்து இகழ்வான். துறவிகளையும், பெரியவர்களையும், கற்றவர்களையும் வெடுவெடு எனக் கடுமையாகப் பழித்துப் பேசுவான். விலைமகளிரையும், பரத்தையரையும் புணர்ந்து காலங்கழிப்பான்.

இந்நிலையில், அவனுக்கு வறுமை மிகுதிப்படுகின்றது. வருதற்குரிய பொருள்களும் நழுவி விடுகின்றன. வாதநோய், ஊதுகாமாலை, சோகை. மகோதரம், வயிற்றுவலி, புண்கட்டி (படுவன்) முதலிய நோய்கள் பலவும் வந்து, அவனைத் துன்புறுத்துகின்றன. இரண்டு கண்களிலும் பீளை ஒழுகுகின்றது. ஈளை வழவழ என மேலிடுகின்றது. அதனைத் துப்பவும் அவனால் முடியவில்லை. துப்ப முயன்றால், கொழ கொழென ஒழுகி அவன் மேலேயே விழுகின்றது. சதையெல்லாம் வாடி வதங்கி விட்டன. நாடிகள் கணந்தொறும் வேறுபடுகின்றன. அதனால் 'இனி இவன் பிழைப்பது அரிது' என்று மனைவி மனம் மாறுபடுகின்றாள்.

வீட்டில் உள்ளவர்கள் கலக்கம் அடைகின்றார்கள். பெண்களும் குழந்தைகளும் அவனை அருகிற் சென்று காணவும், அருவருப்புக் கொண்டு சீச்சீ என வெறுக்கின்றார்கள். மரணம் நெருங்கிக் கொண்டு இருப்பதற்கு அடையாளமாகத் தேர் வருவது போலவும், குதிரை வருவது போலவும் கனவுக் காட்சிகள் தோன்றுகின்றன. சுடுகாடு 'வா வா' என அழைக்கின்றது. வீடு 'போபோ' எனத் துரத்துகின்றது. இந்நிலையில் இவன் செருக்கு அழிகின்றது. சூழ்ச்சித்திறன் தொலைகின்றது. பேச்சு குழறுகின்றது. விழிகள் செருகுகின்றன. மேல் மூச்சு எழுகின்றது. உயிர் உடலில் ஊசலாடுகின்றது.


உறவினர்கள் 'இவரோடு நம்முடைய வளமும் அற்றுவிடுமே' என்று எண்ணிக் கலங்கிக் கதறியழுகின்றனர். இவனை நம்பியிருந்த மாதர்கள் மோதி மேலே விழுந்து புலம்புகின்றனர். 'என்னுடைய பொருள்' 'என்னுடைய அடிமையாட்கள்' என்று எண்ணிச் செருக்குற்றிருந்த உணர்வு, நிலைதடுமாறி மழுங்கி ஒடுங்கி விடுகின்றது. ஈக்கள் மொலேல் என்று மொய்க்க, வாயை ஆ என்று திறந்துகொண்டு உயிர் நீங்கிப் போகின்றது. இடுகுபறை, சிறுபறை, திமிலை, தவில் முதலிய மேளங்கள், மரணத்தையுணர்த்தும் முறையில் ஒலிக்கின்றன. கடைசியாக இவனுடைய பிணம், பேய்கள் சூழ்கின்ற சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று நெருப்பில் இட்டுப் பொசுக்கப் பெறுகின்றது. இதுதான் நம்முடைய மனித வாழ்வின் நிலை!

"இத்தகைய இழிந்த மனித வாழ்வையும், இதன் அவலமான முடிவையுமே, உன்னுடைய இரண்டு திருவடிகளையும் பரவித் துதிக்கின்ற உன் அடியவர்கள்தாமும் பெறவேண்டும் என்றால், அதனை உலகத்தவர்கள் இகழ மாட்டார்களா? பாசங்களை நாசம் செய்ய வல்ல பெருமானே! நல்வினை தீவினை என்னும் இருவினைகளும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்கவும், இறப்பும் பிறப்பும் அற்று ஒழியவும் ஏகபோகமாய் நீயும் நானுமாய் ஒன்றுபட்டு அழுந்திக் கலக்கும் வண்ணம், மேலான பேரின்ப நிலையை எனக்கு அளித்தருள்வாயாக! திருவிடை மருதூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஏக நாயகனே! லோகநாயகனே! தேவர்கள் பெருமானே!"


முடிவுரை :

என்னும் அரிய இனிய கருத்து அமைய, அருணகிரிநாதப் பெருமான், "அறுகு நுனி பனியனைய" எனத் தொடங்கும் திருவிடை மருதூர்த் திருப்புகழைப் பாடியருளியிருக்கின்றார். இத் திருப்புகழ்ப் பாடலின் சொற்சிறப்பு, சந்தநலம, கருத்துவளம், உருக்கத்திறன், உபதேச மாட்சி, நிலையாமை உணர்வு, இறையருள் விளக்கத்திறன் முதலிய பண்புகள் பலவும் எவருள்ளத்தையும் கவர வல்லன! இதனையும் இதுபோன்ற ஏனைய பல அழகிய திருப்புகழ்ப் பாடல்களையும் பயின்று ஓதி, நாம் அனைவரும் இறைவனை வழிபட்டு நலம்பெற முயலுவோமாக.

—ஆசிரியர்




ஆலய ஊழியர்கள் சங்கத்தின் சார்பில், தமிழ்நாடு தமிழக முதல்வர் மாண்புமிகு
டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்து
அளிக்கப்பெறுதல்.



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்திரு தாயுமானவர் திருக்கோயிலில்
நிகழ்ந்த திருமண மண்டபக் கால்கோள் விழாவில், உள்ளாட்சித்துறை
அமைச்சர் மாண்புமிகு அன்பில் பெ. தர்மலிங்கம் அவர்களும்,
அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பர் அவர்களும்
பிற பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்



சென்னைக் கோடம்பாக்கம் அருள்திரு வடபழநியாண்டவர் திருக்கோயில் நிர்வாக அதிகாரி குடியிருப்பு இல்லத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர், அறநிலைய ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., தமிழவேள் திரு. பி. டி. ராஜன், துணையாணையர் திரு. ஏ. வேங்கடசலம், B.SC., B.L. மற்றும் பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn ) Dept., Madras-34.
Printed at Super Power Press, Madras-1. Editor. N. R. Murugavell, M.A., M.O.L.